
# சாயி மார்க்கம்

ஜனவரி - ஜூலை 2019



இலங்கை ஸ்ரீ சத்திய சாயி சேவா நிறுவனத்தின்

தமிழ் சஞ்சிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



யாழ்ப்பாண நிலையத்தால் பாரதிபுர கிராமத்தில் மனித மேம்பாட்டுக் கல்வி மண்டபம் திறந்து வைக்கப்பட்டது.



வடபிராந்திய நிலைய தலைவர்களுக்கான நிர்வாக பயிற்சி



இரத்த தானம் செப்டம்பர் 2019



வெற்றிலைக் கேணியில் சத்திய சாயி ஒன்றிணைக்கப்பட்ட சேவை



திருகோணமலை நீனாக்கேணியில் இடம்பெற்ற மருத்துவ முகாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் ஸ்ரீ சாயிராம்

# சாயி மார்க்கம்
# Sai Markam


மலர்: 26
இதழ்: 62

ஜனவரி
ஜூலை
2019



**ஆசிரியர்:**
Dr.R.கணேசமூர்த்தி
659, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்
தொ.பே. 021 222 2832 / 5580
Email:moothy1941@yahoo.com

**துணை ஆசிரியர்:**
திரு.S.R. சரவணபவன்
பிள்ளையார் கோவிலடி
தாவடி, கொக்குவில்
தொ.பே - 021 222 5442



இலங்கையில் தனிப்பிரதி ரூபா 100.00
வருடச் சந்தா ரூபா 250.00 (2 பிரதிகள்)

வெளிநாடு:
வருடச் சந்தா 15 அமெரிக்க டொலர்

**சந்தா அனுப்ப வேண்டிய முகவரி**
ஆசிரியர்,
சாயி மார்க்கம்,
659, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

**காசோலை:**
Coordinating Committee Northern Zone
A/C No: 016010004771
**SWIFT CODE: HBLILKLXXXX**
Hatton National Bank
Jaffna, Sri Lanka.


## உள்ளே......


| | |
|---|---|
| இந்துமத ஆராய்ச்சி | 02 |
| இளைஞர் ஆன்மீக ஒதுங்கல் - 2019 | |
| தேசிய இணைப்பாளர் அறிக்கை | 05 |
| திரு.அமேஸ் தேஸ்பண்டே உரை | 08 |
| திரு.சுரோஸ் கோவிந்தன் உரை | 09 |
| திரு.சஞ்சே ஸகானி உரை | 13 |
| கருத்தரங்கம் | 17 |
| கேள்வி - பதில் | 21 |
| என்றும் மறக்க முடியாத கணப்பொழுது | 23 |
| சாயி மாணவன் யார்? | 26 |
| அன்புவார போட்டியில் பரிசு பெற்ற ஆக்கங்கள் 2018 | 27 |
| ஆசைக்கு வரம்பு | 42 |
| மனித மேம்பாட்டுக் கல்வியும் சிறுவர்களும் | 43 |
| பரீட்சையில் சித்தி எய்துவது எப்படி? | 44 |
| பிரசாந்தி வரலாற்று பதிவு 4 | 51 |
| பிராந்திய செய்திகள் | 53 |
| குருபூர்ணிமா செய்தி | 55 |


**ஒரே ஒரு மதம் அது**
**அன்பென்னும் மதம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரிய தலையங்கம்

# இந்து சமயத்தின் ஆரம்ப காலம் இதுதானோ?

உலகில் உள்ள சமயங்களுள் மிகவும் பழைமையான மதங்களில் ஒன்றாக இந்துமதம் போற்றப்பட்டு வருகிறது. இந்துமதம் எப்போது ஆரம்பித்தது, யாரால் ஆரப்பிக்கப்பட்டது என்பதற்கான எந்தவித ஆதாரமும் இல்லை. ஆனால் சிந்து நாகரீகத்தைச் சேர்ந்த மக்கள் பின்பற்றிவந்த மதமாகையால் இது இந்து மதம் என அழைக்கப்பட்டிருக்கலாம் என்ற ஒரு சிந்தனையும் உள்ளது. காலத்திற்குக் காலம் தோன்றிய முனிவர்களும் ரிசிகளும் இந்த மதத்தை வளக்கப்படுத்தி வந்துள்ளனர். இந்து மதத்தின் மிகப் பழைய நூல்களாக வேதங்கள் உள்ளன. வேதங்களுள் மிகவும் பழையது இருக்குவேதம். இதன் காலம் சுமார் 15 000 வருடங்களுக்கு முற்பட்டது என கொள்ளப்படுகிறது. மற்றைய வேதங்கள் காலத்தால் பிந்தியவை.

இந்து மதத்தின் மிகப் பழைமையான மந்திரமாக காயத்திரி மந்திரம் விளங்குகிறது. இந்த காயத்ரி மந்திரம் 4 வேதங்களிலும் புகழப்பட்டுள்ளது. ஆகவே காயத்ரி மந்திரத்தின் காலம் வேதங்களுக்கும் முற்பட்டது எனக் கொள்ளலாம். காயத்திரி மந்திரத்தின் காலம் சுமார் 20, 000 வருடங்களுக்கு முற்பட்டது என சொல்லுவர். காயத்திரி மந்திரத்தை இயற்றியவர் விஸ்வாமித்திர மகரிசி என்பவராவார். இவர் இந்த மந்திரத்தை இராமபிரானுக்கு உபதேசித்தார் என இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. இந்த மந்திரத்தின் சக்தி மிகவும் பெரியது. ஆனால் இது மிகவும் இரகசியமாகவும் புனிதமாகவும் போற்றப்பட்டுவந்தது. இந்த மந்திரத்தை இயற்றிய விஸ்வாமித்திர மகரிசியின் சக்தியும் ஆற்றலும் மிகவும் வியக்கத்தக்கது.

சில வருடங்களுக்கு முன் அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையமாகிய நாசா (NASA) சூரியனை ஆராய்வதற்காக ஒரு செயற்கைக் கோளை அனுப்பியது. அது பல மாதங்கள் பயணித்துச் சென்று சூரியனுக்கு எவ்வளவு சமீபமாக செல்லமுடியுமோ அவ்வளவு சமீபத்திற்கு சென்று அதன் அண்மித்த காட்சிகளையும் விசேட கருவிகள் மூலம் ஒளிப்பதிவு செய்யப்பட்டு சூரியனிலிருந்து வெளிவரும் ஒலிகளையும் பதிவுசெய்து பூமிக்கு அனுப்பியுள்ளது. இந்த ஆராய்ச்சியின் சில பகுதிகளையும் அமெரிக்க விண்வெளி ஆய்வுநிலைய விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். இதில் மிகவும் ஆச்சரியப்படத்தக்க விடயம் என்னவெனில் சூரியனிலிருந்து வெளிவரும் "ஓம்" என்ற சப்தம் வெளிவந்துகொண்டிருக்கிறது என்பதுதான். அத்துடன் சிலகுறிப்புகளையும் அமெரிக்க விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர். சூரியனில் இருந்து வரும் இந்த "ஓம்" என்ற ஒலியானது சுமார் 10 மில்லியன் வருடங்களுக்கு முன்பிருந்தே வெளிவருகிறது எனவும் இந்த "ஓம்" என்பது இந்துக்களின் சின்னம் எனவும் குறித்துள்ளனர். இவற்றை நீங்கள் இணையத்தளத்தில் பார்க்கலாம். Google Browser க்குச் சென்று "NASA ,SUN, OM" என்ற குறிச் சொல்லை தட்டச்சு செய்வதன் மூலம் பார்வையிட முடியும். இந்த ஆராய்ச்சி முடிவு இந்து மதத்தைப் பொறுத்த வரை மிகவும் முக்கியத் துவம் வாய்ந்தது.

சுமார் 20,000 வருடங்களுக்கு முன் விஸ்வாமித்ர மகரிசி இயற்றிய காயத்திரி மந்திரம் "ஓம்" என்பதின் விரிவுதான் என்றும் இந்த பிரபஞ்சம் எவ்வாறு இயக்கப்படுகிறது என்ற விடயத்தை கூறும் மந்திரம்தான் அவருடைய காயத்ரி மந்திரம் எனவும் கொள்ளப்படுகிறது.

ஓம்<br>
பூர் புவ சுவ:<br>
தத் சவிதுர் வரேண்யம்<br>
பர்கோ தேவஸ்ய தீமஹி<br>
தீயோ யோந: பிரசோதயாத்

**கருத்து :**

ஓம் பூர் புவ சுவ: - ஓம் என்ற ஒலிதான் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிலை செய்கிறது.

தத் ஸவிதுர் வரேண்யம் - அந்த சவிதுர் "ஓம்" என்பதற்கு மறுபெயர் வர்ணிக்கமுடியாதது.

பர்கோ தேவஸ்ய - ஒளிக்கதிர்கள் தெய்வீகமானவை

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீமஹி - இதனை தியானிப்போம்.

தீயோ யோந: பிரசோதயாத் - அது எமது புத்தியை பிரகாசமடையச் செய்யட்டும்.

விஸ்வாமித்திர மகரிசி, சுமார் 20, 000 வருடங்களுக்கு முன் தனது ஞான திருஸ்டியினால் சூரியனிலிருந்து வரும் இந்த "ஓம்" என்ற சப்தம் தான் படைத்தல், காத்தல், அழித்தல் என்ற மூன்று தொழிலையும் செய்கிறது எனவும் அதிலிருந்து வரும் "ஓம்" என்ற ஒலி "ஸவிதுர்" என்ற பெயருடன் படைத்தல் தொழிலை செய்கிறது எனவும் அதனை வர்ணிக்க முடியாதது எனவும், பர்கோ ஒளிக்கதிர்கள் தெய்வீகமானது, அதுதான் உலகை காக்கிறது. அது தெய்வீகமானது என்றும் கூறி இந்த உண்மைகளை தியானித்தால் எமது புத்தி பிரகாசமடையும் என்றும் கூறுகிறார்.

தற்போது வெளிவந்த அமெரிக்க விண்வெளி ஆய்வு முடிவுகளுடன் காயத்ரி மந்திரத்தை ஒத்துப் பார்க்கும் போது எமது சமயத்தின் தொன்மை எவ்வளவு விஞ்ஞான பூர்வமானது என்பதையும் எமது ரிசிகள் முனிவர்களின் ஞானதிருஸ்டியையும் வியக்காமல் இருக்கமுடியாது.

காயத்திரி மந்திரத்தின்படி ஒலியும் ஒளியும் சூரியனிலிருந்து வருகிறது. இந்த இரண்டும்தான் இந்த பிரபஞ்சத்தை இயக்குகிறது. இதன் கருத்தை பல தேவாரங்களிலும் கூறப்பட்டுள்ளதை நாம் அவதானிக் கலாம்.

அமெரிக்க விஞ்ஞானிகள் 10 மில்லியன் வருடங்கள் என்று கூறினாலும் சூரியன் எப்போது தோன்றியதோ அப்போதே இந்த ஒலியும் ஆரம்பித்திருக்க வேண்டும்.

பலகோடி வருடங்களுக்கு முன்பாக இந்த பூமியும் மற்றும் எல்லாக் கோள்களும் ஒன்றாக சேர்ந்து ஒரு பிரமாண்டமான கோளாக இருந்தது. அதன் வெப்பம் தாங்கமுடியாமல் வெடித்து சிதறியது. இந்த பெரிய வெடிப்பையே மேல் நாட்டில் "BIG BANG" என்று கூறுவர். வேதத்தில் "ஓம்" என்ற சப்தத்துடன் வெடித்தது என்று கூறப்படுகிறது. இந்த ஓம் சத்தம்தான் பிரபஞ்சத்தின் ஒவ்வொரு அணுவிலும் எதிரொலிக்கிறது என்பது இந்து சமய நம்பிக்கை.

எமது சமய நடைமுறைகளிலும் இந்த சூரிய வழிபாடு முக்கியம் பெறுகின்றது. சூரியன்தான் கண்கண்ட முழு முதற் கடவுள் என்று போற்றி வருகிறோம். சூரியனில் இருந்து ஒலி, ஒளி ஆகிய இரண்டு சக்திகள் வெளிவருகின்றன. இந்த இரண்டு சக்திகளையும் சிவனின் இரண்டு புதல்வர்களாக வணங்கி வருகின்றோம். மூத்தவர் ஓம் என்ற சப்தத்தை அடிப்படையாகக் கொண்ட விநாயகர். இவருடைய சக்தி வர்ணிக்கமுடியாதது. ஆகவேதான் எந்த காரியத்திற்கும் முதன்முதல் விநாயகருக்கு வணக்கம் செலுத்துகிறோம். இளையவரான முருகன் ஒளிக்கடவுள். இவர் ஒளியில் இருந்து தோன்றியவர். இதன் அடிப்படையிலேயே ஆலயங்களில் பூசை நடைபெறும்போது அர்ச்சகர் ஒரு கையிலே மணியும் ஒருகையில் தீபமும் வைத்து பூசை செய்வதை அவதானிக்கலாம். ஒலியும் ஒளியும் சேர்ந்து தான் படைத்தல் தொழிலை செய்ய முடியும்.

காயத்ரி மந்திரம் இப்பிரபஞ்ச இயக்கத்தை விளக்கும் ஒரு சூத்திரம் (Formula)

இதற்கு உதாரணமாக புட்டபர்த்தியில் நடந்த ஒரு சம்பவத்தை குறிப்பிடலாம். ஒருமுறை சுவாமி காயத்திரி மந்திரம் சொல்லும்போது அவருடைய மாணவர்கள் சிலர் சுவாமி எத்தனை கட்டை சுருதியில் காயத்திரி மந்திரத்தை சொல்கிறார் என்பதை அறிய அதற்கு சுருதி பிடித்தனர். 6 கட்டை சுருதியில் மேலும் கீழும் போய்கொண்டிருந்தது. நிலையாக ஒரு சுருதியில் இல்லை. ஆகவே அவர்கள் சுவாமி சுருதியைக் கவனிப்பதில்லை என்ற முடிவுக்கு வந்தனர். சில நாள்களின்பின் சுவாமியுடன் பேசும் சந்தர்ப்பம் கிடைத்தபோது இதுபற்றி கேட்டனர். சுவாமி அப்போது "அது படைப்பின் ஒலி" என்று கூறிச் சென்றார். இதுவும் அவர்களுக்கு விளங்கவில்லை. தற்போது அமெரிக்க விண்வெளிநிலையம் வெளியிட்ட சூரியனிலிருந்து வரும் "ஓம்" சத்தத்திற்கு சுருதி பிடித்துப் பார்த்தபோது அது சுவாமியின் காயத்ரி ஒலியுடன் ஒத்துப்போனதை அறிந்தனர். ஆகவே சூரியனில் "ஓம்" ஒலிதான் படைப்பின் ஒலி என்பதை நாமும் விளங்கிக் கொள்ளலாம்.

சூரியனில் இருந்து வெளிவரும் "ஓம்" என்ற ஒலி பூமிக்கு வரமுடியாது. ஏனெனில் சூரியனுக்கும் பூமிக்கும் இடையே

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ள இலட்சக்கணக்கான மைல் வெற்றிடம் காரணமாகும். ஆனால் இந்த ஒலி அதிக வெப்பத்தாலோ அல்லது அதிகூடிய ஒளியினாலோ மாற்றமடைந்து சூரிய வெளிச்சத்தில் இருந்து வருவதாக ஊகிக்கலாம்.

ஏனெனில் சாதாரண மின்வெளிச்சத்தில் தாவரங்கள் பச்சயம் தயாரிப்பதில்லை. சூரிய வெளிச்சத்தில் மட்டுமே தாவரம் பச்சயம் தயாரிக்கிறது. ஆகவே சூரிய வெளிச்சத்தில் இந்த படைப்புச் சக்தியான "ஓம்" கலந்துள்ளது எனக் கொள்ளலாம். இது ஆய்வுக்கு உட்பட்ட விடயம்.

எமது சமயக் கிரியைகளில் ஒலி, ஒளி ஆகிய இரண்டிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இவை இல்லாத கிரியைகளே இல்லை எனலாம். ஆலயங்களில் அர்ச்சகர் தீபாராதனை செய்யும் போது ஒருகையில் மணியும் ஒருகையில் தீபமும் வைத்து தீபாராதனை செய்வதைப் பார்க்கலாம். இதுதான் படைப்பின் இரகசியம். காயத்திரி மந்திரம் போதித்தது.

நாம் எழுத ஆரம்பிக்கும்போது பிள்ளையார் சுழி போடுவது வழக்கம். பிள்ளையார் சுழியை ஆராய்ந்து பார்த்தால் இங்கும் ஒலி, ஒளி கூட்டுறவைக் காணலாம். ஒலி அலை அலையாகச் செல்லும். ஒளி நேர்கோட்டில் செல்லும். பிள்ளையார் சுழியின் முதலில் ஒரு அலை "ெ" பின்னர் ஒரு நேர்கோடு " ----" இரண்டையும் சேர்க்கும்போது "உ" பிள்ளையார் சுழியாகின்றது.

ஆகவே அமெரிக்க விண்வெளி ஆய்வு நிலையம் கண்டுபிடித்த சூரியனின் "ஓம்" என்ற ஒலி புதிய பல சிந்தனைகளுக்கு ஆதாரமாகி இந்து சமயத் தொடக்கத்தையே ஊகிக்க வழிவகுத்துள்ளது. "BIG BANG" வெடிப்பு "ஓம்" சத்தம் காயத்ரி மந்திரப் பொருள் ஆகியவற்றை இணைத்துப் பார்க்கும்போது இந்து சமயத்தின் தொன்மையை பல கோடி ஆண்டுகளுக்கு முன் சிந்திக்கத் தொடங்கி படிப்படியாக வளர்ந்து வந்துள்ளது எனக் கொள்ளலாம்.

காயத்ரி மந்திரத்தில் கூறப்பட்ட இந்த ஓங்கார விளக்கத்தை திருவள்ளுவரும் திருக்குறளில் கூறியுள்ளார் என்பது கவனிக்கத்தக்கது. முதலாவது திருக்குறள் கடவுள் வாழ்த்து. இதில் காயத்ரி மந்திரத்தின் கருத்தையே திருவள்ளுவரும் வலியுறுத்துகின்றார்.

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு'.


இதற்கு பரிமேலழகர் கூறியுள்ள கருத்து 'அ' கரத்தை முதலாகக் கொண்டது தமிழ் எழுத்துக்கள். அதுபோல ஆதி பகவனாகிய இறைவனை முதலாகக் கொண்டது இந்த உலகம் என்பதாகும். ஆனால் புதிய சிந்தனையின் படி

'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி (அ+உ+ம்=ஓம்).

அந்த ஆதியும் சூரியபகவனும் (ஒளி) முதலாகக் கொண்டது இந்த உலகம்.

ஆகவே திருவள்ளுவர் திருக்குறளை இயற்றும் போது கடவுள் வாழ்த்தாக காயத்ரி மந்திரத்தின் உட்பொருளை நினைவு கூர்ந்து ஆரம்பித்துள்ளார் என்பது கவனிக்கத் தக்கது.

துணைஆசிரியர்
S.R.சரவணபவன்



FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2019 Faithlift இளைஞர் மாநாட்டின் அறிக்கை

## (மே மாதம் 14 இலிருந்து 17ஆம் திகதி வரை நடைபெற்றது)

Faithlift இளைஞர் மாநாடானது Zone 4A மற்றும் Zone 4B நாடுகளால் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தது. இந்த மாநாடானது இந்தியாவில் ஆந்திரா மாநிலத்தில் புட்டபர்த்தியில் உள்ள சுவாமியின் ஆச்சிரமமான பிரசாந்தி நிலையத் திலும் சத்திய சாயி உயர்கல்வி நிறுவனத்திலும் மே மாதம் 14ஆம் திகதி தொடக்கம் 17ஆம் திகதி வரை பல்வேறுபட்ட நாடுகளிலிருந்து 300 இளைஞர் யுவதிகளுடன் **"ஆதி மூலமே என்னை இயக்கும் சக்தியாகட்டும்"** எனும் தொனிப் பொருளில் நடைபெற்றது. ஆன்மீக சாதனைமூலம் சுவாமியுடனான தொடர்பை வலுப்படுத்தவும் இளைஞர்கள் அன்றாட வாழ்வில் சந்திக்கும் சவால்களை திறமை யாகவும் சமயோசிதமாகவும் எதிர் கொள்ளும் மனப்பக்குவத்தை ஏற்படுத்தும் முகமாகவும் ஒழுங்கு படுத்தப்பட்டிருந்தது.

இம்மாநாட்டில் வேறுபட்ட ஆன்மீக செயற்பாட்டு நிகழ்வுகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன. பல் வேறுபட்ட மொழிகளிலான இசை நிகழ்ச்சிகள், ஆன்மீக வளவாளர் களின் அமர்வுகள், வெவ் வேறான பயிற்சிப் பட்டறைகள், குழாம் கலந்துரையாடல்கள் என்பன காலை நேர நிகழ்வுகளாகவும் ஒவ்வொரு நாடுகளும் தமது கலாச்சாரத்தை பிரதி நிதித்துவப் படுத்தும் முகமாக கலாச்சார நிகழ்வுகளும் கண்காட்சி நிகழ்வுகளும் ஒழுங்கு செய்யப் பட்டிருந்தன.

முதல்நாள் நிகழ்வுகளில் இளைஞர்களின் வேதபாராயண ஊர்வலம், Zone 4A மற்றும் Zone 4B நாடுகளின் கலாச்சார உடைகளுடன் கூடிய கொடி ஏந்தல், வேறுபட்ட மொழிகளிலான இசைநிகழ்வு மற்றும் பஜனை பாடல்களுடன் ஆரம்பமானது. அதன்பின் மாலை நேர நிகழ்வாக ஒவ்வொரு நாடுகளும் தமது கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக கலாச்சார நிகழ்வுகள் இலங்கை, நேபாளம், இந்தோனேசியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளால் முன்வைக்கப்பட்டன. இதில் இலங்கை தனது கலாச்சார நிகழ்வாக காவடி நடனத்தை முன்வைத்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன் கலாச்சாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் முகமாக கண்காட்சி நிகழ்வுகளும் முன்வைக்கப்பட்டிருந்தன.

இரண்டாம் நாள் நிகழ்வுகளில் டாக்டர் சுரேஸ் கோவிந்தன் அவர்களால் சுவாமியின் அமுதவாக்கில் ஒன்றான 4F இன் இரண்டாவது நிலையான **சவால்களுக்கு முகங்கொடுத்தல்** என்பது தொடர்பாக தனது கருத்தினை மிகவும் ரம்மியமான முறையிலும் சிறந்த உதாரணங்களுடன் முன்வைத்திருந்தார். அதனைத் தொடர்ந்து சுவாமியின் 4F அமுதவாக்கை அடிப்படையாகக் கொண்ட செயற்பாட்டுப் பட்டறையும் இடம்பெற்றது. அதன்பின் மாலைநேர நிகழ்வாக புதிர்போட்டிகள் நடத்தப்பட்டன. அதில் Zone 4A மற்றும் Zone 4B நாடுகளின் இளைஞர் குழுக்களாக பங்குபற்றியிருந்தனர்.

மூன்றாம் நாள் நிகழ்வுகளில் சகோதரர் அமே தேசபாண்டே அவர்கள் சுவாமியின் அமுதவாக்கின் ஒன்றான 4F இன் மூன்றாவது நான்காவது நிலைகள் **சவால்களுடன் போராடு** மற்றும் **வெற்றிகரமாக முன்னெடு** என்பன தொடர்பாக கருத்தினை முன்வைத்திருந்தார். அதனைத் தொடர்ந்து ஒவ்வொரு நாடுகளினதும் சேவைகள் தொடர்பாகவும் தாம் முன்னெடுக்கும் செயற்பாடுகள் தொடர்பாகவும் பயிற்சிப்பட்டறைகள் நடாத்தப்பட்டன. அவ்வாறு நிகழ்த்தப்பட்ட பயிற்சிப் பட்டறைகளில் முன்னெடுக்கப்பட்ட தீர்மானங்களும் ஒவ்வொரு நாடுகளினதும் தேசிய இளைஞர் இணைப்பாளர்களால் சிறந்த முறையில் முன்வைக்கப்பட்டன. அதில் SAILENS நிகழ்வானது ஒரு செயற்பாட்டு நிகழ்வாக அதாவது முத்துக்கோர்த்தல், நிறம் தீட்டுதல் போன்ற செயற்பாடுகள் சுவாமியின் நாமத்தை உச்சரித்தவாறோ அல்லது சுவாமியை மனதில் இருத்தியவாறோ முன்வைத்தலாக அமைந்தது. அதனைத் தொடர்ந்து 'Appointment with Sai' நிகழ்வானது வலயம் 4B இற்குரிய இளைஞர் இணைப்பாளர் டாக்டர் ஜொ. சத்யா ராவோ அவர்களால் இளைஞர்களை சுவாமியுடன் இணைக்கும் முகமாக தியானத்துடன்

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்வைக்கப்பட்டது. இந் நிகழ்வின் இறுதியில் இளைஞர்கள் கடிதங்களை எழுதி சுவாமியின் பாதத்திற்கு முன்வைத்தார்கள்.

அதன்பின் இறுதிநாள் நிகழ்வுகளாக Zonolympics எனும் விளையாட்டு நிகழ்வு சுவாமியின் உள்ளரங்க விளையாட்டரங்கத்தில் நடைபெற்றது. இதில் பல்வேறுபட்ட நாட்டு இளைஞர்கள் கரப்பந்தாட்டம், வலைப்பந்து, பூப்பந்தாட்டம் என்பனவற்றில் பங்கேற்றனர். இதில் வெற்றி பெற்ற அணியினருக்கு பதக்கங்களும் வழங்கப்பட்டன. பின் மாலைநேர நிகழ்வுகளாக Zone 4A, Zone 4B இளைஞர் இணைப்பாளர்களான டாக்டர் ஜெ. தனேஸ்குமார் மற்றும் டாக்டர் ஜொ. சத்யா ராவோ அவர்களால் முடிவுரையும் இளைஞர்களால் நாடகமும் முன்வைக்கப்பட்டு அனைத்து நிகழ்வுகளும் மங்கள ஆரத்தியுடன் இனிதே நிறைவுபெற்றன.

Dr. J. தனேஸ்குமார்
தேசிய இளைஞர் இணைப்பாளர்.

பிரசாந்தி நிலையத்தில் இளைஞர்களின் ஆன்மீக ஒதுங்கல் மே மாதம் 14, 15, ஆம் திகதிகளில் 2019ஆம் ஆண்டு நிகழ்ந்தது. அங்கு நிகழ்த்தப்பட்ட உரைகள் கலந்துரையாடல்கள் ஆகியன இங்கு தமிழில் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

**ஸ்ரீ** R.J. **இரத்னாகர்** அவர்களின் உரை

(இவர் சுவாமியின் தம்பியாராகிய திரு. ஜானகி ராமையா அவர்களின் புத்திரராவார். அவர் சுவாமியின் பாடசாலையிலும் பல்கலைக்கழகத்திலும் கல்வி பயின்றார். 1991ஆம் ஆண்டு MBA பட்டம் பெற்றார். ஈஸ்வரம்மா பாடசாலையின் பணிப்பாளராகவும் 2010 இலிருந்து சத்தியசாயி அறக்கட்டளை அங்கத்தவராகவும் பணியாற்றுகிறார்.)



இன்று வியக்கத்தக்க நாள்! இளைஞர்கள் கூட்டத்தைக் கண்டு மகிழ்ச்சி அடைகிறேன். பகவான் இளைஞர்களைக் கட்டி எழுப்புவதிலே ஆர்வம் காட்டுபவர். சாயியின் பணி, பல வகையான சேவை செய்வதல்ல. அவரின் பணி எங்கள் ஒவ்வொரு வரையும் தெய்வீக நிலைக்கு உயர்த்துவதேயாகும். இதற்காகப் பல வழிகளையும் தந்துள்ளார். நாம் எமக்குப் பிடித்ததை எடுத்துக் கொள்ளலாம். உதாரணமாக தியானம், ஆழ்ந்த விசாரணை, சேவை ஆகியனவாகும். அவர் அன்புக்கும் சேவைக்கும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார். ஆகவே தான் மகா சமாதியில் "அனைவரையும் நேசி அனைவருக்கும் சேவை செய்" என்ற போதனை பொறிக்கப் பட்டுள்ளது. அவர் முழுநேரத்தையும் எங்களுக்காகவே பயன் படுத்தியுள்ளார். நாங்கள் போடும் உடுப்புக்களிலும் எமது பாவனைகள் அனைத்திலும் எண்ணுக் கடங்காதவர்களின் சேவை கலந்துள்ளது. ஆகவே நாம் சேவை செய்வது எமது கடப்பாடாகும். ஒருமுறை 91 வயதான முதிய பக்தன் டில்லியில் வசிப்பவர். என்னை இராப் போசனத்திற்கு அழைத்திருந்தார். அவர் துறவிபோல் தனிமையாக வாழ்ந்தார். அவரிடம் முதன்முறை எப்படி புட்டபர்த்தியை அடைந்தீர்களெனக் கேட்டேன். இது 1959 அல்லது 1960 இல் நடந்துள்ளது. பங்களூரிலிருந்து 5 மணித் தியாலங்கள் காரில் சென்றோம். மந்திரும் ஒரு அறையும் தான் மலசல கூடத்துடன் இருந்தது. தரிசனத்தின் போது சுவாமி என் பக்கம் பார்க்கவேயில்லை. எனது அருகாமையில் அமெரிக்காவிலிருந்து வந்த கிறிஸ்தவப் பாதிரியார் இருந்தார். ஏன் வந்தீர்களெனக் கேட்ட பொழுது தெய்வீக மகான் ஒருவரைச் சந்திக்க வேண்டுமென்ற அவாவினால் வந்ததாகச் சொன்னார். சுவாமி அந்தப் பாதிரியாரை நேர்காணலுக்கு அழைத்து சிலநேரம் பேசி அனுப்பினார். அவர் வெளியே வந்ததும் "சுவாமியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?" எனக் கேட்டேன்.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் மௌனமாக இருந்தார். திரும்பக் கேட்டேன். "எங்களின் கண்ணால் பார்க்க முடிந்த ஒரு தெய்வீக மகான்" எனக் கூறினார். அவருக்கு என்னைப் பற்றி எல்லாம் தெரிந்திருந்தது. எத்தனையோ தடவைகள் ஆபத்திலிருந்து காப்பாற்றிய நிகழ்வுகளைச் சொன்னார். "மதங்களை ஒப்பிட்டுப் பார்க்காதே" என்றும் சொன்னார். பாதிரியார் மதங்களைப் பற்றி ஆய்வு செய்து இரண்டு கலாநிதிப் பட்டங்களையும் பெற்றுள்ளார். அவரின் பகுதியே நாங்கள் என்று பாதிரியார் கூறி முடித்தார்.

எத்தனை பேர் முதற் தடவையாக வந்துள்ளீர்கள்? பிரசாந்தி நிலையத்தில் சுவாமியின் அழைப்பின்றி ஒருவரும் கால்வைக்க முடியாது. எல்லோரும் ஆறுதலாக மகிழ்ச்சியாக இருங்கள். சுவாமியிடத்தில் அன்புதான் ஒரேயொரு தொடர் பாடல் ஊடகமாகும். யேசு நாதர், சுவாமி விவேகானந்தர், ஆதி சங்கரர் ஆகிய மகான்கள் சிறு வயதிலேயே இறைபணியாற்றத் தொடங்கினார்கள். நீங்களும் இள வயதில் தொடங்கியிருப்பது மிகவும் அதிர்ஷ்டமானதே ஆகும். உங்களின் இந்த நிகழ்வு வியக்கத்தக்கது.

ஒருமுறை ஹாரவாட் (Harward USA) பேராசிரியரைச் சந்தித்தேன். 25 வருடங்களில் 6 முறைகள் இந்தியாவிற்கு வந்து ஆன்மீகக் குருவைத் தேடியதாகவும் கடைசியாக பாபாவிடம் வந்ததாகவும் சொன்னார். பாபாவிடம் ஏன் தன்னை முதலிலேயே அழைக்கவில்லை என்றும் 20 வருடங்கள் வீணாகிப் போய்விட்டதே என்றும் கேட்டார். சுவாமி, "அந்த நீண்ட பயணத்தின் பலனே உன்னை இங்கு, இப்போது கொண்டு வந்துள்ளது" என்று சொன்னார். ஒரு வாக்கியம் உண்டு. "எரிபொருள் எரிந்தாலும் பல மைல் தூரத்தைக் கடந்துள்ளோம்" என்பதேயாகும். நீங்கள் உங்களின் கடின முயற்சியாலும் முற்பிறவிப் பயனாலும் இளவயதில் வந்து விட்டீர்கள். எந்த தொழிலையும் உன்னதமாகச் செய்வதற்கு கடின உழைப்பு அவசியம். அந்தக் கடின உழைப்புத்தான் சாதனை. இந்த அகப் பயணத்திற்கு இளமையில் தொடங்குவதே சாலச்சிறந்தது.

சுவாமி எங்களுக்குப் பலவிதமாகப் படிப்பினைகளைத் தந்துள்ளார். ஒருமுறை என்னுடன் 14 மாணவர்களை பங்களூர் பட்டினத்தைச் சுற்றிப்பார்த்து மதிய உணவும் உண்டு வரும்படி கூறி காரும், 500 ரூபாயும் தந்து அனுப்பினார். திரும்பியதும் எப்படிப் பயணம்? சுற்றுலா? என்று கேட்டு எங்கே சாப்பிட்டீர்கள் எனவும் கேட்டார். சாப்பாட்டிற்கு எவ்வளவு செலவழித்தீர்கள்? 450 ரூபாய் எனச் சொன்னோம். எங்களுடைய கன்ரீனில் ஒரு சாப்பாடு என்ன விலை என்று கேட்க இரண்டு ரூபாய் எனச் சொன்னோம். 15பேர் சாப்பிட்ட பணத்தில் கன்ரீனில் 125 பேர்கள் சாப்பிடலாம் இல்லையா? என்று கேட்டு பணத்தை, உணவை ஒரு போதும் வீணாக்கப்படாது என்றும் சொன்னார். எங்களது பிறந்தநாளின் போது கிண்ணத்தில் மஞ்சள் அரிசி கொண்டு போனால் ஏன் சின்னக் கிண்ணத்தில் சிறிதளவு அரிசி கொண்டு வந்தால் போதுமே என்று அறிவுறுத்துவார். இது கஞ்சத்தனமல்ல. இது பொறுப்பான உணர்வைக் குறிக்கிறது. உலக அமைதியைப் பற்றி பேச வேண்டாம். தனிநபர் அமைதியே முக்கியம். இதிலிருந்தே குடும்ப அமைதி, சமுதாய அமைதி, இன அமைதி, தேசிய அமைதி, உலக அமைதி நிலவும். எதுவும் தனிநபரிலிருந்தே தொடங்க வேண்டும். சுவாமி இரண்டு இருக்க வேண்டுமென்று சொன்னார். அவையாவன: தளராத நம்பிக்கை, நிபந்தனையற்ற அன்பு என்பனவேயாகும். தனிநபர் மகிழ்ச்சியாக இருந்தால் ஏனையோரும் மகிழ்ச்சியாக இருப்பார்கள். ஒருவர் திருந்தினால் உலகிற்கு ஒரு கவலை குறைந்து விடும். எம்மை உன்னதமாக மாற்றிக் கொள்ள வேண்டும். உலகில் நாம் பார்ப்பதெல்லாம் எம் மனதில் எழுகின்ற எதிர்வினை, எதிரொலி, பிரதிபலிப்பேயாகும். வெளியே குறையைக் கண்டால் அக்குறை எமக்குள்ளே இருக்கிறதென்பதே உண்மை. கிருஸ்ண பரமாத்மா ஒருமுறை தர்மரைக் கூப்பிட்டு கெட்டவர்கள் உள்ளார்களா எனப் பார்த்து வரச் சொன்னார். கெட்டவர்கள் ஒருவரும் இல்லையென்றே தருமர் பார்த்து வந்து சொன்னார். கிருஸ்ண பரமாத்மா, துரியோதனனைக் கூப்பிட்டு நல்லவர்கள் உள்ளார்களா என்று பார்த்து வரச் சொன்னார். அவர் பார்த்து விட்டு வந்து நல்லவர்கள் ஒருவரும் இல்லை என்று சொன்னார். உலகமே எமது மனதின் வெளிப்பாடே என்று உணரவேண்டும்.

நீங்கள் இளம் வயதிலேயே புனிதமான இடத்திற்கு வந்து விட்டீர்கள். சுவாமி எங்களுக்கு விசுவாசத்தையும் நம்பிக்கையையும் தருபவர். பிரச்சினை இல்லாத வாழ்வேயில்லை. அலையில்லாத சமுத்திரமுமில்லை. எல்லாவற்றையும் ஏற்றுக்

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வாழ்க்கையை நடாத்தவேண்டும்.

பாபாவின் ஆசீர்வாதம் உங்களுக்குண்டு. இலாபம் நட்டத்தைப் பற்றிக் கவலை வேண்டாம். இப்போது தெரியா விட்டாலும் பின்வரும் காலங்களில் இந்த நிகழ்வின் முக்கியத்துவத்தைப் பற்றி உணர்வீர்கள்.

அகநோக்கைத் தீவிரப்படுத்தவே மக்கள் இங்கு வருவார்கள். சுவாமி "நீ உலகில் செய்வதெல்லாவற்றையும் ஆன்மீக மயமாக்கு" என்பதையே வேண்டுகிறார். அவர் எப்போதும் எங்களை ஊக்குவிப்பார்.


இங்கே கற்றதை வாழ்க்கையில் பின்பற்ற வேண்டும். ஏதாவது ஒன்றை ஒருபோதும் கைவிடாது பின்பற்றத் தொடங்க வேண்டும்.

சுவாமியிடம் நம்பிக்கை வைத்து அவரையே குருவாகக் கொள்ள வேண்டும். அவரை சிநேகிதனாகவும் கொள்ளலாம். சுவாமியின் ஆசி எப்போதும் உண்டு.

ஜெய் சாயிராம்

**டாக்டர் அமே தேஸ்பண்டே நிகழ்த்திய உரை**

(இவர் சுவாமியின் பாடசாலையில் (1989 - 1993) படித்து பல்கலைக்கழகத்தில் 2016 இல் கலாநிதிப் பட்டத்தையும் பெற்றார். 1999 - 2003 பகுதியில் பிருந்தாவன பஜனைக் குழுவில் இருந்தார். நாடக நிகழ்வுகளில் பங்குபற்றினார். இப்போது பிரசாந்தி பஜனைக் குழுவில் இருக்கிறார். அத்துடன் சத்திய சாயி மனித விழுமிய நிலையத்தில் ஆய்வாளராகக் கடமை புரிகிறார்.)



**குருவைப் பின்பற்றுதல் (Follow the Master)**

சுவாமியின் பொற்கமலப் பாதங்களில் எனது அன்பான சமர்ப்பணங்கள். அவரின் ஆசியை வேண்டுகிறேன். உங்கள் எல்லோருக்கும் அன்பான சாயிராம். காலையில் நிகழ்ந்த சர்வதேச இசை நிகழ்வு நன்றாக இருந்தது. எமது மையக் கருத்து "நம்பிக்கையை உயர்த்து" என்பதே யாகும். சுவாமி, "உனக்கு நம்பிக்கை யிருக்க வேண்டும். அல்லது இல்லாமல் இருக்க வேண்டும். இடையில் ஒன்றுமில்லை. என்று கூறியுள்ளார். நம்பிக்கையை உயர்த்துவது என்றால் என்ன? விஞ்ஞானம் படித்தவர்களுக்கு இழுவைக்கு அப்பால் செல்லும் வேகம் இருக்கிறதென்பது (Escape velocity) விளங்கும். பூமியின் இழுவையைத் தப்பிச் செல்ல 11.18 Km/விநாடி வேகம் தேவை. கோள்கள் நிர்ணயிக்கபட்ட வட்டத்திலேயே நகர்ந்து செல்லும். இந்த நிர்ணயிக்கப்பட்ட பாதை யிலிருந்து விலகினால்தான் நாம் விண்வெளியில் பயணிக்கலாம். இந்த வழக்கமான சுழல் வட்டத்தி லிருந்து என்னை புதிய வட்டத்திற்கு தள்ளிவிடும்படி சுவாமியை வேண்டு வோம். நாங்கள் எல்லோரும் அதிர்ஷ்டசாலிகளே!. நாங்கள் சாயி மாணவராக இருக்க எவ்வளவு ஆசைப்படுவோம்? நீங்கள் இந்தக் கேட்போர் கூடத்தில் நிகழ்வை நடத்துவதன் மூலம் எல்லோரும் சாயி மாணவர்களாகி விட்டீர்கள். ஆகவே இன்றிலிருந்து வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். ஒருமுறை பங்களூரில் த்ரையி பிருந்தாவன நிகழ்வின் போது நடந்தது. மாணவர் கள் "சுவாமி உங்களை மிகவும் நேசிக்கிறோம்" (We love you Swami) என்று பாடுவது வழக்கம். சுவாமி "எனது மாணவர்கள் என்மீது அன்பில்லை. அவர்களுக்கு என்மீது விருப்பம்தான் உள்ளது" என்று கூறி அன்பிற்கும் விருப்பத்திற்கும் (Love Like) உள்ள வித்தியாசம் என்ன என்று கேட்டார். சுவாமியே விளக்கம் கொடுத்தார். வீட்டில் செல்லப் பிராணி

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

இருக்கிறதல்லவா? அத்துடன் விளை யாடுவீர்கள். அதோடு எல்லா நேரமும் இருப்பீர்களா? எங்கும் கொண்டு செல்வீர்களா? முடியாது. சுவாமியின் மீதும் விருப்பம் தான். எனக்கு பூசை செய்வீர்கள். என்னைச் சுற்றி இருப்பீர்கள். என்னை எந்தநேரமும் சிந்திக்கிறீர்களா? போகும் இட மெல்லாம் என்னுடன் இருக்கிறீர்களா? மற்றவர்களில் என்னைக் காணுகிறீர்களா? இல்லை. ஆகவே என்மீது விருப்பம் மட்டும் தான். அன்பு இல்லை என்று விளக்கினார். அன்பு இருந்தால் அவரை எப்போதும் பின் பற்றுவோம். இதுதான் **"குருவைப் பின்பற்றல்"** என்பதாகும். சுவாமி.

Follow a Master
Follow some Master
Follow any Master

எந்தக் குருவையும் பின்பற்று என்று சொல்லவில்லை. Follow The Master அவர் உண்மையான சிறந்த குருவைப் பின்பற்ற வேண்டு மென்றே சொல்லியுள்ளார். ஒரு சிறந்த குருவிற்கு என்ன தகைமை கள் இருக்கவேண்டும் என்று சிந்திப்போம்.

- எந்நேரமும் இருக்க வேண்டும். எந் நேரமும் கூப்பிட்டால் வர வேண்டும்.
- எல்லாம் அறிந்தவராக இருக்க வேண்டும்.
- எல்லாம் வல்லவராக இருக்க வேண்டும்.
- என்னுடன் எல்லா நேரமும் நெருக்க மாக இருக்க வேண்டும்.
- எனது நலனிலே அவர் எப்போதும் கரிசனையாக இருக்கவேண்டும்.

சுவாமி பௌதீக உடலை விட்டபடியால் யாரைக் குருவாக ஏற்பது? Google, முகநூல் என்பவற்றை ஏற்கலாமா? இவைகளுக்கு எங்கள் நலனில் கரிசனை இல்லையே. ஆகவே ஆன்மீகப் பயணத்தில் அகப் பார்வையே எமது முதற்படியாக வேண்டும். ஆகவே என்னையே குருவாக எடுக்கலாமா? இதற்கு நான் யார் என்பதை அறியவேண்டும். எங்களது மனமா? அல்லது ஆத்மாவா? எவ்வாறு தெரிந்து கொள்வது? எல்லாம் வல்லது எது?

நான் யார்? எனது உடம்பிற்கு கொடுத்த பெயரா? பெயர் பிறந்ததற்கு பின்பு தான் கொடுக்கப்பட்டது. கனவு நிலையில் நாம் பல்வேறு பாத்திரங்களை ஏற்று நடிக்கிறோம். கனவில் இருப்பதும் நானல்ல. ஆழ்ந்த துயிலில் இருப்பவர் யார்? கனவிலும் ஆழ்ந்த துயிலிலும் விழிப்பிலும் இருந்தவர் யார்? **அதுதான் எமது உண்மையான நான்.** இதை நெருப்பாலோ நீரினாலோ அழிக்கமுடியாதென்று பகவத்கீதையில் சொல்லப் பட்டுள்ளது. எமக்கு குரல் கேட்டால் அது மனமா அல்லது ஆத்மாவா என்று எப்படி அறிவது?

- மனதின் குரல் சத்தமாகச் கீச்சிடும் ஆத்மாவின் குரல் மென்மையாக ஆழமாக இருக்கும்.
- மனதின் குரல் குறுகிய கால நன்மையையே நோக்கும். ஆத்மாவின் குரல் நீண்டகால நன்மையையே நோக்கும்.
- மனதின் குரலில் தன்னலம் இருக்கும். ஆத்மாவின் குரலில் தன்னலம் இருக்காது.
- மனதின் குரலில் தேர்வுகள் தரப்படும். ஆத்மாவின் குரலில் ஒரேயொரு உண்மையான வார்த்தைதானிருக்கும்

உதாரணமாக, பரீட்சைக்குத் தயார் செய்யும்போது மனம் பல்வேறு திசைகளில் திருப்பத் தெண்டிக்கும். ஆத்மாவோ படிப்பிலேயே கவனத்தைச் செலுத்தச் சொல்லும். இதுவே எமது மனசாட்சி (Conscience) இது பிழையான வழியில் இட்டுச் செல்லாது. மனதினால் துன்பமும் குற்றவுணர்வுமே ஏற்படும். மனம் குழப்பத்தையே உண்டுபண்ணும். மனசாட்சி சாந்தத்தையே அளிக்கும்.

எதைச் செய்தாலும் சரியென்று உணர்ந்தால் அதையே முழுமையாகச் செய்யவேண்டும். பிரார்த்தனை செய்யும்போது பிரார்த்தனையையே செய்யவேண்டும். படிக்கும்போது படிப்பதிலேயே கவனம் இருக்கவேண்டும். விளையாடும்போது விளையாட்டிலேயே கவனம் இருக்கவேண்டும்.

நாம் குருவை உணர்வதற்கு 3 SSS ஐப் பின்பற்றவேண்டும். ஸ்ரீ சத்திய சாயி எப்போதும் yes yes yes என்று சொல்வார். இதை வலுப்படுத்துவதற்கு காலையில் 5 நிமிடங்களாவது அமைதி பேணவேண்டும். **(Silent Sitting)** **இதுதான் முதலாவது S**

அப்பிள் நிறுவனத்தின் தலைவர் ஸ்ரீவ் யொப் (Steve Job) 2005 ஆண்டு பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் கூறினார்.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"இன்றைய நாள்தான் கடைசி நாளாகில் செய்வது சரியா என்ற கேள்விக்கு சரி என்றால், அது சரியாகவே இருக்கும்"**

**"இது கடைசி நாளென்றால் இதை செய்வேனா என்று சிந்திக்கவேண்டும்"** என்றும் சொன்னார்.

**இரண்டாவது S சாயி இலக்கியத்தைப் படித்தல்**

சிந்தனைச் சங்கடம் ஏற்பட்டால் ஏதாவது சாயி புத்தகத்தையோ அல்லது அருளுரையையோ எடுத்துத் திறந்தால் பிரச்சினைக்குரிய பதில் அதில் இருக்கும்.

**மூன்றாவது S சுய மதிப்பீடு (Self Audit)**

நான் மூன்று விதமாக கணிப்பீடு செய்யப்படுகின்றேன்.

எனது தேகத்தை மையமாக்கி நான் யார் என்று கணிப்பது. எனது பெயர், தொழில், அந்தஸ்து, குடும்பநிலை ஆகியன.

எனது மனத்தை வைத்து மற்றவர்கள் நான் யார், என்று கணிப்பீடு செய்வது. இதில் எனது சொல், செயல், நடத்தை எல்லாம் அடங்கும்.

மேல் இரண்டிற்கும் அப்பால் ஆத்மாவே நான்தான் என்பது சத்தியம். இதனால் ஆத்மாவையே அல்லது மனச்சாட்சியையே குருவாகக் கொள்ளவேண்டும். புத்தி, புலன்கள், 6உள் எதிரிகள் மனச்சாட்சியை மறைத்துவிடும் தகைமையுடையன.

நித்திரைக்கு போகும்முன் சுய மதிப்பீடு செய்யவேண்டும். ஒரு உண்மை உதாரணம்:

ஒரு சாயி சகோதரர் தென் இந்தியாவில் பிறந்து வளர்ந்து டெல்லியில் வசித்துவந்தார். அவரைப் பார்க்க பாட்டி சென்னையிலிருந்து புகையிரத மூலம் டெல்லிக்குவர ஆயத்தமானார். அவருக்கு தமிழைவிட வேறு மொழி தெரியாது. சகோதரனின் தகப்பனார், தனது மகனைத் தவறாது புகையிரத நிலையத்திற்குச் சென்று பாட்டியை வரவேற்கும்படி கூறினார். அன்றைய நாள் மகனும் நேரத்திற்கே புறப்பட்டு காரில் சென்றார். வழி தடுமாறி கார் போகக்கூடாத பாதையிலே காரைச் செலுத்தினார். சந்தியில் பொலிஸ் காவலாளி மறித்து பக்கமாக நிறுத்தச் சொல்லி கார்ச் சாவியை எடுத்துக் கொண்டார். அப்பாதையால் சென்றதற்கு தண்டனைக் காசு கொடுக்க வேண்டுமென்று பொலிஸ் காவலாளி சொன்னான். இவருக்கோ புகையிரத நிலையத்திற்குப் போகவேண்டுமென்ற அவசரம். பொலிஸ்காரனோ இலஞ்சத்தை எதிர்பார்க்கிறான். சுவாமியே இலஞ்சம் கொடுப்பதும் பாவம், எடுப்பதும் பாவம் என்று சொல்லியுள்ளார். சகோதரன் அப்படியே ஒன்றரை மணித்தியாலம் சுவாமிக்குப் பிரார்த்தித்துவிட்டு நின்றார். பொலிஸ்காரன் எரிச்சலுடன் வந்து சாவியைக் கொடுத்துப் போகுமாறு சொன்னான். புகையிரத நிலையத்திற்குச் சென்றதும் பாட்டி பயணித்த புகையிரதம் 2 மணித்தியாலங்கள் காலம் தாழ்த்தியே வந்தது. பாட்டியை வரவேற்று வீட்டிற்கு அழைத்துச் சென்றார். சகோதரன் குருவின் போதனையைப் பின்பற்ற எல்லாம் நல்லபடியாகவே நடந்தது.

"எப்போதும் குருவைப்
பின்பற்றினால் குருவே எம்மைக்
காப்பாற்றுவார்'

ஜெய் சாயிராம்.

**பேராசிரியர் டாக்டர் சுரேஸ் கோவிந்**
ஆற்றிய உரை
(சத்திய சாயி சர்வதேச நிறுவனம். மலேசியாவில் தேசிய இணைப் பாளராகவும் பணிபுரிகிறார்)
ஏழு புத்தகங்கள் வெளியிட்டுள்ளார்.
(Face the Devil)



சுவாமியின் அன்பையும் கிருபையையும் வேண்டி மதிப்புக்குரிய பெரியோரே! சகோதர சகோதரிகளே! எனக்கு இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த குழுவினருக்கு நன்றி.

குருவைப் பின்பற்றாவிட்டால் பிசாசைப் பின்பற்ற நேரிடும். சூரியனும் எமது நிழலும் போல சூரியன் தலைக்கு மேல் இருக்கும் பொழுது நிழல் மிகச் சிறிதாகவே இருக்கும். அதேபோல இறைவன் அடியில் இருந்தால் நிழல் குறகிப் போய் விடும். இறைவனை (சூரியனை) நோக்கினால் நிழல் பின்னால் போய் விடும்.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரீட்சையில் 45% எடுத்து சித்தியடைந்ததையிட்டு ஒரு மாணவன் மகிழ்ச்சியுற்றான். 42% எடுத்த மாணவன் 45% எடுத்தவனை மேதை என்று வர்ணித்தார். இன்னொரு மாணவன் 89% எடுத்தும் 100% எடுக்கவில்லை என்று துக்கப்படுகிறான். இவரை இன்னொரு மாணவன் 100% எடுத்தவன் 85% எடுத்த மாணவனைப் பார்த்து நீயும் 100% எடுத்தவனும் கடும் முயற்சி எடுத்தால் 100% எடுக்கலாம் என்று அறிவூட்டினான். இளைஞர்களுக்கு உற்சாகம் உண்டு. இவர்களுக்கு ஆன்மீக பயணத் தொடக்கத்தில் போதனை வேண்டும். இதெல்லாம் சுவாமி வாகினித் தொடர் நூல்களில் எழுதியுள்ளார். உன்னதமாக மாறி ஏனையோரும் மாற உதவி செய்ய வேண்டும்.

பிசாசை எப்படி எதிர்கொள்ளலாம்? G.O.D. என்ற சொல்லையே Get Out Devil என்றும் கருதலாம். நாங்கள் பல அலுவல்களுக்கு மத்தியில் சாயியின் பணிக்கு ஒரு சிறிதளவே ஒதுக்கியுள்ளோம்.

ஒருமுறை ஒரு அம்மா தன் மகன் அமெரிக்க போயுள்ளார் என சுவாமியிடம் கூற, சால சந்தோசம் என்று சுவாமி சொன்னார். அம்மா அவன் உங்களுடைய மாணவன் என்று சொன்னார். சுவாமி உடனே" இல்லை இல்லை. அவன் சுவாமியின் கல்வி நிறுவனத்தின் மாணவன். எனது சோதனையில் சித்தியடைந்து எனது போதனைகளைப் பின்பற்றி என்னிடம் கேட்டுப் போயிருந்தால் **எனது மாணவன்** என்று சொல்லியிருப்பேன் என்று கூறினார். நாங்கள் சுவாமியின் போதனைகளில் அவரின் வேலைத்திட்டங்களில் வேலை முறைகளில் ஆர்வமாய் இருக்க வேண்டும். நாங்கள் எப்போதும் நான் யார் என்ற விசாரணையில் இருக்கவேண்டும். ஸோகம் என்ற மந்திரத்தில் நிலைத்திருக்க வேண்டும்.

**நிதியைப்** பொறுத்தவரையில், ஒருவரை எவ்வளவு உழைக்கிறாய் என்று கேட்பதிலும் பார்க்க எவ்வளவு சேமிக்கிறாய் என்று கேட்க வேண்டும். நிதியைக் கண்டபடி உழைத்து செலவழித்தால் பிசாசாகிவிடும். சேமித்ததை பிற்காலத்திற்கும் சேவைக்குமாகச் சேர்க்க வேண்டும்.

**உணவும்** பிசாசாக மாறலாம். அளவிற்கு மிஞ்சி உண்டு ஆரோக்கியத்தை பலவீனமாக்கலாம். சாத்வீக உணவை அளவோடு உண்ணவேண்டும்.

**வேலை/ தொழில்** : சாயி இளைஞர்கள் அர்ப்பணிப்புடன் கடுமையாக வேலை செய்யப்பழகவேண்டும். ஆரோக்கியக் **குறைவு/ உணர்ச்சிவசப்படுதலைத்** தவிர்க்க வேண்டும்.

உடல், உள ஆரோக்கியம் அவசியம். கோபம் ஒரு பரமவிரோதி. ஏனையோர்கள் எங்களைப் பதட்டம் அடையச் செயற்படலாம். நாங்கள் எல்லாவற்றையும் ஆன்மீகப் பயணத்தில் உதவுபவையாகவே விளங்கிக் கொள்ள வேண்டும். அவர்களின் தூண்டுதல்கள் எம்மை மோட்ச நிலைக்கு அருகாமையில் சேர்க்கின்றன என்று ஏற்றுக் கொள்ள வேண்டும்.

**தொழில்நுட்ப வளர்ச்சி** ஏமாற்று நுட்பமாக மாறி, ஆண்டவனிடமிருந்து தூர இழுத்துச் செல்கிறது. உதாரணம் - கையடக்கத் தொலைபேசி, சமூக இணையத் தளங்கள். எமது நேரத்தையும் வீணாக்கி உணர்ச்சிவசப்படுத்தி 6 உள்ளெதிரிகளுக்கு சுவாரஸ்யமான உணவைக் கொடுக்கின்றன. இதன் பாவனையைக் கட்டுப்படுத்த வேண்டும். கையடக்கத் தொலைபேசி எம்மை ஆண்டவனிடமிருந்து பிரித்து விடுகிறது. இது மாயையின் சூழ்ச்சி போலத் தெரிகிறது. **மகிழ்ச்சியின்மையை** "நாம்தான் எங்களுக்கு எதிராகச் செயற்படுகின்றோம். எங்களின் கஸ்டங்களுக்கு மற்றோரைக் குறைகூறுகிறோம்.

"ஏனையோரை குற்றம் கூறுபவர் பயணத்தில் ஒரு முன்னேற்றமும் அடையமாட்டார். குறையைத் தன்மீது சுமத்துபவர் பாதி வழியில் முன்னேறியுள்ளார். ஒருவரையும் குறைகூறாதவர் தான் சேரவேண்டிய இடத்தைச் சேர்ந்துள்ளார்" என்பது ஒரு சீனப் பழமொழி.

**அறிவு/ புத்தி** : இது சந்தேகத்தைக் கிளப்பிவிடும். பிழையானதைச் சரியானதென நிரூபிக்கும்.

உ - ம் : தராசைத் தலைமேல் வைத்துப் பாரம் ஏறவில்லை என்று சொல்வதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வசதிகள் : அளவுக்கு மீறிய வசதிகள் எமது முன்னேற்றத்தைத் தடுக்கக்கூடியவை. சுவாமி எமது இணைப்பாளர் ஒருவர் விமானத்தில் முதலாம் வகுப்பில் பிரயாணம் செய்ததைக் கண்டித்தார். வழமையான வகுப்பில் பிரயாணம் செய்து மிஞ்சுகின்ற பணத்தைச் சேவைக்குப் பயன்படுத்தச் சொன்னார். மாயை வசதிகளைக் கொடுத்து எம்மைப் பின்னடையச் செய்துவிடும். ஆன்மீகத்தில் வளர்ச்சி அடைந்தவர்கள் மற்றையோருக்கு வழிகாட்டவேண்டும். நாம் எப்போதும் ஆனந்த நிலையில் நிலைக்கவேண்டும்.

எமது ஆன்மீக வளர்ச்சியை மதிப்பீடு செய்வதற்கு 0 - 100 என்ற கோட்டைப் பாவிக்கலாம்.

| | |
|---|---|
| மகிழ்ச்சி | X 0 --------------------100% |
| சேவையிலீடுபடுவது | X 0 --------------------100% |
| அன்பு | X 0 --------------------100% |
| ஒருமை | X 0 --------------------100% |
| அமைதி (சாந்தி) | X 0 --------------------100% |
| இதயமென்மை | X 0 --------------------100% |

**மரணத்திற்குப் பயம் :** மரணம் என்றால் என்ன? மரணம் என்பதைப்பற்றி விசாரணை செய்யவேண்டும். எப்போதும் ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

**திட நம்பிக்கையின்மை :** கடவுள்மீது திட நம்பிக்கை இல்லை. விமானப் பயணத்தின் மீது விமான ஓட்டியில் நம்பிக்கை வைத்துத்தானே பயணத்தை மகிழ்ச்சியுடன் செய்கின்றோம். எல்லாப் பிரச்சினைகளுக்கும் தீர்வையும் சுவாமி தருவாரென நம்பிக்கை இருக்கவேண்டும். படைப்பிலிருக்கும் நிச்சயமற்ற தன்மையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

**அவித்யா :** இதை அஞ்ஞானம் என்றும் கூறுவர். நிலையற்றதை நிலையானதெனக் கொள்ளல். உண்மையை மறைக்கும் **மாயையை** நம்புதல் ஆகியன அடங்கும். ஆன்மீகம் ஆனந்தம் நிறைந்தது. **உள்ளகத்தை** வளர்த்துக்கொள்ளவேண்டும். சுவாமி ஆன்மீகத்தில் நாலில் ஒன்று சாதனா. நாலில் மூன்று ஆத்ம விசாரணை என்று கூறியுள்ளார். சுவாமி மீது தளராத நம்பிக்கை கொள்ளவேண்டும். சுவாமி சொன்னதை அப்படியே பின்பற்ற வேண்டும். அவித்தியா, 6 உள்ளெதிரிகளுக்கும் காரணம் தேகாபிமானதேயாகும்.

நாம் நாலு கூறுகளினால் ஆக்கப்பட்டுள்ளோம்.
உடல், மனம், புத்தி, ஆத்மாவே இவையாகும்.

நம்பிக்கை உயர்வு என்றால் தேகாபிமானத்திலிருந்து ஆத்மாபி மானத்திற்கு உயர்வதேயாகும். இந்த உயர்வு விண் வெளிக்கப்பல் பயணத்திற்குச் சமன். வேகம் அதிகரித்து பழைய இழுவையிலிருந்து விடுபட்டு புதிய பாதையில் செல்லவேண்டும். நாம் ஆத்மாவுடன் இணைய வேண்டும். நான் ஆத்மா என்ற உணர்வு எழவேண்டும். ஆத்மாபி மானத்துடன் ஆத்மாவில் அன்பு கொள்வதுமே பிரார்த்தனையாகும். நம்பிக்கை உயர்வு (Faith Lift) என்பது தேகாபிமானத்திலிருந்து ஆத்மாபிமானத்திற்கு மாறுவதே யாகும். இப்பொழுது அடிப்படைச் சக்தியை அடைந்துள்ளோம். இதுவே ஆதாரம் (Source) ஆகும். இதிலிருந்து செயல்கள் எழும்போது விசையாகின்றது. Source Become Force. அதாவது ஆதாரம் சக்தியாக மாறுகின்றது. சிங்கம் போல் எழுச்சியுடன் வாழ வேண்டும். எப் பொழுதும் புன்சிரிப்புடனும் மகிழ்ச்சி யுடனும் உற்சாகத்துடனும் நன்றி யுடனும் வாழவேண்டும்

**இளைஞர்கள் இன்று சத்தியப் பிரமாணம் எடுக்கவேண்டும்.**

Whatever happens, I will commit to Sai work
என்னதான் நடந்தாலும் என்னை சாயியின் பணிக்கு அர்ப்பணிப்பேன்.

In whatever Situation, I will uphold Sai Ideals.
எந்தச் சந்தர்ப்பத்திலும் சாயியின் இலட்சியங்களை வழிகாட்டல்களை கடைப்பிடிப்பேன்.

I Have no fear. Swami will be there hence I surrender to him totally

எனக்கு சுவாமி எப்போதும் அருகிலிருப்பதால் பயமே இல்லை. அவரிடம் முழுமையான சரணாகதி அடைகிறேன்.

தேகாபிமானம் பந்தத்தை ஏற்படுத் தும். ஆத்மாபிமானம் விடுதலையைக் கொடுக்கும். முதலாவது விய கர்மா

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் இரண்டாவது சிநேக கர்மா என்றும் கூறுவார்கள். முதலாவது நரகம் என்றால் இரண்டாவது சுவர்க்கம். பந்தமா? விடுதலையா? என்பதை விளக்கப் பின்வரும் அப்பியாசம் கொடுக்கப்பட்டது.

1. அங்கே தவறணை உண்டு. சின்னளவில் குடிப்பமா?
2. முதியோர் இல்லத்திற்குச் செல்வோமா?
3. ஒரு சிகரெட் பத்துவோமா?
4. YOLO Youth Only Live Once இப்போது குடித்து மகிழுவோமா?
5. கடவுள் எங்கே உள்ளார்?
6. எனக்குச் சோம்பலாக இருக்கிறது. படிக்க கஸ்டமாக இருக்கிறது. பின்பு படிப்போம்.
7. எனக்கும் ஏச்சுக் கிடைத்தது. எனது பிழையை உணர்ந்து கொண்டேன்.
8. நான் இதைப் பெறத் தகுதியில்லை.
9. நான் தகுதியான நிலைக்கு வரவில்லை.
10. நான் கடைப்பிடிப்பதில்லை. எனக்கு இப்போது முடியாது. தியானத்தில் செப்பமாக இடைவிடாது செய்யவே விருப்பம்.

**விடை**

பந்தம் : 1, 3, 4, 6, 8,9,10
விடுதலை : 2, 5, 7

"ஞானம் படிப்படியாக மெல்ல மெல்லச் சிறிது சிறிதாக நாளுக்கு நாளாக கிடைப்பதில்லை. அது சாதனை முதிர்ச்சி அடைந்ததும் பிரகாசத்துடன் சடுதியாக வெளிப்படும்."
- ரமண மகரிஷி அவர்கள்


சத்திய சாயி வாகினியைப் படியுங்கள். இறுதியில் நானே அவன் என்ற நிலை எழும்.

## ஸ்ரீ சஞ்சே ஸஹானி (Sri Sanjay Sahani) அவர்களின் உரை

**Finish the Game விளையாட்டை முடி**

By : Brother Sri Sanjay Sahani
(B.com M.com. 1987 at Prashanthi Nilayam
(Hostel Warden 1990 - 1993)
(Principal Brindavan Campus 2000 - 2002)
(Now Controler of Examination)

(இவர் சுவாமியின் கல்வி நிறுவனங்களில் கற்றவர். M.com செய்தார். விரிவுரையாளராகப் பணியாற்றி பிருந்தாவன் பல்கலைக்கழக வளாக அதிபராக கடமையாற்றி இப்போது பரீட்சை மேற்பார்வையாளராக பணியாற்றுகின்றார்.)



பகவானின் தாமரைமலர்ப் பாதங்களுக்கு நமஸ்காரம். இந்த நிகழ்விற்கு வருகைதந்திருக்கும் பெரியவர்கள் மற்றும் Zone 4 இளைஞர், யுவதிகள் அனைவருக்கும் வணக்கம். இந்த நிகழ்விற்கு பேச அழைத்தமைக்கு மிக்க நன்றிகள். சாதாரணமாக சுவாமி பேச ஆரம்பிக்கும் முன் சிறிய கவிதை வடிவிலான பாடலுடன் ஆரம்பிப்பது வழக்கம். (Stanza)

புனர்வித்தம் புனர்மித்ரம் புனர் பார்யா புனர்
ஏதத் சர்வம் புனர் லப்யம்
நச் சரீரம் புனா புனக.

நீங்கள் பொருளை, நண்பர்களை, துணைவரை இழந்தீர்களேயானால் அவற்றை வேறு வழியில் தேடிக் கொள்ளலாம். ஆனால் மனிதப் பிறவியை மறுபடியும் நிச்சயமாக மீண்டும் பெறுவோம் என்று கூறமுடியாது. இவ்வேளையில் நாளைய தினம் உள்ளக விளையாட்டையும் நினைவு கூருகிறேன்.

விவேக சூடாமணி என்ற நூலில் ஆதி சங்கரா என்ன கூறுகிறார் எனில் இவ் உலகில் 84 இலட்சம் உயிரினங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்ளன என்றும் இவைகளுக்குள் மனிதப் பிறவியானது ஒப்பற்ற மாணிக்கம். எல்லாப் பிறவிகளிலும் செய்த நற்பயன்களின் விளைவாகவே கிடைக்கப்பெறும் இவ் மனிதப் பிறவியை வீணாக்கி விடாதீர்கள்.

பல்கலைக் கழகத்திலே மனித விழுமியக் கல்வியானது ஒரே Semester க்கு கற்பிப்போம். அதனை 45 நிமிடத்தில் சுருக்கி சொல்வது என்பது மிகவும் கடினமானதுதான். ஆசிரியர்களும் விவசாயிகளை போலத்தான். அவர்களின் போதனைகள் என்றோ ஒருநாள் வளமான பயிராக உருவாகும். அந்த வகையில் எனது உரையை தொடர்கின்றேன். உங்களுக்கு எல்லோருக்கும் தெரியும். டாக்டர் ஹிஸ்லொப் ஐப் பற்றி. அவர் ஒருநாள் சுவாமியுடனான நேர்கானலில் மற்றைய கிரகங்களிலும் உயிர்கள் வாழ்கின்றனவா என்று கேட்டார். சுவாமி அதற்கு ஆம் உயிர்கள் மற்றைய கிரகங்களிலும் வாழ்கின்றன. ஆனால் மனிதப் பிறவி இப் பூமியில் மட்டும்தான் உண்டு என்றார். ஏன் சுவாமி இவ் மனிதப் பிறவிக்கு இவ்வளவு சிறப்பு என்று வினவினார். அதற்கு சுவாமி ஒரு நாயாக பிறந்தால் அது இறக்கும்போதும் நாயாகத்தான் இறக்கின்றது. பாம்பும் அப்படித்தான். இவ்வாறு மற்ற உயிர்கள் இறக்க மனிதன் மட்டும்தான் இறக்கும் பொழுது தெய்வமாக முடியும் என்றார். (கைதட்டல்)

ஒருமுறை பிரசாந்தி நிலையத்தில் ஆசிரியர்களுடனான கலந்துரையாடலில் ஒருமுறை மனிதனாக நீங்கள் பிறந்துவிட்டால் மறுபடியும் நீங்கள் வேறு உயிரினங்களாக பிறக்கமுடியாது. வேண்டும் என்றால் நீங்கள் ஏழையாகவோ குருடராகவோ சித்தப்பிரமை உள்ளவராகவோ பிறக்கலாம்.

இவ்வாறு கிடைத்தற்கரிய பிறவியை எவ்வாறு சிறப்பாக உபயோகிக்கலாம்?" "அதற்கு சுவாமி அழகாக "4F" ஐ நான்கு இலட்சியங்களுடன் தொடர்பு படுத்துகிறார். அவையாவன,

1. தர்மம்
2. ஆர்த்த
3. காமம்
4. மோட்சம்

முதலாவது "F" ஆன Follow the Master தர்மத்துடன் தொடர்பு படுத்தப்படுகின்றது. நேற்றைய உரையிலும் சகோதரர் அமேஸ் அவர்கள் "The Master" ஐப் பற்றி அழுத்தமாக சொன்னார். அவதாரங்கள் தர்மத்தை **அழைத்தோங்க பண்ண** யுகங்கள் தோறும் அவதரிக்கின்றனர். தர்மத்தை பாதுகாக்க தேவை. இல்லை, அவை எப்போதும் இருக்கின்றது. அவற்றை எமது வாழ்க்கையில் கடைப்பிடிக்க பண்ணுவதற்காகவே தாங்கள் முன்னுதாரணமாக வாழ்ந்து காட்டி செல்கின்றார்கள்.

இந்திய கலாச்சாரத்திலே யாவற்றுக்கும் முன்னுதாரண மான நூலான மனு சாஸ்திரத்தில் தர்மத்தின் மூலங்கள் நான்கு என்று சொல்லப்படுகின்றன. அவையாவன,

1. வேதங்கள்
2. புராண இதிகாசங்கள்
3. சமூகத்தில் முன்னுதாரணமாக வாழ்கின்ற மனிதர்கள்.
4. இங்குதான் நாம் எமக்கிடையே வாழ்ந்து சென்ற சுவாமியை முன்னுதாரணமாகக் கொள்ள வேண்டும்.

ஒருவர் கேட்கலாம் நான் சுவாமியைப் பார்க்கவில்லை என்று. அதற்கு மனு என்ன சொல்கின்றது என்றால், நான்காவது தர்மத்தின் மூலம் எமது "மனச்சாட்சி" (Conscience) அல்லது எமக்குள்ளே ஒலிக்கின்ற தெய்வத் தின் குரல் (கைதட்டல்)

இரண்டாவது 'F" ஆன Face the Devil. இதனை "அர்த்த" வுடன் சுவாமி தொடர்புபடுத்துகின்றார். இதற்கு செல்வம் என்று பொருள். ஆனால் எல்லா வகையான உலகியல் பொருள்களும் இதற்குள் அடக்கலாம். (பெயர்/ புகழ்/ செல்வம்) இவை யாவும் எமக்கு "அவாவை" தரவல்லன. இதனை வெற்றிகொள்ள அர்த்தாவை தர்மத்துடன் தொடர்பு படுத்தச் சொல்கின்றார்.

மூன்றாவது 'F" ஆன Fight till the End. இதனை காமத்துடன் தொடர்புபடுத்துகிறார். வேதத்தில் எல்லா வகையான ஆசைகளும் காமம் எனப்படுகின்றது. இதனை வாழ்க்கையின் எல்லைவரை போராடி வெற்றி கொள்ள வேண்டும். இடை நடுவில் வெற்றி கொண்டு அமைதியாக இருக்க முடியாது. முடிவற்ற யுத்தம். காமம் என்பதற்கு கா (Pleasure) மா (Limited) என்றும் பொருளுண்டு. அப்படியானால் வாழ்க்கையில் இதற்கு ஆசைப்படவே கூடாதா என்று கேட்கலாம். இல்லை. விபூதி யோகத்திலே கடவுள் நான் காமம் ஆனால் தர்மத்தை

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரிக்கின்ற/ எதிர்க்காத காமம் என்கின்றார்.

உதாரணமாக நேற்றைய கண்காட்சியிலே விதம் விதமான உணவு வகைகளை காட்சிப் படுத்தியிருந்தீர்கள். உண்மைதான். இளைஞர்களுக்கு உணவு என்றால் கொள்ளைப்பிரியம். அதில் தப்பு எதுவும் இல்லை. (சிரிப்பொலி)

ஒருமுறை கோடை மாநாட்டிலே உரை முடித்தபின் சுவாமி, என்னிடம் வந்து சஞ்சய் எனக்காக ஒன்று செய்யமுடியுமா என்று கேட்டார். எனக்கோ சொல்லமுடியாது ஆச்சரியம். இப் பிரபஞ்சத்தை படைத்த கடவுளுக்கு நான் செய்யக்கூடிய விசயமா? அப்பொழுது நான் Hostel Warden ஆக இருந்தேன்.

உங்களது Hostel இல் சாம்பார், இரசம் இரண்டுமே எப்போதும் ஒரே மாதிரியான சுவைதான். அவற்றின் சுவையை மாற்ற முடியாதா என்று வினவினார். பாருங்கள் இளைஞர்கள் மீது சுவாமிக்கு எவ்வளவு அன்பு என்று? மாலை பஜனையின் பின் எமது சமையல்காரர்களுடன் பல சுற்று கலந்துரையாடலின்பின் சுவையை திறம்பட மாற்றினோம்.

பின்னொருநாள் இளைஞர் களைப் பார்த்து எல்லோரும் அதிகம் நிறைபோட்டு விட்டார்கள் என்றார். எனக்கோ கொள்ளை மகிழ்ச்சி.

உணவுக்கான பிரியம் பிழையல்ல. ஆனால் அளவுக்கு மீறி உட்கொள்வதுதான் பல பிரச்சினைகளுக்கு காரணமாக அமைகின்றது.

கடவுள் எமது சந்தோசத்துக்கு ஆகவே இப் பூமியை படைத்தார். எனவே சந்தோசமாக இருப்பதில் தவறு இல்லை. ஏனெனில் நாம் சந்தோசத்தை நாடியே செல்கின்றோம். பூமியில் கிடைக்கின்ற இச் சந்தோசம் வரையறைக்கு உட்பட்டது. அவ்வாறில்லாமல் எதனை அடைந்தால் ஆனந்தம் குறைவில்லாமல் இருக்குமோ அதாவது எந்நிலையிலும் அளவற்ற ஆனந்தம். அதற்காக ஆசைப்படவேண்டும். அவ்வாறு அதனை அடையலாம்? அதற்கு கதையானது "அனித்தம் அசுகம் லோகம் பிராத்திய பஜன் பிரமாம்' எது இன்று உனக்கு சந்தோசத்தை தருகின்றதோ, அதுவே உனக்கு நாளை கவலையையும் தரக்கூடியது. எனவே அதனை உணர்ந்து மனதை இறைவன்பால் திருப்பி எப்போதும் மாறாத இன்பத்தை அளிக்கின்ற மன அமைதி மற்றும் ஆனந்தம் என்பவற்றுக்கு ஆசைப்படு.

Finish the Game என்பதிலே சுவாமி எப்போதும் வாழ்க்கையை விளையாட்டிற்கு ஒப்பிடுகின்றார். குறிப்பாக கால்ப்பந்தாட்டத்திலே விளையாட்டு ஆரம்பிக்கும்பொழுதும் முடியும் பொழுதும் இரண்டு விசில்கள் ஊதப்படும். அதுபோலத்தான் பிறப்பும் இறப்பும் என்ற இரண்டு விடயங்கள். நாம் என்றோ ஒருநாள் இவ் உலகத்தை விட்டு நீங்கத்தான் வேண்டும். அது மாறாத உண்மை. ஆனால் அதற்கு நாம் தயாராக இருக்கின்றோமா?

ஒருமுறை நாம் யாவரும் சுவாமியின் தரிசனத்திற்காக இருக்கும் பொழுது சுவாமி எனக்கு அருகில் இருந்த எனது அறைத் தோழனுக்கு என்ன உனது பெயர் பெண்களின் பெயர் போல உள்ளது என்று குறிப்பிட்டார். என்னையும் எனது தோழனையும் தவிர அனைவருமே சிரித்தனர். அந்தப் பெயர் வந்ததன் பின்னணியை எனக்கும் அவன் தெரியப்படுத்தி யிருந்தான். அவனது அப்பா ஒரு சோதிடர். இவன் ........... இருக்கும் பொழுது எமக்கு ஒரு பெண் குழந்தை தான் பிறக்கும் என்று ஒரு பெயரை தேர்ந்தெடுத்தனர். ஆனால் மாறாக ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அதற்காக .......... பெயரை மாற்றாமல் குறுக்கி ஆணின் பெயர் சாயல்பட வைத்தனர்.

சுவாமி அவனுக்கு சொன்னார். பெண்ணாக பிறக்க இருந்த உன்னை ஆணாக பிறக்கவைத்தேன். எனவே பிறப்பு இறப்பு யாவும் அவரின் கைகளிலே. ஒருமுறை விஜயதசமி நாளில் பிரசாந்தி நிலையத்தில் சுவாமி உரையாற்றிக்கொண்டு இருந்தார். உங்கள் எல்லோருக்கும் தெரியும் பிரிகேடியர் பொஸ் (Bose) ஐப்பற்றி. அவர் சுவாமிக்காக பல கட்டடங்களைக் கட்டினார். திடீரென அவர் சுயநினைவு இழந்தார். அவருக்கு அருகிலிருந்த வைத்தியர்கள் அவரை பரிசோதித்துவிட்டு அவரது இறப்பை உறுதிசெய்தனர். திடீரென சுவாமி பேச்சை நிறுத்திவிட்டு மேடையை விட்டு இறங்கிச் சென்று மிகவும் கெட்டியாக பிடித்திருந்த தனது கையை அவரது தலையிலே அழுத்தினார். மறுநிமிடம் பிரிகேடியர் பொஸ் கண்ணை அழகாக திறந்தார்.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை சுவாமி கல்லூரி அதிபர் ஒருவருக்கு பிரிகேடியர் பொஸ்தான் முந்தைய பிறப்பில் தாஜ்மகாலை வடிவமைத்தவர் என்று கூறினார். எனவே பல்கலைக் கழகத்திலே பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் போல மீண்டும் மீண்டும் பரீட்சையை எழுதாமல் இவ் ஒரு வாழ்க்கை யிலேயே உயரிய சந்தோசமான மோட்சத்தை (4ஆவது இலட்சியம்) அடைய எத்தனிக்கவேண்டும்.

எவை எம்மை மீண்டும் மீண்டும் பிறக்க வைப்பது? அவையாவன,

1. பாபம்
2. தாபம்
3. அக்ஞானம்

விலங்குகள் பாவத்தை செய்வதில்லை. மனிதர்கள் மட்டும்தான் புத்தியை சரியாக பாவிக்க தெரியாமல் செய்கின்றார்கள். ஒருமுறை சிம்லா விஜயத்தின் போது ஒரு தாய் தனது பார்வை இழந்த குழந்தையை வைத்து சுவாமியிடம் இரந்து வேண்டினார். இதனைப் பார்த்த சுவாமி காருண்யானந்தா, சுவாமி தயவு செய்து அத் தாயின் கதறலுக்காக பார்வையளிக்க மாட்டீர்களா என்றார்? எவ்வாறு அக் கதறலுக்கு இரங்காமல் இருக்கின்றீர்கள் என சுவாமியிடம் வினவினார். சுவாமி கூறினார். காருண்யானந்தா உனக்கு தெரியுமா அக் குழந்தை யின் முந்தைய பிறப்பைப் பற்றி அவன் முந்தைய பிறப்பிலே மும்பை மாநகரத்தில் சிறு குழந்தைகளை கொணர்வித்து பார்வையை இழக்கச்செய்து பிச்சையெடுக்க அனுப்பி அப் பணத்தில் தனது உயிரை வளர்த்தான் என்றார். எப்போதும் நாம் உடனடியான சந்தோசத்தைதான் பார்க்கின்றோம். நீண்டகால விளைவை உணர மறக்கின்றோம். ஒருமுறை ஒரு பேராசிரியர் சுவாமியிடம் ஏன் மனிதர்கள் பாவம் செய்கின்றார்கள் என வினாவினார். அதற்கு சுவாமி, தெய்வம் இருப்பதை அவர்கள் மறந்துவிடுகின்றார்கள் என்றார்.

அடுத்ததாக "தாபம்". அதாவது நிறைவேறாத ஆசை அல்லது அளவு கடந்த ஆசை. இது மீண்டும் மீண்டும் அவ் ஆசை நிறைவேறும் வரை எம்மை பிறக்கச் செய்கின்றது. இறுதியாக "அக்ஞானம்" நான் யார் என்ற கேள்வி இதனை இல்லாமல் செய்கின்றது. ஒருமுறை கொடைக்கானலில் மாணவர்களிடம் சுவாமி நான் யார் என்று வினாவினார். ஒவ்வொருவரும் அவரை கடவுளாகவும் சிவசக்தி சொருபங்களாகவும் ஸ்ரீகிருஸ்ணனாகவும் சொன்னார்கள். சுவாமி அவற்றை மறுதலித்து "I am I" என்று பரிந்துரைத்தார். எவரொருவர் இதை உணர்கிறாரோ அவரே அத்வைத தத்துவத்தை உணர்ந்தவராவார்.

இதற்கு உதாரணமாக ஒரு சிறுகதையை கூறலாம் என்று நினைக்கின்றேன். அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற மாநாட்டிலே பங்குபற்றியபோது ஒருவர் தனது அனுபவத்தை பகிர்ந்தார். அவர் ஒரு சட்டத்தரணி, அந் நாட்டினுடைய ஒரு மிகப்பெரிய சொத்து ஒன்றை விட்டுக் கொடுக்க வேண்டிய நிர்ப்பந்தம் இவருக்கு ஏற்பட்டது. மிகப்பெரிய சவாலாக இருந்த அதனை அவர் "நான் சுவாமி", அவரும் நானும் ஒன்று என்ற தத்துவத்தை (I am) மீள மீள கூறி தன்னில் அளவற்ற நம்பிக்கையை ஏற்படுத்தி அந் நாட்டினுடைய சொத்தை மீட்டுக் கொடுத்தார்.

சுவாமி சொல்கின்றார், நாம் செய்கின்ற மிகப்பெரிய தவறு எம்மை இந்த உடம்புடன் தொடர்பு படுத்துவது தான் இதுவே எம்மை மீளவும் பிறக்க வைக்கின்றது. நாம் செய்கின்ற ஒவ்வொரு காரியத்தையும் இறை வனுக்கு அர்ப்பணிக்க வேண்டும். இதுவே பூரண சரணா கதிக்கு எம்மை இட்டுச் செல்லும். எவ்வாறு பரீட்சையில் நன்றாகப் படித்தும் வெற்றிப் புள்ளியை எட்டுவதற்கு சற்றுக் குறைவான மதிப் பெண்ணை பெறும்பொழுது பரீட்சை யாளர் மாணவனின் நற்பண்பு கருதி மனமுவந்து எங்காவது புள்ளியை அதிகரிப்பதற்கான சாத்தியம் இருக்காதா என்று தேடி வெற்றி யடைய வைப்பது போல் இறைவனும் எமது நற்செயல்களை எண்ணு கின்றார். எம்மை மீண்டும் பிறவாமல் இருக்கவைப்பதற்காக.

இவ்வாறு நாம் விசில் சத்தம் ஊதும் பொழுது இந்த வாழ்க்கையை கடக்கும் பொழுது சுவாமியை எம்மை வரவேற்பதற்காக இருகைகளையும் நீட்டி மகிழ்ச்சியுடன் வரவேற்கும் பொழுது நாம் அவரிடம் இல்லை சுவாமி நீங்கள்தான் எம்மை இவ் விளையாட்டில் வெற்றிபெற செய்து உம்மை அடைய செய்தீர்கள் என்று கூறவேண்டும்.

ஜெய் சாயிராம்

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கருத்தரங்கு

**வளவாளர்கள்**

**1. பேராசிரியர் கங்காதர சாஸ்திரி**
- சாயி உயர்கல்வி நிறுவனப் பணிப்பாளர்.


**2. சிறீ சாய் கிரிதர்**
- சாயி கல்வி நிறுவன பழைய மாணவன்.
சத்திய சாயி மனித மேம்பாட்டு நிலையத்தில் ஆய்வாளராகப் பணியாற்று கின்றார்.

**3. டாக்டர் லதாசிறீ**
- சத்திய சாயி பொது வைத்திய சாலையில் பணி புரிகின்றார்.

**4. ஸ்ரீ அரவிந்த் பாலசுப்ரமணியம்.**
- றேடியோசாயியில் பணிபுரிகின்றார்.
(நெறியாளர்)

**நெறியாளர் :**
பணிவான சமர்ப்பணங்கள். 4F ஓர் சிறந்த மையக் கருத்து. இன்று நாம் முடிவு கிட்டும்வரை போராட வேண்டும் என்பதைப் பற்றி சிந்திப்போம்.

ஒருமுறை மாணவன் சுவாமியின் முன்னிலையில் உரை நிகழ்த்த தெரிவு செய்யப்பட்டார். மாணவர்கள் சுவாமியிடமிருந்தே உரையின் தலையங்கம், முக்கிய விடயங்கள் கேட்டறிவது வழக்கம். சுவாமியைக் கேட்ட பொழுது இதயத்திலிருக்கும் சுவாமியைக் கேள் என்று சொன்னார். கடைசிநேரம் சுவாமி கூப்பிட்டு என்னத்தைப்பற்றி பேசப்போகிறாய்? என்று கேட்க சுவாமிதான் தரவேண்டுமென்று சொன்னார். சுவாமி ஒரு கடதாசித் துண்டை மாணவனின் நெஞ்சில் அழுத்திவிட்டுக் கொடுத்தார். அதில் 4F பதிக்கப்பட்டிருந்தது. **எமது குரு எமது மனச்சாட்சியேயாகும்.** எங்களிலுள்ள ஆறு உள்எதிரிகளே எம்மை குருவான மனச்சாட்சியிலிருந்து விலகச் செய்கின்றன. நாம் எப்போதும் ஜாக்கிரதையாக இருக்க வேண்டும்.




மகாபாரதத்தில் கிருஸ்ண பரமாத்மா தர்மத்தைப்பற்றி துரியோதனனுக்குப் போதித்த பொழுது "எனக்குத் தர்மத்தைப் பற்றித் தெரியும். எனக்குச் சரியென்று தெரிந்தாலும் செய்யமுடியவில்லை. பிழை என்று தெரிந்தாலும் செய்யாமல் இருக்கமுடியவில்லை" என்று துரியோதனன் கூறினான். அவனுக்குப் பேராசை இருந்தது. இந்த ஆறு உள் எதிரிகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. குருவிடமிருந்து பிரித்துவிடவே செயற்படும்.

**பேராசிரியர் கங்காதர சாஸ்திரி :**
ஆசைகளில் விரும்பத்தகாததும் உண்டு. விரும்பத் தக்கதும் உண்டு. இதை எப்படித் தெரிந்துகொள்வது? காமம் சாதாரணமாக உடலிச்சையையே குறிக்கிறது. சமஸ்கிருதத்தில் சகல ஆசைகளும் காமம் என்ற சொல்லில் அடங்கும் மனமோ ஆசைகளின் கூட்டு சமுத்திரத் திலிருந்து அலைகள் எழுவது போல எண்ணங்களிலிருந்து ஆசைகள் எழுகின்றன. எண்ணங்கள் இல்லை யென்றால் மனமும் இல்லை. எண்ணங்கள் தொடர்ச்சியாக எழுந்தாலும் சிலதே செயல்களில் முடியும்.

ஆகவே எண்ணங்களைக் கட்டுப்படுத்த வேண்டும். சுவாமி எங்களுக்குப் பாதையைக் காட்டுவார். கையைப் பிடித்துச் செல்லமாட்டார். தர்மத்திற்கு மாறாயின் அதை வெட்டிவிட வேண்டும். துஸ்டர்களின் சகவாசத்தை அறவே விடவேண்டும். எண்ணம் எழுந்தவுடன்,
- முதலில் கட்டுப்படுத்தவேண்டும்
- பேச முதல் இருதடவை யோசிக்கவேண்டும்.
- பேச்சு ஒரு ஆன்மீகச் செயல்

**நெறியாளர் :**
இரண்டாவது உள்ளெதிரியான கோபத்தைப் பற்றிச் சிந்திப்போம். கோபத்தை எதிர்கொள்ளும் வழிகள் சில சுவாமி தந்துள்ளார். அவை யாவன,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கவும். முகம் எவ்வளவு விசித்திரமாக தெரியும்.
- ஒரு குவளை நீரைக் குடிக்கவும்
- பைப்பைத் திறந்து தண்ணீர் ஓடும் ஓசையின் சுருதியைக் கவனிக்கவும்.
- ஒருமைல் தூரம் ஓடவும். அந்தக் களைப்பில் கோபம் அடங்கிவிடும்.

**டாக்டர் லதாசிறீ** :
காமம்தான் ஏனைய உள் எதிரிகளுக்குத் தாய். காமம் தடைப் பட்டால் கோபம் ஏற்படும். காமத்தை திருப்தி செய்யமுற்பட்டால் பற்று (மோகம்) ஏற்பட்டுவிடும். திருப்தி செய்யச் செய்ய பற்றுக்கூடி பேராசையாக மாறிவிடும் இதனால் செருக்கு ஆணவம் பலமடையும். ஆணவம் பாதாளத்தில் தள்ளிவிடும். எனது அனுபவம், சாயி நிலையத்தில் பகவத் கீதையைப் பற்றிப் பேச உடன்பட்டிருந்தேன். முதல்நாள் எனது சக வைத்தியருடன் சரியானதை அவர் ஏற்க மறுத்ததால் மிகவும் கோபப்பட்டேன். நான் பேச வேண்டிய நாளன்று காய்ச்சலும் தொண்டை நோவும் ஏற்பட்டன. குளிகையைப் போட்டுத் தூங்கிவிட்டேன். சுவாமி கனவில் வந்து, "யாருடன் கோபப்பட்டாய்?" நான் பெயரைச் சொன்னேன். "அவரின் உண்மையான பெயர் என்ன?" என்று கேட்க, பகவான் சிறீ சத்திய சாயி பாபா என்று சொன்னேன். கோபம், வெறுப்பு எல்லாம் போய் எழும்பியதும் காய்ச்சலுமில்லை, தொண்டை நோவும் இல்லை. சுவாமியின் அருளினால் நான் திருந்தினேன்.

6 உள்ளெதிரிகளும் அடிஅறி மனதிலிருந்தே வெளிக்கிளம்புகின்றன. எமது உணர்ச்சியைக் கட்டுப்படுத்தி சுவாமியின் போதனையைப் பின்பற்றவேண்டும். பொறாமையைக் கடைப்பிடிக்கவேண்டும். இன்னொரு முறை சாயி நிலையத்தில் எனது சிறந்த ஓர் திட்டத்தை ஏற்காததால் சிரேஸ்ட நிர்வாகியுடன் தீவிரமாக விவாதித்தேன். சுவாமி கனவில்வந்து "யாருடன் கோபித்தாய்?" ஏன் கோபித்தாய்?" என்று கேட்க நடந்ததைச் சொன்னேன். சுவாமி "யாருடைய நிறுவனம்?" சுவாமியின் நிறுவனம் என்று சொல்ல "அப்படியெனில் ஏன் சண்டை பிடிக்கிறாய்?" ஒவ்வொருவருக்கும் கடமை தரப்பட்டுள்ளது. அதைச் சரியாகச் செய்யவேண்டும். மற்றவர்கள் ஏற்கவில்லையென்று கோபிக்கக்கூடாது. எல்லாம் சுவாமியின் நாமமும் ரூபமும்தானே. நான் ஏன் கோபிக்க வேண்டும்?" எங்களுக்குத்தந்த பாத்திரத்தைச் செவ்வனே செய்து முடிக்க வேண்டும்.

**நெறியாளர்** :
தீய திசையில் சுழலும் சாகரத்தை தர்மநெறியில் சுழலச் செய்யவேண்டும். நாம் ஒருவரைச் சந்திக்கும்போது அவரிலே சுவாமி இருக்கிறார் என்பதை உணரவேண்டும். அடுத்ததாக ஆணவம், பேராசை என்பவற்றைப் பற்றிச் சிந்திப்போம். சகோதரர் சாயி கிரிதர் சுவாமியின் முன்னிலையில் துரியோதனனின் பாத்திரத்தை ஏற்று பலதடவை நடித்துள்ளார். அவரைச் சில வார்த்தைகள் சொல்ல அழைக்கின்றேன்.

**சாயி கிரிதர்** :
ஒருமுறை கோடைக்கானலில் எங்களைக் குதிரைச் சவாரி செய்ய அனுப்பினார். பருமனாயிருந்த என்னைப் பார்த்து நீ குதிரையில் ஏறினால் குதிரையின் கால்கள் முறிந்து விடும் என்று பகிடிவிட்டார். அநேகமாக நாங்கள் எங்களுக்குள் இருக்கும் பேராசையை அறிந்து கொள்வதில்லை. உதாரணமாக வீட்டில் அம்மா சமைக்கும் உருளைக் கிழங்குக் கறியில் மிகவும் ஆசை இருந்தது.

சென்னையில் ஒருமுறை சுவாமி எங்களைப் பார்த்து "உங்களுக்கு சுவாமியுடன் இருந்து சாப்பிட விருப்பமில்லை." என்று சொன்னதை மறுக்க சுவாமி "உங்களுக்கு விருப்பமில்லைதான்" என்று திருப்பிச் சொன்னார். "சுவாமியுடன் இருந்து சாப்பிடா விட்டால் வேண்டுமளவு கதைத்துக் கதைத்துச் சாப்பிடலாமல்லவா?" என்றார்.

சுவாமி, "தேவையான அளவு சாப்பிடலாம். சாப்பிடும்போது மௌனம் பேணவேண்டும்" என்று சொன்னார். எமக்கு விருப்பமான கறியை மற்றவருக்குப் பகிர்ந்து கொடுத்தால் நமக்கு எவ்வளவு ஆனந்தமாயிருக்கும்.

ஒருமுறை எமது விடுதிக்கு சுவாமி வந்தார். "ஆறு உள்ளெதிரி களும் சமுத்திரத்தின் அலைபோல எழுந்து எழுந்து விழும். நாம் கால்களை நிலத்தில் ஊன்றினால் அலைகளால் அடித்துச் செல்ல மாட்டோம். அலைகளுடன் எழும்பி



FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னால் எம்மைப் பின்னுக்குத் தள்ளிக் கொண்டு போய்விடும்" என்று சொன்னார்.

ஒருமுறை சுவாமி வளாகத்திற்கு வந்தபோது, இரு மாணவர்கள் "கையமத்தும்" (Hand wrestling) போட்டியில் ஈடுபட்டிருந்த னர். சுவாமி "என்னுடன் யார் போட்டி போடப் போகிறீர்கள்? நிறைய நேர தயக்கத்தின் பின்பு பலசாலி மாணவன் ஒருவர் சம்மதித்தான். போட்டியில் சுவாமியை வெல்ல முடிய வில்லை. மொத்தமாக நான்கு மாணவர்கள் இணைந்தும் சுவாமியுடன் போட்டியில் அவர்களால் வெற்றி கொள்ள முடியவில்லை. "சுவாமி நீங்கள் கடவுள். உங்களை எப்படி வெல்ல முடியும்?" என்று சொல்ல சுவாமி, "நான் வெற்றிகொள்வதற்காக எனது தெய்வீக சக்தியைப் பயன்படுத்தவில்லை. நான் எண்ணம், சொல், செயலில் ஒற்றுமையைப் பேணுகின்றேன். அதனால் நான் நினைப்பது நடக்கிறது. எனது தூய்மையே சக்தியைத் தந்தது".

கிரிக்கட் வீரன் கிளைவ் வோயிட் (Clive Loyd) திறனெல்லாம் இறைவனின் கொடையென்று சொல்லியிருந்தார். சுவாமி இதைத் திருத்தி திறனெல்லாம் கொடையல்ல. திறனெல்லாம் தெய்வீகமே" என்று சொன்னார். எமது திறன்களை ஏனையோருக்கு உதவி செய்யப் பாவிக்க வேண்டும்.

**நெறியாளர் :**
ஏனையவர்களில் மகிழ்ச்சியைக் காண். தன்னலமில்லாது உதவிசெய். இது ஆனந்தக் கண்ணீரைத் தரும். பேராசைக்கு மருந்து சுவாமியே எல்லாம் செய்கிறார்" என்ற உணர்வேயாகும். பேராசை குறைய ஆணவச் செருக்கும் குறையும். பிழையோ சரியோ பற்று இருந்தால் பந்தத்தை ஏற்படுத்தும். இனி மோகம் அல்லது பற்றைப் பற்றிச் சிந்திப்போம்.

**டாக்டர் லதா ஸ்ரீ :**
ஒரு சாயி நிலையத்தில் இணைப்பாளர் தான் நினைத்தபடியே சகலதையும் செய்து வந்தார். ஏதாவது சொன்னாலும் கலந்தாலோசிப்பதில்லை. வித்தியாசம் இன்றி ஒற்றுமையாக எப்படிச் செயற்படுவது என எனக்கு மனதில் கிலேசம் ஏற்பட்டது. நான் இந்தக் கவலையுடன் நித்திரைக்குச் சென்றேன். சுவாமி கனவில், "அவர்கள் விரும்பியதைச் செய்யட்டும். நீ உனது கடமையைச் செய். சுவாமியினுடையதே சாயி நிறுவனம். வழியில் மோகம் கொண்டு இலக்கை மறக்கக்கூடாது. உனது பாத்திரத்தை செவ்வனே நடிக்கவும். அதை சுவாமிக்கு அர்ப்பணிக்கவும். செய்வதிலே ஆனந்தத்தைக் கண்டுகொள். பலனில் அல்ல." என்று சொன்னார்.

**நெறியாளர் :**
நான் நாடகங்களில் நடிக்கும்போது நடிப்பு இருக்கும் பாத்திரத்தையே விரும்பினேன். உதாரணமாக புத்தபெருமானைவிட அங்குலிமாலாவின் பாத்திரத்தையே விரும்பி நடித்துள்ளேன். வாழ்வே ஒருநாடகம் என்று மறந்து விடுகிறோம். நாங்கள் சுவாமியிலிருந்து எம்மை பிரித்துக் கொள்கிறோம். இனி பொறாமையைப் பற்றிச் சிந்திப்போம்.

**பேராசிரியர் கங்காதர சாஸ்திரி :**
பொறாமை எல்லோரையும் தாக்குகிறது. இதனால் வரும் துயரம் பெரிது. எமது கிட்டிய சுற்றத்தார் மீதும் பொறாமை எழலாம். சுவாமி ஒருமுறை கேட்டார், "பெரிய செல்வந்தனின் கால்களையா சந்நியாசியின் கால்களையா வணங்குவீர்கள்?" சந்நியாசியின் கால்களையே பிடிப்போமென்று சொன்னோம். நாங்கள் எங்களுக்குக் கிடைத்த ஆசீர்வாதங்களால் மனத்திருப்தியடைய வேண்டும்.

ஒருநாள் கற்பித்துக் கொண்டிருக்கும் போது சுவாமி வகுப்பிற்குள் நுழைந்து பின்னுக்கு இருந்தார். இடையிலே என்னை நிற்பாட்டி,

"உரிமைக்கு முக்கியத்துவம் கொடுக்கக்கூடாது. கடமைக்கே முக்கியத்துவம் கொடுக்கவேண்டும்" என்று பிள்ளைகளுக்கு படிப்பிக்கச் சொன்னார். அல் றக்கர் (Al Drucker) என்ற பக்தன் தான் சுவாமி சங்கிலி மோதிரம் சிருஸ்டிக்கும்போது "படைப்பைப் பார்ப்பதில்லை. சுவாமியின் கைகளிலேயே தன் கவனம் இருக்கும். கையைப் பிடித்தால் கூடக் கிடைக்கும்." என்று சொன்னார்.

நேர்காணல் அறையில் சுவாமி டாக்டர் அப்துல் கலாமிற்கு கதிரையில் அமரும்படி சொன்னார். கலாம் அவர்கள் உடனே நிலத்தில் சுவாமியின் காலடியில் அமர்ந்து விட்டார்.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவாமி சிருஸ்டித்த விபூதியை மகாபிரசாதம் என்று சொல்லி வேண்டிக் கொண்டார். தான் ஒரு சேவகனாக சுவாமியிடம் சமர்ப் பிப்பதாகச் சொன்னார். பொறாமை இல்லாது சேவகனாகச் சேவை செய்தால் உலகம் எம்மை மதிக்கும். அவதாரங்களே பணிவுடன் சேவகனாகச் சேவை செய்துள்ளார்கள். நான் ஏன் ஒரு வேலையைச் செய்ய வேண்டும்? என்று கேளாமல் நான் ஏன் அந்த வேலையைச் செய்யாமலிருப்பது? என்றே கேட்க வேண்டும்.

மற்றவர்களிடமிருந்து சேவையைப் பெற்றால் எமக்குப் பாதகமாகவே விளையும். நாம் சேவையைச் செய்து எம்மைப் புனிதப்படுத்திக் கொள்ளவேண்டும். சுவாமி, ஆசிரியர்களை, மாணவர் களின் விடுதியில் கோப்பை கழுவச் சொல்லியுள்ளார்.

**நெறியாளர் :**
5 புலன்களில் நாம் இரண்டை (கண்கள், நாக்கு) மூடலாம். நாக்கிற்கு இரு தொழில்கள் (சுவை , பேச்சு) உண்டு. மாயா சக்தி நாக்கினிலேயே நடனம் ஆடுகிறது. உண்மையில்லாததை உண்மை என்று ஏற்றுக்கொள்ள வைக்கும். நான் எதையும் செய்வேன் என்ற மனப்பாங்கு இருக்கவேண்டும். எமது எண்ணங்களை நாம் தெரிவு செய்து செயலில் இறங்குவதே வழக்கம். தனது புகைத்தல் பழக்கத்தை எவ்வாறு நிற்பாட்டினார் என்று சொன்னார்.

**சாயி கிரிதர் :**
கோடைக்கானலுக்கு சுவாமி அழைத்துச் சென்றார். ஞாபகத் திற்காக மாணவர்களுக்கு ஏதாவது ஒருபொருள் கொடுப்பார். ஒருமுறை கைக்கடிகாரம் எல்லோருக்கும் கொடுத்தார். எனது மனதில் மணிக்கூடு வேண்டாம். சுவாமியின் கைகள்தான் வேண்டுமென்ற எண்ணம் ஓடிக்கொண்டிருந்தது. சில நாள்களுக்குப் பின்பு என்னையும் வேறு சிலரையும் கூப்பிட்டுக் கொடுத்தார். அந்த கைக் கடிகாரம் ஒரு பெட்டியில் அடைக்கப்பட்டிருந்தது. வெளியில் கடினமான பொருள். அதனுள்ளே புத்தி. இன்னும் உள்ளே ஆனந்தம்" இவ்வாறு சுவாமி விளக்கம் கொடுத்தார். வெளிப்பெட்டி நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கவேண்டும். இதுதான் உடம்பு.

**டாக்டர் லதாசிறீ :**
நான் எப்போதும் நாமஸ்மரணையில் இருக்கவேண்டுமென்ற ஆசை. சுவாமி என்னை சத்தியசாயி பொது வைத்தியசாலைக்குள் கொண்டுவந்து சேர்த்தார். நாமம் ரூபத்திலும் பார்க்கச் சக்தி வாய்ந்தது.


**நெறியாளர் :**
நாங்கள் சுவாமியை வேண்டி கண்ணீர்விடவேண்டும். ஒருமுறை மாணவன், தபேலா அடிப்பவர். சுவாமிக்கு அருகே இருக்கவாய்ப்பில்லை. என்று அழுதுகொண்டு தூரத்தில் இருந்தார். சுவாமி அவரைக் கூப்பிட்டு முன்னே இருக்கச் சொன்னார். சுவாமி, "எனது தரிசனத்தின்போது, யார் எனக்காக அழுகிறார்களோ அவர்களைக் கவனிப்பேன்" என்று கூறியுள்ளார்.

இப்போது பேராசிரியர் தனது அனுபவத்தைச் சொல்வார்.

" 1979 ஆம் ஆண்டு சுவாமியிடம் வந்தேன். எனக்கு சுவாமியைப் பற்றி ஒன்றும் தெரியாது. அரசியல் விஞ்ஞானத்தில்தான் பட்டம் பெற்றிருந்தேன். சுவாமியின் பாடசாலையில் ஆசிரியர் பதவி கிடைத்தது. புகைத்தலுக்கு அடிமையாக இருந்தேன். சுவாமி என்னை அதிலிருந்து விடுவித்தார். என்னை அறியாமலே அவர் மீது தீவிர அன்பு வெளிக் கிளம்பியது".

குருவைப் பின்பற்றுவோம். அவரின் வழிகாட்டல்களைப் பின்பற்றுவோம். எமது வாழ்வு அவரின் செய்தியாக மாறட்டும்.

ஜெய் சாயிராம்




FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கேள்விகளும் பதில்களும்



**வளவாளர்கள் :**

1. டாக்டர் சத்திய ராவோ
   மருத்துவர், மலேசியாவில் வசிப்பவர்.
   பிரதேசம் - IVA & B, இளைஞர் இணைப்பாளர்.
2. சாயி சகோதரி றோஸினி விஸ்வநாதன்
   மலேசியா இளைஞர் அணித்தலைவி.
   சாயி ஆன்மீகக் கல்விக் குரு, மனிதவள ஆலோசகர்
3. நெறியாளர் - சாயி சகோதரன் ஹரிதாஸ்,
   மலேசிய தேசிய இளைஞர் தலைவர்
   ம.மே.கல்வி, சாயி ஆன்மீகக் கல்வி பயிற்சியாளர்.

**நெறியாளர் :**
இந் நிகழ்வை முன்னின்று வழி நடத்துமாறு சுவாமியைப் பிரார்த்தித்தார். நீங்கள் இருவரும் உங்கள் தொழிலில் உயர் நிலையை அடைந்துள்ளீர்கள். கடந்த ஒரு வருடமாக ஓய்வில்லாமல் முழு அர்ப்பணிப்புடன் இந்த மாநாட்டை ஒழுங்குபடுத்துவதற்கு செயற்பட்டீர்கள். இது எப்படி முடிந்தது?

**டாக்டர் சத்தியா :**
சாயி நிறுவனமே எனது உயிர். நல்லவையெல்லாம் சுவாமியால் நிகழ்கின்றது. நிறுவனம் ஊடாக நிலையம் ஊடாக நான் பலதைக் கற்றுக் கொண்டேன். நிலையத்தில் அன்பு பொறுப்பு, மகிழ்ச்சி என்பவற்றை கற்று வளர்ச்சியடைந்துள்ளேன்.

**சகோதரி றோஸினி :**
சுவாமி தான் என்னைக் கண்டு கொண்டார். படத்தை வழிபட்டு அவர் கடவுள் என்பதில் நம்பிக்கை கொண்டேன். எமது சுவாமி அறையில் கிரமமாக வணங்குவோம். நிறுவனத்தில் பலருடன் சேரும் பொழுது எனது குற்றங்களை மற்றவர்கள் மூலம் அறிந்து எனது தன்னம்பிக்கையை வளர்த்துக் கொண்டேன். தொழில் புரிவதற்கும் சாயி சேவைக்கும் இடையே இடைவெளி வரப்படாது.

**நெறியாளர் :**
குடும்பத்தவர் சாயியில் நம்பிக்கை இல்லாவிட்டால் அது பெரும் தடையாக இருக்கலாம். பெற்றோர்கள் நாங்கள் செய்யும் செயல்களைப் பார்த்து எமது மனப்பாங்குகள் ஆகியவற்றை உணர்ந்து மனம் திரும்புவார்கள். பெற்றோர்களுடன் அன்புகலந்த உரையாடல் இருக்கவேண்டும்.

**டாக்டர் சத்தியா :**
நான் அதிர்ஸ்டசாலி. பல தலைமுறை சுவாமியின் அன்பர்களாவோம். சாயி பக்தனில் எவ்வளவோ எதிர்பார்ப்புகள் அவனிலும் ஏனையோரிலும் இருக்கும். 3வயதிலேயே சுவாமியைப்பற்றி அறிந்தேன். மேலும் 12 வருடங்களிற்குப்பின்பே சுவாமி தான் எல்லாம் என்பதை அறிந்தேன். சுவாமியுடன் நேரடித் தொடர்பு கொள்ளக் காலம் எடுத்தது. கருத்து எடுபட்டாலும் அது உயர் உணர்வாக மாறுவதற்கு காலம் எடுக்கும். பெற்றோர்களுக்குப் பிள்ளைகள் நல்லவர்களாக இருக்க வேண்டும் என்பதே முக்கிய எதிர்பார்ப்பாகும்.

**நெறியாளர் :**
சுவாமியுடன் எப்படித் தொடர்பை ஏற்படுத்தலாம்? என்பதே பலரின் கேள்வியாகும்.

**சகோதரி றோஸினி :**
சுவாமி எப்போதும் எங்களுடன் தொடர்பு கொண்டிருக்கிறார். அதை நாம் உணர்வதில்லை. பக்தியில் தொடங்கி, சேவை மூலம், உயர் உணர்வைப் பெறலாம். பாலவிகாஸ் கல்வி, சாயி இலக்கியங்கள் றேடியோ சாயி, உலக இளைஞர் அமைப்புகளுடன் தொடர்பு கொண்டு எம்மை விருத்தி செய்யலாம்.

**டாக்டர் சத்தியா:**
பக்தி அகத்தில். தொடர்பும் அகத்திலேயே உள்ளது. நாம் வட வியட்நாமிற்குப் போய் மருத்துவ முகாம் நடத்தினோம்.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்களுக்கு எவ்வளவோ ஆனந்தம். அந்த ஆனந்தம்தான் சுவாமி.

**நெறியாளர் :**
தொடர்பைப் பற்றி மனதைக் கலக்க வேண்டாம். மன அடக்கத்துடன் இருங்கள். சுவாமி அற்புதங்கள் நிகழ்த்துவார்.

கேள்வியொன்றை வாசித்தார். நிறுவன நிலைய உத்தியோகத்தர்கள் பலர் சுவாமியுடன் நெருக்கமாக இருந்துள்ளார்கள். அவர்களின் பேச்சும் தேக அசைவும் எங்களுக்கு ஏமாற்றத்தைத் தருகின்றன. இதை ஏன் சுவாமி அனுமதிக்கிறார்?

நாம் என்ன செய்யவேண்டுமென்று சுவாமிக்குத் தெரியும். வெளியில் பார்ப்பதெல்லாம் நமக்குள்ளே இருப்பவைதான். தலைமைத்துவத்தை எதிர்க்கக் கூடாது. நல்லதை ஏற்றுக் கொண்டு தீயதை விடவேண்டும். நிர்வாகிகளில் வெளிப்படுபவை எமக்குப் படிப்பினைகளைத் தருகின்றன. எமக்கு தந்த பொறுப்பை மறக்கவோ உதாசீனம் செய்யவோ கூடாது. எமது பயணம் சுவாமியை நோக்கியே என்ற நினைவு நிலைத்திருக்கவேண்டும்.

**நெறியாளரின் கேள்வி :**
எப்படி குடும்பத்தையும் தொழிலையும் சுவாமியின் வேலையையும் சமநிலைப்படுத்தலாம்?

**டாக்டர் சத்தியா :**
இது இலேசான விடயமல்ல. எங்கள் எல்லோருக்கும் 24 மணித்தியாலமே உண்டு. இதில் நாம் அவசரமானது தேவையானது எவை என்று முன்னுரிமை கொடுத்துச் செய்து முடிக்க வேண்டும். ஒன்றை ஒரு நேரத்தில் செய்வதும் முன்னுரிமைப்படி செயல்களைத் தெரிவதுமே தேவை. எனக்கு மருத்துவப் படிப்பு கடைசி வருடச் சோதனை. வீட்டுப்பொறுப்பு. வெள்ள நிவாரண சேவை. புத்த பூர்ணிமாவுக்கு நாடகம் இவற்றையெல்லாம் வெற்றிகரமாகச் செய்து முடித்துச் சோதனையிலும் அதிசித்தி பெற்றேன். இதெல்லாம் சுவாமியின் கிருபையே ஆகும்.

**நெறியாளர் :**
எல்லாவற்றையும் வெற்றிகரமாகச் செய்து முடிப்பது இலேசானதல்ல. சுவாமி தன்மீதுள்ள நம்பிக்கையையும் தளர்த்திப் பார்ப்பார். ஆனால் அவரே செயலைச் செய்வதற்குரிய ஆற்றலையும் தருவார். அவர் தாய்போல. உங்களுக்கு பொறுப்பு கிடைத்ததும் ஏற்றுக்கொள்ளவேண்டும். விருப்பு இருக்க வேண்டும். சுவாமி மிகுதியைத் தருவார்.

**டாக்டர் சத்தியா :**
ஒரு மணித்தியாலம் படித்தால் மீட்டுப் பார்க்க வேண்டும். அப்படிச் செய்தால் நீண்டகால ஞாபகமாக மாறும். தொடக்கத்தில் சுவாமியைப் பிரார்த்திக்கவும். எமது செயல்கள் பூரணமாகவும் வெற்றியாகவும் நடக்கும்.

**நெறியாளர் :**
பலர் சைவ உணவைப் பற்றிக் கேட்டுள்ளார்கள். இது கொஞ்சம் சங்கடமானது தான்.

**சகோதரி றோஸினி :**
நான் 2006ஆம் ஆண்டு மாமிசத்தைக் கைவிட்டேன். முதலில் கிழமையில் ஒரு நாள். இரண்டு நாள். மூன்று நாள் என்று நீடித்து மாமிசத்தைக் கைவிட்டேன். சுவாமியை மகிழச் செய்ய வேண்டும் என்ற ஆசை உச்சத்தில் இருந்தால் எல்லாம் முடியும்.

மாறுவதற்கு விருப்பம் ஏற்பட்டால்
எமது சந்தேகங்களுக்குத் தெளிவு
கிடைக்கும்.

ஜெய் சாயிராம்





FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# என்றும் மறக்கமுடியாத கணப்பொழுதுகள்

Dr. தீபக் ஆனந்த்

(பிரசாந்தி நிலையத்தில் வித்வான் மகாசபாவின் முடிவில் 24.10.2012 அன்று Dr. தீபக் ஆனந்த் அவர்கள் ஆற்றிய உரை. அவர் பகவானின் உயர் கல்வி நிறுவனத்தில் MBA, Ph.D பட்டங்கள் பெற்று அங்கேயே சிரேஸ்ட விரிவுரையாளராகவும் கடமை ஆற்றுகிறார்.)

ஓம் ஸ்ரீ சாயிராம்! அளவிலா அன்புடனும் பணிவுடனும் என்னை எனது அன்பான சாயி மாதாவின் கமலப் பாதங்களில் சமர்ப்பிக் கின்றேன்.

மதிப்பிற்குரிய பெரியோர்களே! அன்பான சகோதர சகோதரிகளே! அனைவருக்கும் சாயிராம்.

நாம் அனைவரும் ஆன்மீகப் பாதையில் செல்லும் சக பயணிகளே. இப் பயணத்தில் சிறு தடங்கல்கள் ஏற்படலாம். எங்களுக்கு முன்னே தான் நாம் அடையவேண்டிய இலக்கு உள்ளது. முன்னே இருந்தாலும் சில அடிப்படைக் கேள்விகள் நாம் கேட்டு மறுமொழி கண்டேயாக வேண்டும். இக் கேள்விகளை நாம் உதாசீனம் செய்தாலும் திரும்பத் திரும்ப எமது மனதில் எழுந்து கொண்டே இருக்கும். எமது பயணத்தில் முன்னேறுவதற்கு இக் கேள்வி களுக்கு மறுமொழி கண்டேயாக வேண்டும். இந்த அடிப்படைக் கேள்விகள் எவை? **முதலாவது "நீ யார்?"** என்ற கேள்வியைக் கேட்டு பதில் அறிய வேண்டு மென்று சுவாமி சொல்லியுள்ளார். எப்பொழுது இந்தக் கேள்வியை நாம் கேட்டுள்ளோம்? அப்படிக் கேட்டிருந்தாலும் எவ்வளவு ஆர்வமும் தவிப்பும் இருந்தது? எமது பகவானுடன் முதல் சந்திப்பு 1997ஆம் ஆண்டு நான் MBA மாணவனாக இருந்தபோது நிகழ்ந்தது. அப்போது சுவாமி, **"நீ எங்கிருந்து வந்தாய்?"** என்று கேட்டார். அதற்கு நான் "ஸ்ரீ அரவிந்தர் அவர்களின் கல்வி நிறுவனத்திலிருந்து வந்துள்ளேன். அங்கு நவம்பர் மாதம் 23ஆம் திகதியை வெற்றித் திருநாளாக ஒவ்வொரு வருடமும் கொண்டாடுவோம். சுவாமி நீங்கள் உலகில் அவதரித்த அன்று 23.11.1926 ஸ்ரீ அரவிந்தர் அவர்கள் தனது 12 வருட தியானத்திலிருந்து வெளியே வந்து இன்றைய நாளை வெற்றி நாளாக கொண்டாடுங்கள். கிருஸ்ண பரமாத்மா இன்று உலகில் அவதரித்துள்ளார் என்றும் கூறித் திரும்பவும் அறைக்குள் சென்று தியானத்தில் ஆழ்ந்தார். அவருக்கு ""நீங்கள் கடவுள் என்பது தெரிந்துவிட்டது"" என்று சுவாமியிடம் கூறினேன். சுவாமி சில வினாடிகள் மௌனமாக இருந்துவிட்டு என் கண்களை உற்று நோக்கி சிரித்துக்கொண்டே **"நான் கடவுள் என்பது அரைவாசி உண்மை. மிகுதியான உண்மை நீயும் கடவுள்தான் என்பதேயாகும்.** எனக்கு நான் கடவுள் என்று தெரியும். நான் நீயும் கடவுள் என்று சொல்வதை நம்புகிறாயில்லை" என்று கூறினார். நான் அன்று தொடக்கம் நானும் கடவுள்தான் என்று நினைக்கத் தொடங்கினேன். எனக்கு ஒரு எண்ணம் முட்டுக் கட்டையாயிருந்தது. நானோ கண்ணாடி போடுகிறேன். சுவாமி கண்ணாடி போடுவதில்லை. அப்படியாகில் நானும் சுவாமியும் ஒன்று என்று எப்படி ஏற்றுக் கொள்வது. எமது தேகாபிமானம் எல்லோருக்கும் ஒரு தடையாகத் தான் இருக்கும். அதிர்ஸ்டவசமாக அவ் வருடம் சுவாமி என்னையும் கோடைக்கானலுக்கு அழைத்துச் சென்றார். சுவாமி ஒருநாள் அறையிலிருந்து வெளியே வந்து மாணவர்களுடன் கதைத்துவிட்டு திடீரென எனது கண்ணாடியை எடுத்து மாட்டிக்கொண்டு என்னை உற்றுநோக்கி "இப்ப கண்ணாடி போட்ட சுவாமியைப் பார்த்தாயா?" என்று கேட்டார். சிலைகளையும் படங்களையும் கடவுள் என்று நினைத்து ஆராரத்தியும் காட்டிக் கும்பிடுகிறோம். ஏன் மனித உருவம் கடவுளாய் இருக்க முடியாது. கும்பிடுவதெல்லாம் ஒரு காட்சிப் பொருளையே "ஆனால் உண்மையான நிலை **"நீங்கள் எல்லோரும் சத்திய சாயி பாபாவாக மாறுகிறீர்கள்** என்பதேயாகும். முதற்கேள்வி "நீ யார்?" என்ற கேள்விக்கு மறுமொழி கிடைத்துவிட்டது. "நாங்கள் எங்கே?" என்ற இரண்டாவது கேள்வியைப் பரீசீலிப்போம். நாங்கள் எல்லோரும் இருக்கும் பொழுது ஒரு நீண்ட கால பக்தர் சுவாமியிடம், "நாங்கள் நாள் முழுவதும் பிரார்த்தனை, சேவை என்று சாதனைகள் செய்கிறோம். எந் நிலையில் நாம் இருக்கிறோம் என்று எப்படி அறிவது?" என்று கேட்டார். உடனே சுவாமி, **"உன்னிடம் உள்ள அன்பு எவ்வளவு ஆழமாக உள்ளது?**

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எவ்வளவு தன்னலமற்றது. எவ்வளவு விரிவடைந்துள்ளது என்பதைப் பார்த்தால் தெரியும்"** என்று பதிலளித்தார். சுவாமியினுடைய போதனைகள் எல்லாம் அவரின் வாழ்க்கைச் செய்தி.எல்லாமே அன்பு என்ற வார்த்தையிலே அடங்கியுள்ளன.

10 வருடங்களுக்கு முன்பு இந்தப் போட்டிக்கோவில் கீழே இருந்தபோது சுவாமி கடிதங்கள் எடுத்துக் கொண்டும் கதைத்துக்கொண்டும் வந்தார். MSc முதலாம் ஆண்டு படிக்கும் மாணவனிடம் "நீ எப்படி?" என்று கேட்ட மாத்திரத்தே (படிப்புக் கஸ்டமோ அல்லது குடும்பக் கஸ்டமோ தெரியாது) "சுவாமி உங்களுடன் இரண்டறக் கலக்க வேண்டும்" என்று சொன்னான். அதற்கு சுவாமி "மிகவும் நல்லது. முதலில் என்னைப் போல மாறவேண்டும். நான் அன்பே உருவானவன். உதாரணமாக சந்தன எண்ணையை நீரில் போட்டால் கலக்காது. சந்தன எண்ணையை சந்தன எண்ணையில் போட்டால் உடனே கலந்து விடும்" என்று பதிலளித்தார். இதைத் தடுப்பது மனமே. மனம் என்ன செய்கிறது? தொடக்கத்தில் எமக்குத் தூய அன்பு தரப்பட்டிருந்தது. மனம் அதை உடைத்துவிட்டது. பழைய நிலைக்கு கொண்டுவருவதற்கே சாதனைகள் பல செய்கிறோம். தூய அன்பைத் திரும்பவும் ஆண்டவனிடமே சமர்ப்பிக்க வேண்டும். உன்னிலுள்ள அன்பை அறிவதற்கு நான் ஒரு சூத்திரம் (Formula) தருகிறேன். என்று கூறி, நித்திரைக்குப் போகமுன்பு, எத்தனை ஆசைகள் இன்னும் இருக்கின்றன என்று ஆராய்ந்து பார். பணம், செல்வம், அதிகாரம், அந்தஸ்து ஆகிய ஆசைகள் இருந்தால் சுவாமியிடம் போதியளவு பக்தி (அன்பு) இல்லையென்பதே அர்த்தம். சுவாமி மனதை அடக்கி மனதின் எஜமானனாக வரவேண்டுமென்றால், ஆண்டவன்மேல் அளவிலா பக்தி கொள்ளவேண்டும் என்ற யுக்தியையும் சொல்லியுள்ளார். ஆன்மீக முன்னேற்றத்திற்கு பல வழிகள் உண்டு. **அன்பைப் பெருக்குவதற்கு எந்தப் பாதை மிகவும் சிறந்தது என்பதே எம்மில் எழும் மூன்றாவது கேள்வியாகும்.**

நவராத்திரியின் போது சில வேளைகளில் பகவான் ஏழுநாள்களும் அருளுரை வழங்குவார். ஒரு வருடம் பகவான் முதலாவது நாள் கர்ம மார்க்கமே சிறந்ததெனக் கூறினார். பழைய கர்மாக்கள் உடலிலே முள் மாதிரி பதிந்துள்ளன. நல்ல கர்மம் என்ற முள்ளினால் உடலிலுள்ள முள்களையும் அகற்றி எடுக்க பாவித்த முள்ளையும் கைவிடவேண்டும் என்று விளக்கம் கொடுத்தார். இரண்டாவது நான் அருளுரையில் பக்தி மார்க்கமே சிறந்ததெனக் கூறினார். செயல்களில் ஓரளவு அகங்காரம் கலந்திருக்கும். நல்ல செயல்களுடன் அகங்காரம் சேர்ந்திருந்தால் பவுண் சங்கிலியால் கட்டுப்போடப்பட்டுவிடும். தீய செயல்கள் அகங்காரத்துடன் கலக்கும் போது இரும்புச் சங்கிலியால் கட்டுப்போடப்பட்டுவிடும். ஆகவே கர்ம மார்க்கத்தி னாலும் நாம் வினைப் பயனுடன் கட்டுண்டுவிடலாம். ஆகவே, ராதா,மீரா, இராமகிருஸ்ண பரமஹம்சர் பின்பற்றிய பக்திப் பாதையே கலியுகத்திற்கு மிகவும் சிறந்தது என்று விளக்கம் கொடுத்தார். மூன்றாவது நாள், ஞான மார்க்கமே சிறந்ததெனக் கூறினார். கர்ம மார்க்கப் பயணம் நடை வேகமென்றால் பக்தி மார்க்கம் கார் வேகமாகும். மேலும் ஞானமார்க்கம் ஆகாய விமானத்தின் வேகமாகும் என்று விளக்கம் கொடுத்தார்.

அடுத்தநாள் பிரசாதத்தை பக்தர்களுக்கு விநியோகிக்க முன்பு பகவானின் ஆசீர்வாதம் பெறுவது வழக்கம். எனது முறை வந்ததும் பகவானைக் கேட்டேன், "சுவாமி நீங்கள் எல்லா மார்க்கங்களும் சிறந்தவையே என்று சொன்னீர்கள் அது எப்படி?" சுவாமி உடனே நீ ஏணியைப் பார்த்தாயா? அது எப்படி செய்யப்பட்டுள்ளது. நான் இரண்டு நீண்ட கம்புகளும் இடையிடையே பல சின்ன கம்புகளும் பொருத்தப் பட்டிருக்குமெனச் சொன்னேன். சுவாமி இரண்டு பெரிய கம்புகளும் பக்தியும் ஞான மார்க்கமுமாகும். ஏறும் சிறிய படிகள்தான் கர்ம மார்க்கம். உனக்கு இஸ்டமான பாதையை தெரிந்து செல்லவும். ஒன்றில் தீவிரமாக முயற்சி எடுத்து முன்னேறும் பொழுது ஏனைய பாதைகளின் விளைவுகளும் வந்து சேரும்.

**நாலாவது கேள்வி எந்த ரூபம் தியானத்திற்கு மிகவும் பொருத்த மானது?** என்பதேயாகும். நாம் பல உருவங்களில் தெய்வத்தை வழி படுகிறோம். இத்துடன் சுவாமியின் உருவம் வந்ததும் சில வேளைகளில் கலக்கம் ஏற்படலாம். 2001ஆம் ஆண்டு பகவான் அதிகாலையில் தனது நேர்காணல் அறையிலிருந்து ஆராய்ச்சி செய்யும் பட்டப் பின் படிப்பு மாணவர்களை அழைத்தார். அப்பொழுது காலை 6.15இருக்கும். நாம் எல்லோரும் ஓடிப்போனோம். அங்கே சுவாமி 45 நிமிடங்கள் வரை

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அசையாது எங்களையும் கவனிக்காது கண்மூடியபடி இருந்தார். திடீரென கண்முழித்து இன்று என்ன நாள்? என்று கேட்டார். நாங்கள் ஆகஸ்ட் மாதம் 6ஆம் திகதி என்று சொன்னோம். அந்த நாளில் என்ன நடந்தது? எமக்குத் தெரியவில்லை. அன்றுதான் யப்பானில் அணுகுண்டு வெடித்தது. ஒசாக நகரத்தில் பல பிள்ளைகள், இனிமேல் இப்படி ஒன்று நிகழக்கூடாதென பிரார்த்தனை செய்கிறார்கள். நான் அவர்களின் பிரார்த்தனையைக் கேட்கப் போய் வந்துள்ளேன். அங்கே அந்த நாட்டுப் பிள்ளைகள் தங்களின் தெய்வங்களுக்கே பிரார்த்தனை செய்தார்கள். ஆனால் பிரசாந்தி நிலையத்திலிருந்த சுவாமி ஓடிப்போயுள்ளார். ஆகவே **என்ன உருவத்தில் வழிபட்டாலும் அது சுவாமியைச் சென்றடையும்.**

இனி நம்முள் எழும் கேள்வி **"எந்த மந்திரம் சிறந்தது?"** என்பதேயாகும். ஒரு முறை சுவாமியின் மாணவன் தனக்கு மந்திர உபதேசம் செய்யும்படி கேட்டான். "நான்" அனைவரிலும் அன்பாயிரு அனைவருக்கும் சேவை செய், எப்போதும் உதவி செய் ஒருபோதும் தீங்கு செய்யாதே" என்ற மந்திரத்தை முன்னரேயே தந்துள்ளேன்" என்று சுவாமி கூறினார். மாணவன் தனக்கு என்று பிரத்தியேகமான மந்திரம் தரும்படி கேட்டான். ஆன்மீகத்தில் தனிப்பட்ட மந்திரம் என்று இல்லை. கிருஸ்ண பகவான் அர்ஜுனனுக்கு பகவத் கீதையை எல்லா மானிடருக்குமாகத் தானே போதித்தார். எப்படியிருந்தாலும் உனக்கென நான் தரும் மந்திரம், **"எப்போதும் அன்பும் புன்சிரிப்பும்"** என்பதேயாகும். பகவான் எப்போதும் தனது அன்பையும் புன்சிரிப்பையும் அள்ளிக் கொடுத்தபடியே இருப்பார்.

ஒருமுறை பாதுகை பூசை பிரசாந்தி நிலையத்தில் நிகழ்ந்தது. அப்போது நாம் நேர்காணல் அறையில் இருந்தோம். சுவாமிக்கு சேவை செய்யவேண்டுமென்று கேட்பீர்கள். பாத பூசை என்றால் என்ன? என்று எம்மிடம் கேட்டார். சுவாமியின் பொற் கமலப் பாதங்களுக்குச் சேவை செய்வதே என்று சொன்னோம். அது வேறு கருத்து. கடவுள் அவதரிக்கும் பொழுது தனது பாதங்களை **அன்பு, சேவை என்ற இரு அடிச் சுவடுகளைப் பதிப்பார்.** இவ்விரண்டையும் தீவிரமாகப் பின்பற்றி அவரின் அடிச் சுவடுகளில் பயணித்தால் கடவுளை நாம் அடையலாம் என்று சுவாமி விளக்கம் தந்தார்.

எமது அனுபவங்களை ஏனையோருடன் பகிர்ந்து கொள்ள வேண்டும். மேலே ஆராயப்பட்ட கேள்விகளில் பதில்களை நாம் வாழ்க்கையில் பின்பற்றி ஆன்மீகப் பயணத்தில் வெற்றியடைய பகவான் சாயி மாதாவிடம் பிரார்த்திப்போம். எமது மூச்சு இருக்கும் வரை பூரணமான அர்ப்பணிப்புள்ள கருவிகளாகத் திகழ்வோம். அவருடன் ஒன்றாகுவோம்.

ஸமஸ்த லோகா சுகினோ பவந்து

ஜெய் சாயிராம்

நன்றி : www.theprasanthireporter.org 2012

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயி மாணவன் யார்?



திரையி பிருந்தாவனில் சத்சங்கத்தின்போது சுவாமி விளக்கம் கொடுத்தார். சாயி கல்வி நிறுவனத்தில் படிப்பதால் சாயி மாணவராக இருப்பதில் உத்தரவாதமில்லை. அங்கே பாடவிதானத்தின்படி கல்வியைக் கற்று வைக்கப்பட்ட பரீட்சைகளில் சித்தி எய்தி படிப்பு முடிந்தவுடன் சாயி கல்வி நிறுவனத்தால் சான்றிதழ் வழங்கப்படும். அது மாணவன் அக் கல்வி நிறுவனத்தின் மாணவன் என்பதை உறுதிப்படுத்தும். இதேபோன்று எனது என்ற நிலையை அடைவதற்கு நான் கொடுத்த பாடவிதானத்திலுள்ளதை நன்றாகப் படித்து அங்கே எழும் பரீட்சைகளில் சித்தி எய்தி நானும் திருப்தி கொண்டால் எனது மாணவன் என்ற நிலையை நான் அளிப்பேன். இதைக் கேட்டதும் மாணவர்கள் எல்லோரும் நாங்கள் சுவாமியின் கல்வி நிறுவனத்தின் மாணவர்களா? அல்லது சுவாமியின் மாணவர்களா? என்று விசாரணை செய்யத் தொடங்கினார்கள். சாயி நிறுவனத்தில் சேராதவனும் சாயி மாணவன் என்ற அந்தஸ்தை அடையலாம். சிரேஸ்ட விரிவுரையாளர் அப்போது இந்தக் கல்வி நிறுவனத்தில் மாணவனாக இருப்பதில் என்ன விசேடம் ?" என்று கேட்டார். அவர்கள் எல்லோருக்கும் அதிஉயர் வாய்ப்பு கொடுக்கப்பட்டுள்ளது. எனது அருகிலிருந்து எனது வழிகாட்டல்களை நேரடியாகக் கேட்டுப் பின்பற்ற அதிர்ஸ்டமான சந்தர்பபம் கொடுத்துள்ளேன். இது சிலருக்குத்தான் கொடுக்கப்பட்டுள்ளது. எல்லோரும் "சாயி மாணவன்" என்ற நிலையை அடையலாம். ஆகவே மாணவர்கள் எதையும் மேலோட்டமாகச் சிந்திக்கக்கூடாது. மிகவும் அவதானத்துடனும் நிதானத்துடனும் சுவாமி சொன்னதைப் பின்பற்ற வேண்டும்.

ஜெய் சாயிராம்

நன்றி : Moment .... Truth with Sathya Sai
by Bishu Prusty




மார்ற்றின் ஒரு கிறிஸ்தவ பக்தன். ஒருநாள் விவிலிய நூலை நெஞ்சில் வைத்துக் கொண்டு தூங்கி விட்டார் திறக்கப் பட்டிருந்த பக்கத்தில் "நான் கதவைத் தட்டுவேன். இதைக் கேட்டு கதவைத் திறந்தால் நான் உள்ளே வந்து அவருடன் உணவு அருந்துவேன்"

பரலோலகத்தில் பிதாவுடன் சிம்மா சனத்தில் இருத்துவேன்" என்று குறிக்கப் பட்டிருந்தது.

இயேசுபிரான் கனவில் தேன்றி, "நான் நாளை வருவேன்" என்று சொல்லி மறைந்தார். மார்ற்றின் காலை எழும்பி சமையல் எல்லாம் செய்து விட்டு வெளியே வருகைக்காகக் காத்திருந்தான். அன்று பனி கடுமையாகப் பெய்தது. கடும்குளிர்.

வெளியே தெரு துப்புரவு செய்பவர் குளிரில் நடுங்கிய படியிருந்ததால் உள்ளே கூப்பிட்டு சூடான தேநீர் கொடுத்து உடம்பைச் சூடாகும் வரை இருக்க விட்டார். அவரும் நன்றி சொல்லிச் சென்றார்.

ஓர் மூதாட்டி தள்ளாடித் தள்ளாடி வந்தார். அவரை உள்ளே அழைத்து சூடுகாய வைத்து தனது உணவையும் கொடுத்தார். அவரும் நன்றி சொல்லிச் சென்றார்.

ஒரு வறுமையான தாய் பசியால் அழும் குழந்தையுடன் வந்தார். அவரையும் உள்ளே அழைத்து மிகுதி உணவையும் பாலையும் கொடுத்தார். அவரும் நன்றி சொல்லிப் புறப்பட்டார்.

மாலைநேரம் வந்து விட்டது. இனி இறைவன் வரமாட்டாரோ என்று நினைத்தார். வைத்திருந்த உணவும் பாலும் முடிந்து விட்டது. சடுதியாக கதவைத் தட்டும் சத்தம் கேட்டது. உள்ளே ஒரு பெரிய ஒளி தோன்றியது. அந்த ஒளியில் காலை வந்த மூவரின் உருவங்கள் தெரிந்தன. நான்தான் வந்தேன் என்று சொல்லி அவரை ஆசீர்வதித்துச் சென்றார். எல்லா ரூபங்களும் கடவுளே!

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஓர் மகா சக்தி

அன்பு ஒன்றே உலகை உய்விக்கும் சக்தி. அன்புதான் மனித குலத்தின் மாபெரும் உயிர்ப்பு. அன்பும் அருளும் தான் உலக இயக்கத்திற்கே காரணம். அருள் என்பது ஆழ்ந்த அன்பிலிருந்து உருவாகிறது. "அருள் எனும் அன்பின் குழலி" என்பது வள்ளுவரின் மணி வாக்கு. அனைத்து உயிர்களிடத்தும் காட்டுகின்ற அன்பானது இன்பமயமான உலகை சிருஸ்டிக்க வல்லது. எனவேதான் பாரதியும் "அன்பென்று கொட்டும் முரசே!" என்றே முழங்கினான்.

"அன்பின் வழியது உலகம் என்பது பொய்யாமொழி". சகலரையும் அனைத்தையும் ஒன்றிணைக்கும் அபார சக்தி வாய்ந்த அன்பினால் சாதிக்க முடியாத தென்று எதுவுமே இல்லை. அவ்வளவு தெய்வீகத்தன்மை நிறைந்தது அன்பு. இறைவனை அன்பின் மயமாகவே நாம் காணுகின்றோம். சமயங்கள் அனைத்தும் இக் கொள்கையில் உறுதியாயிருக்கின்றன. இறைவன் படைப்புக்கள் வெவ்வேறு வகையில் இருக்கலாம். ஆனால் அவை யனைத்தும் இறைவனின் வடிவங்களாகவே விளங்குகின்றன என்பது மதங்கள் காட்டும் உண்மை. "அன்பே சிவம்" என்பது தமிழ்யோகி திருமூலரின் சிவ நெறிக்கோட்பாடு. எல்லா உயிர்களும் சந்தோசமாகவும் சுகமாகவும் வாழவேண்டும் எனக் குறிப்பிடும் பௌத்தமதம் கருணை அன்பு என்ற பெருங் குணங்களை வலியுறுத்துகிறது. இஸ்லாம் மதமோ "உலகில் அன்பின் பெருவடிவம் அல்லாஹ்வே" எனச் சாற்றுகிறது. "உன்னைப்போல் உன் அயலவனையும் நேசி" என்ற கொள்கைதான் கிறிஸ்தவத்தின் உயிர்நாடி. உலகில் வாழும் உயிர்கள் அனைத்தும் எப்போதும் இன்பமாக வாழவே விரும்புகின்றன. ஆனால் அனைவராலும் அப்படி வாழமுடிவதில்லை. மனிதனும் ஏனைய உயிர்களும் இன்னலுக்கு ஆளாகின்றன. இது இயற்கை நியதி.

மற்றவர்களின் அன்பும் இரக்கமும் காட்டி வாழ்வதை விடுத்து சிலர் இன்னல் விளைவிக்கின்றனர். இந்நிலை மனுக்குலத்தினிடையே முற்றாக ஒழிந்து போய் அன்பு மயமாகும் நிலையே உருவாக வேண்டும். அகிலத்தை அன்பு எனும் கயிற்றினால் பிணைக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

அன்பினை வளர்க்கும் நிலையங்களான பாடசாலைகளும் கோயில்களும் மக்களுக்கு வழிகாட்டவேண்டும். பெற்று, வளர்த்து, பேணி எம்மை ஆளாக்கிய பெற்றோர் மீது நாம் செலுத்தும் அன்புதான் படிப்படியாகப் பிறரிடத்தும் மற்றைய உயிர்களிடத்தும் காட்டும் அன்பாக மிளிர்வது. "அன்புக்கு முண்டோ அடைக்குந்தாழ்" என்று வள்ளுவர் கூறுவதில் தான் எத்தனை அர்த்தமிருக்கிறது!

நாம் மற்றவர்களிடத்தும் பிற உயிர்களிடத்தும் அன்பு பாராட்டுவதை யாரால் தான் தடுக்கமுடியும்? எல்லை போட முடியும்? கண்டதும் இருவர் கொள்ளும் காதல் ஒருவகை. அது அன்பின் உறவு வழி. இறைவனிடம் நாம் கொள்ளும் அதி தீவிர அன்பு பக்தியாகிறது. தாயிடத்து பிள்ளை கொள்ளும் அன்பு பாசமாக பரிணமிக்கிறது. மக்கள் கொள்ளும் அன்பு வாஞ்சை எனப்படும். அன்புக்கு எதுதான் ஈடாகும்? தன் மகன் மீது கொண்ட அன்பின் மிகுதியால் தசரத மன்னன் உயிரிழந்த கதையை யார்தான் அறியார்? ஏகலைவன் தான் நேரில் காணாத குருவிடம் வைத்த அன்பினால் தன் விரலையே குருதட்சணையாகக் கொடுத்தான். கண்ணப்பனோ ஒருபடி மேலே உயர்ந்து அன்பின் எல்லைக்கே சென்று பிரபக்தியினால் தன் கண்ணையே இழந்து காளத்தியப்பனான சிவலிங்க திருமேனிக்கு அப்பினான். இவ்வாறு அன்பு நெறியின் பல்வேறு வடிவங்களைச் சமயகுரவர்களின் வரலாறுகளில் பார்க்கக் காணலாம். சிபிச் சக்கரவத்தியின் இரக்கமும் புத்த பகவானின் கருணையும் எப்பேர்ப்பட்டவை?

எதிரிகளை மன்னிக்கின்ற அன்பு உள்ளம் நிறைந்த காந்தியும் ஏழைகளுக்காகவே வாழ்ந்து அண்மைக் காலத்தில் மறைந்த தெரேசா அன்னையும் எம்மால் மறக்கமுடியாத அன்பின் அடையாளங்களே. எனவே மாணவர்களாகிய நாம் அன்பின் மகிமையை அதன் ஆற்றலை அதன் பரிமாணங்களை என்றும் பேணுபவர்களாக வாழ்ந்தால் எம் வாழ்வு நிறைவான வாழ்வாக மலரும் என்பதில் ஐயம் இல்லை.

பவிசாளினி சுஜிபன்

கட்டுரைப்போட்டி - பிரிவு 1, யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே மனித இயல்பு

அன்பு என்பது உள்ளத்தில் இருந்து சுரக்கும் ஊற்று. அது வற்றவே வற்றாது. அதை பெருக்கிக்கொண்டே இருக்கவேண்டும். இது தாய் தந்தைக்கிடையே தோன்றி பிள்ளைக்கும் பெற்றோருக்குமிடையே வளர்ந்து பின்னர் சகோதர சகோதரிகளிடையே பரிமாறப்படுகின்றது. தொடர்ந்து உறவினர், அயலவர், சமூகம், சமுதாயம் என அன்பு பரந்து விரிந்து செல்லும்போதுதான் அதன் உண்மையான இயல்பு வெளிப்படுகின்றது. மாறாக நான், எனது குடும்பம், எனக்கு வேண்டியவர் என அன்பு சுருங்கும்போது சொத்து, பிரிவு, பாகம் என பல வேதனைகள் வாழ்வில் சோதனைகளாக வருகின்றன.

சொத்தை பெருக்குவதற்காக நாம் அன்பின் இயல்பை சுருக்கக்கூடாது. அன்பின் இயல்பே மனித இயல்பு என அன்பை பெருக்குபவர்கள் சமூகத்தை நேசிப்பார்கள். தங்கள் தேவைகளை மறந்து பிறர் தேவையை தீர்க்க முன்நிற்கின்றார்கள். அவர்களுக்கு சமூகமே உலக சமுதாயமே குடும்பம். கோடி கோடியாக செல்வத்தை தேடியவர்கள் எல்லையில்லா அதிகாரத்தை கொண்டிருந்தவர்களின் பெயர்கள் எல்லாம் வரலாற்றிலிருந்து மறைந்துவிட்டன. அன்பே மனித இயல்பு எனப் போற்றிக் கொண்டிருந்தவர்கள் சுகபோகங்களை துறந்து வேலைசெய்பவர்கள் இன்னும் நினைவில் இருக்கின்றனர்.

அன்பே மனிதஇயல்பு என மனதில் நான் மட்டும் வைத்திருந்தால் போதாது அதை எல்லோருக்கும் பரப்பவேண்டும். பிறர் துயர் துடைக்க செய்வதே அன்பின் இயல்பு ஆகும். அன்பை செலுத்துவதால் எம்மிடமிருந்து எதுவும் குறைந்துபோய்விடாது. மாறாக நாம் இழந்துவிட்ட அமைதி மீண்டும் கிடைக்கும். மனைவி, பிள்ளைகள், குடும்பங்கள், வீடு வாசல்கள், காணியென வாழ்பவர்கள் சரியாக உறங்கமாட்டார்கள். அதற்கு காரணம் அவர்கள் தேடிய செல்வமே ஆகும். நாம் ஓர் கோடி கணக்கில் கொடுத்தாலும் கிடைக்காது அமைதி.

உன்னைப்போல் அயலவனையும் நேசி என்பது ஆன்றோர் வாக்கு ஆகும். இதற்கிணங்க நாம் நம்மையும் நேசித்து நம் அயலவரையும் நேசிக்கவேண்டும். இதனால் அன்புள்ளம் கொண்ட ஒரு நல்லதொரு சமுதாயம் உருவாகுவதனால் நம்மைச் சூழ்ந்துள்ள மனித சமூகம் அன்புள்ளதாகவும் ஆகும். அன்பே மனித இயல்பு.

கி.தேவரட்ணம்
யா/மயிலணி சைவ மகா வித்தியாலயம்
தரம் 7

# அன்பு

(சிறுகதை)

ஆதவன் தன் பொற்கரங்களை அறையினுள் நுழைக்க பொழுது விடிந்து விட்டதை உணர்ந்த பிரகலாதன் துயிலெழுந்தான். நிமிர்ந்து நேரத்தைப் பார்த்தால் நேரம் ஆறு முப்பதை எட்டியிருந்தது. அவசர அவசரமாக வெளியே சென்று காலைக் கடன்களை முடித்துக் குளித்துவிட்டு அறைக்குள் நுழைந்தான். அங்கே தன்னை மறந்து உறங்கிக் கொண்டிருந்த தனது மகனைக் கண்டு "சூரியனைக் கண்ட தாமரை போல" முகம் மலர்ந்தான். பின் வேலைக்குச் செல்வதற்காகத் தயாராகி "அம்மா நான் புறப்படு கிறேன்" என்ற வண்ணம் வீட்டிற்கு வெளியே வந்தான். மகனுக்காக அவசர அவசரமாக உணவு சமைத்துவிட்டு அதில் சிறு பொதியைக் கட்டிக் கொண்டு கையில் தேநீர்க் கோப்பையுடன் தாய் செல்லம்மா மகனருகே சென்று "தம்பி! சாப்பிடவும் இல்லை இந்தத் தேத்தண்ணிய எண்டாலும் குடிச்சிட்டுப் போ" என்றாள். தேநீரை வாங்கி அவன் அருந்த செல்லம்மா உணவுப் பொதியைப் பிரகலாதனின் கைகளில் கொடுத்தாள். அதனை வாங்கிக் கொண்டவன் யாழ்ப்பாணத்திலுள்ள தன் அலுவலகத்தை நோக்கிப் புறப்பட்டான். பச்சிளம் குழந்தையை வைத்துக்கொண்டு அவஸ்தைப்படும் தன் மகனை கண் வெட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் செல்லம்மா. மோட்டார் சைக்கிளின் வேகத்தால் வந்த தூய காற்றை நுகர்ந்தபடி அலுவலகத்தை நோக்கிப் பயணித்து அதனைச் சென்றடைந்தான். அப்போது நேரம் எட்டு மணியானது. அவசர அவசரமாகச் சென்றவன் மோட்டார் சைக்கிள் தரிப்பிடத்தில் தன் மோட்டார் சைக்கிளை தரித்து விட்டு அலுவலகத்தினுள் நுழைந்து கையொப்பமிடும் இடுகைப் புத்தகத்தில் தன் கையொப்பத்தினை இட்டுவிட்டு அன்றைய பணிகளைச் செய்யத் தொடங்கினான். அரை மணி நேரத்தின் பின் பிரகலாதனின் சக வேலையாளான அபிபர்மன் பிரகலாதனின் மேசைக்குச் சென்றான். "வாருங்கள்" என அவனை பிரகலாதன் இன் முகத்துடன் வரவேற்றான். வரும் திங்கள் எனக்குத் திருமணம்" என மகிழ்ச்சி பொங்கிய முகத்துடன் அபிபர்மன் கூறினான். அது மட்டுமன்றி நீ கட்டாயம் வரவேண்டும் என்றும் கூறினான். அதனைக் கேட்டு பரவசமடைந்த

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரகலாதன் கல்யாணப் பெண் யாரெனக் கேட்டான். கேட்டவுடன் தன்னுடைய தொலைபேசியை எடுத்து தன் வருங்கால மனைவியின் புகைப்படத்தை பிரகலாதனுக்கு காட்டினான் அபிபர்மன். "சரியடா மச்சான் நான் போய் வருகிறேன்" எனக் கூறி அபிபர்மன் விடை பெற்றான். அவனின் திருமண வைபவம் பற்றி கேள்வியுற்ற பிரகலாதனுக்கு அவனுடைய சோகம் மிகுந்த வாழ்க்கைப் பகுதி ஞாபகம் வந்தது. க.பொ.த. உயர்தரத்தில் மூன்று ஏ சித்திகளைப் பெற்று பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கு தெரிவானான்.

யாழ்ப்பாணத்திலிருந்து நீண்ட தூரத்தில் பல்கலைக்கழகம் காணப்பட்டதால் தாயைத் தனியே விட்டுச் செல்ல மனமில்லாது தாய் செல்லம்மாளையும் அழைத்துக் கொண்டு சென்று கண்டியிலே பிரகலாதன் வசித்தான். அங்கிருந்து சில மைல் தூரத்திலேயே பல்கலைக் கழகம் அமைந்திருந்தது. அதனால் பேருந்தில் பயணித்தே அவன் பல்கலைக் கழகத்தைச் சென்றடைவான். இவனது ஏழ்மையான தோற்றத்தின் காரணத்தினால் அங்கே யாரும் பிரகலாதனுடன் சேர்வதில்லை. இதனைக் கண்ட சக மாணவி கவிதா பிரகலாதனைக் கண்டு பரிதாபப்படுவாள். கவிதா ஒரு உயர் அந்தஸ்துடைய குடும்பத்தைச்சேர்ந்தவள். ஆனால் அவள் அவ்வாறு காட்டிக் கொள்வதில்லை. எல்லோருடனும் சகஜமாகப் பழகுவதுடன் எளிமையாகவும் காணப்பட்டாள். பிரகலாதனைக் கண்டு பரிதாபமுற்ற கவிதா அவனுடன் நட்பு வைத்திருக்க விரும்பினாள். அவள் விரும்பியபடியே அவனது நண்பியானாள். நாட்கள் செல்லச் செல்ல அவர்களது நட்பு காதலாக மாறியது. இருவரும் ஒருவர் மீது ஒருவர் மிகுந்த அன்புடையவர்களாகவும் சிறந்த காதலர்களாகவும் ஆனார்கள். இவ் விடயம் பல்கலைக்கழகம் முழுவதும் பரவியது. கவிதா பெரிய இடத்துப் பெண் ஆகையால் அவளது காதல் விடயம் அவளின் குடும்பத்தாருக்குத் தெரிய வந்தது. இதனை அறிந்தவுடன் அவளை பல்கலைக்கழகத்தால் இடைநிறுத்தியதுடன் அவளின் தந்தையின் தங்கை மகனான அருணுக்கு திருமணம் செய்து வைக்க நிச்சயித்தனர். இதனை அறிந்த பிரகலாதன் நண்பர்களைக் கூட்டிக்கொண்டு கவிதாவின் வீட்டுக்குச் சென்றான். அங்கே தம் இருவரது காதல் பற்றிக் கூறி கவிதாவைத் தனக்கு திருமணம் செய்து கொடுக்குமாறு கேட்டான். ஆனால் அவர்கள் அதனை ஏற்றுக் கொள்ளாது அவனை எச்சரித்து வெளியே அனுப்பினர். இதனைப் பார்த்துக் கோபமுற்ற கவிதா கத்திக் கூச்சலிட்டதுடன் தம் திருமணத்தை ஏற்றுக் கொள்ளாததற்கான காரணத்தையும் கேட்டு அலறினாள். அதற்கு அவளது பெற்றோர் அவன் தம்மைவிட ஜாதி குறைந்தவன் எனவும் பணம் இல்லாதவன் எனவும் காரணம் கூறினர். இதனை ஏற்றுக் கொள்ளாத கவிதா புழுவாகத் துடித்தாள். அவர்கள் கூறிய எந்த அறிவுரைகளையும் கேட்காமல் பிரகலாதனை எண்ணி அழுது புலம்பினாள். இதனால் அவளை அவளது பெற்றோர் கவிதாவின் பெரிய தந்தை வீட்டிற்கு அனுப்ப முற்பட்டனர். இதனை அறிந்த கவிதா நண்பர்களின் உதவியோடு வீட்டை விட்டு வெளியேறி பிரகலாதனிடம் சென்று அவனைத் திருமணம் செய்து கொண்டாள். இதனை அறிந்த கவிதாவின் பெற்றோர் அவளை பிரகலாதனிடமிருந்து பிரிக்க முயன்றனர். ஆனால் அவர்கள் செய்த சமாதானத்திற்கு உடன்படவில்லை. விடாப்பிடியாக பிரகலாதனுடன் தான் வாழப்போகிறேன் எனப் பிடிவாதம் பிடித்தாள். அதற்கு மேல் எதுவும் செய்யமுடியாமல் அவளின் குடும்பத்தினர் அவளை அத்துடன் கைவிட்டுச் சென்று விட்டனர். பின் பிரகலாதனும் கவிதாவும் சந்தோசமாக வாழ்வை வாழ ஆரம்பித்தனர். வீட்டில் செல்லம்மா மட்டும் காணப்பட்டதால் இவர்களின் காதல்த் திருமணத்திற்கு பிரகலாதனின் வீட்டில் எவ்விதமான எதிர்ப்பும் ஏற்படவில்லை. இருவரும் இணைந்து இனிய இல்லற வாழ்வை நடத்தினர். இருவரும் பல்கலையில் படித்துப் பட்டம் பெற்றனர். பட்டம் பெற்று ஒரு வருடத்தின் பின் பிரகலாதனுக்கு அரசாங்க வேலை கிடைத்தது. வேலை கிடைத்து சில நாள்களின் பின் கவிதா கருவுற்றாள். இவ் இரண்டு சந்தோசத்திற்கு இடையிலும் நின்று பிரகலாதன் துள்ளிக் குதித்தான். கவிதா தனக்குப் பிறக்கப்போகும் சிசுவை எண்ணி மகிழ்வுற்றதுடன் அக் குழந்தையை வளர்ப்பது பற்றிக் கற்பனைக் கோட்டை கட்டினாள். பத்து மாதங்களிலே ஓர் அழகிய ஆண் சிசுவை ஈன்றாள் கவிதா. அவளின் விதி அவள் குழந்தையை ஈன்ற கணமே அவளை மரணம் தழுவியது. அவளின் செத்த வீட்டில்க்கூட அவளது குடும்பத்தவர் யாரும் கலந்து கொள்ளவில்லை. இவ்வாறு தன்னுடைய சோகங்களில் மூழ்கியிருந்த பிரகலாதன் காரியாலயத்தின் மணிக்கூடு இட்ட சத்தத்தினால் சுய நினைவுக்கு வந்தான். நிமிர்ந்து பார்த்தபோது மணிக்கூடு நான்கு முப்பதைக் காட்டியது. அது வேலை நிறைவுறும் நேரம் ஆகையால் காரியாலயக் கொப்பியில் கையொப்பத்தை வைத்துவிட்டு அன்றைய நாளின் வேலையைச் சிறப்பாகச் செய்த திருப்தியுடன் மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காக தரிப்பிடத்திற்குச் சென்றான். அங்கே மோட்டார் சைக்கிளை எடுத்து வீட்டிற்கு செல்ல முற்பட்டபோது பிரகலாதன்! என்று ஒரு குரல் கேட்டது. அக் குரலைக் கேட்ட திசையை நோக்கித் திரும்பினான். அங்கே அவனது பல்கலைத் தோழி அனுசியா நின்றாள். அதனைக் கண்ட பிரகலாதன் மகிழ்ச்சியுற்று அனுசியா நீயா? என்றான். "டேய் எப்பிடி இருக்கிறாய், கவிதா எங்கை?, அவள் எப்பிடி இருக்கிறாள்? எனக் கேட்டாள் அனுசியா. அவள் கேட்ட

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கேள்விகளுக்குப் பதில் கொடுக்க முடியாமல் நின்ற பிரகலாதனின் கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அதனைத் தடுக்க முடியாமல் அவன் தரையில் விழுந்த மீனினைப் போல தத்தளித்துக் கொண்டிருந்தான். அதனைக் கண்ட அனுசியா டேய் பிரகலாதன் ஏன்டா ஊமை மாதிரி நிக்கிறா? ஏதாவது பதில் சொல்லடா என்றாள். அவளின் முனகல்களைக் கேட்ட பிரகலாதன் தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டு நடந்த எல்லா விடயங்களையும் கூறினான். அவற்றைக் கேட்ட அனுசியா தலையில் இடிவிழுந்தவள் போல ஆனாள். சில நிமிடங்கள் சோகத்தை தாங்க முடியாமல் கண்ணீர் விட்டு அழுதாள். பின் தன்னைச் சமாளித்த வண்ணம் பிரகலாதனுடன் கதைத்தாள். குழந்தையை யார் பார்த்துக்கொள்கிறார்கள்? எனக் கேட்டாள். என்ரை அம்மா என்று பதில் கூறினான் பிரகலாதன். எனக்கு இங்குதான் வேலை கிடைச்சது நாளில இருந்து இங்கேதான் வேலைக்கு வருவேன் என்றாள் அனுசியா. சரி நாளைக்குச் சந்திப்பம் என்று கூறிவிட்டு தன் குழந்தை என்ன செய்கின்றானோ என்ற ஏக்கத்துடன் பிரகலாதன் தன் வீட்டை நோக்கிப் புறப்பட்டான். ஆ... சரி என்று கூறிவிட்டு சென்றாள் அனுசியா. வீட்டிற்குச் சென்ற பின்பும் பிரகலாதனின் சோக வாழ்வும் அவனின் குழந்தையின் பரிதாபமுமே அனுசியாவின் எண்ணங்களில் ஓடிக்கொண்டிருந்தன. அவள் கூறியது போன்றே அடுத்தநாள் பிரகலாதனின் காரியாலயத்தின் பணியாளராக இணைந்து கொண்டாள். நாள்கள் செல்லச் செல்ல அனுசியாவிற்கு பிரகலாதனைப் பற்றி உயர்ந்த ஒரு மதிப்பு உண்டானது. அவனது நேர்மை, சாந்தமான பேச்சு போன்றன அவளை ஈர்த்ததுடன் அவனின் குழந்தை மேலும் அவளுக்கு அன்பு உண்டானது. ஆதலால் பிரகலாதனைத் திருமணம் செய்து அவனுடன் வாழ்ந்துவிட முடிவு செய்தாள். தன்னுடைய விருப்பத்தைத் தனது பெற்றோருக்குத் தெரிவித்தாள். ஆனால் அவளது பெற்றோர் அவளை இரண்டாம் தாரமாக திருமணம் செய்து வைக்க விரும்பவில்லை. இதனால் அனுசியாவிற்கும் பெற்றோருக்குமிடையே வாக்குவாதங்கள் அடிக்கடி வருவதுண்டு. ஓர் நாள் அவள் யாருக்கும் சொல்லிக்கொள்ளாமல் வீட்டை விட்டு வெளியேறி பிரகலாதனின் வீட்டிற்குச் சென்றுவிட்டாள். இதனை அறிந்த பெற்றோர் அவளைச் சமாதானம் செய்து எப்படியாவது வேறுயாருக்காவது திருமணம் செய்து வைக்கவேண்டும் என்ற நோக்கில் அனுசியாவைக் கூட்டிவர பிரகலாதனின் வீட்டிற்குச் சென்றனர். ஆனால் தான் திரும்பி வரப் போவதில்லை என்றும் தனக்கு தான் விரும்பியவரை திருமணம் செய்யும் உரிமை இருக்கிறது எனக் கூறி தன் பெற்றோரை வெளியே செல்லுமாறு எச்சரித்தாள். அவளைத் திருமணம் செய்யவும் இன்னோர் திருமணத்தை மேற்கொள்ளும் எண்ணத்திலும் இல்லாத பிரகலாதன் அனுசியாவை சமாதானப்படுத்தி அவளின் வீட்டுக்கு அனுப்ப முயன்றான். "நீ ஒரு படிச்ச பிள்ளை, இப்படி பிடிவாதம் பிடிக்காதை. உன்ரை நல்ல மனசுக்கு நீ நல்லா வாழவேணும். நீ எனக்கும் கவிதாவிற்கும் நல்ல நண்பி, உன்னை நான் ஒரு நாளும் கல்யாணம் செய்யவேணு மென்று நினைச்சதே இல்லை. தயவு செய்து உன்ர வீட்டுக்குப் போ" என கூறினான். அது எவற்றையும் காதில் வாங்கிக் கொள்ளாதது போன்று குழந்தையைத் தூக்கி முத்தமிட்டுக் கொண்டு நின்றாள் அனுசியா. பல மாதங்கள் உருண்டோடின. அனுசியா தன்னுடைய வீட்டிற்குப் போவதாகத் தெரியவில்லை. அவளின் நடத்தைகளால் கவரப்பட்ட செல்லம்மா அவள் மீது அன்பு கொண்டாள். தன் மகனை இவள் திருமணம் செய்து கொண்டால் அவனும் அவனது குழந்தையும் நன்றாக வாழ்வார்கள் என உணர்ந்து கொண்டாள். நாள்கள் செல்லச் செல்ல ஊரார் திருமணம் செய்யாது பிரகலாதனின் வீட்டில் வாழும் அனுசியாவைப் பற்றி பலவாறு பேசிக் கொண்டனர். இதனால் கவலையுற்ற செல்லம்மா அனுசியாவைத் திருமணம் செய்து கொள்ளுமாறு தன் மகனுக்கு கூறினாள். செய்வதறியாது நின்ற பிரகலாதன் இறுதியில் அவளைத் திருமணம் செய்து கொண்டான். மாதங்கள் சில கழிந்தன. பிரகலாதனின் குழந்தை அனுசி யாவை "அம்மா" என அழைக்கத் தொடங்கியது. அவளும் பெற்ற அம்மா போலவே அக் குழந்தையை கவனிப்பதுடன் அதன்மேல் மிகுந்த அன்பையும் வைத்திருந்தாள். நாள்கள் போகப் போக அவளுக்கும் குழந்தைக்கு மிடையிலான உறவு பலமாகியது.

தாய் செல்லம்மாவும் ஊராரும் அனுசியாவின் நடத்தையைக் கண்டு வியந்தனர். ஆனால் பிரகலாதன் மட்டும் அவளுடன் முகம் கொடுத்துப் பேசுவதில்லை. இரண்டு வருடங்கள் கழிந்தது. ஓர் நாள் செல்லம்மாவிற்கு நெஞ்சுவலி ஏற்பட்டது. அன்று பிரகலாதன் வீட்டில் இல்லாத காரணத்தினால் குழந்தையை பக்கத்து வீட்டாருடன் விட்டு வைத்திய சாலைக்குத் தன் மாமியாரைக் கொண்டு சென்றாள் அனுசியா. அங்கே தன்னுடைய வாழ்வில் பார்க்கக் கூடாதென்று யாரை நினைத் தாளோ அவனைக் கண்டாள். அது யாரெனின் அவளுக்குத் திருமணம் செய்ய வென்று பெரியோர்களால் நிச்சயிக்கப்பட்டிருந்த அவளது மைத்துனன் ஆவான். ஆனால் அவன் அனுசியாவுடன் பழகிவிட்டு திடீரென யாரோ ஒரு பெண்ணுடன் ஓடிச்சென்று அப் பெண்ணைத் திருமணம் செய்து கொண்டான். ஆதலால் திருமண பந்தத்தில் வெறுப் புற்றிருந்த அனுசியா திருமணம் செய்யக் கூடாது என்ற இலட்சியத்தில் இருந்தாள். ஆனால் பிரகலாதனின் வாழ்வின் நிலையைக்

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு அவனது குழந்தையினதும் அவனதும் நல்ல வாழ்விற்காகவும் கவிதாவுடன் கொண்டிருந்த நல்ல நட்பிற்காகவுமே பிரகலாதனை மணந்துகொண்டாள். அவளது மைத்துனனைப் பார்த்து அவள் "நீ என்னை விட்டுச் சென்று விட்டாய் என்று நான் தூக்கில் தொங்கவில்லை நல்லாய்தான் இருக்கிறன் என்று கூறியதுடன் கடவுள் எனக்கு நல்ல கணவனையும் அன்பான மாமியாரையும் அழகான குழந்தையையும் தந்திருக் கிறார்" என்றாள். நீ இரண்டாம் தாரமாகத்தானே வாழ்க்கைப் பட்டிருக் கிறாய்" என்றான் அவளது மைத்துனன். ஓ... நான் இரண்டாம் தாரமாகத்தான் வாழ்க்கைப்பட்டனான். ஆனால்உன்னை மாதிரி துரோகிக்கு இல்லை துரோகம் எண்டா என்னண்டே தெரியாத உத்தமனுக்குத் தான் வாழ்க்கைப் பட்டிருக்கிறன் என்றாள். தாய்க்கு நடந்த நோய் நிலைமையை அறிந்து ஓடிவந்த பிரகலாதன் இவர்கள் இருவரும் கதைத்த எல்லா விடயங்களையும் கேட்டான். அவ்விடத்தே ஓடிவந்து அனுசியாவின் கரங்களைப் பற்றிக்கொண்டு கதறி அழுதான். என்னை மன்னித்துக்கொள் அனுசியா. உன்ரை உண்மையான அன்பை நான் புரிஞ்சுகொள்ளாமல் இவ்வளவு நாளும் நடந்திருக்கிறன். இப்படிப்பட்ட நீ எங்களுக்கு கிடைச்சதுக்கு நான் குடுத்துவச்சிருக் கோணும். என்ரை கவிதா தான் உன்னை எங்களுக்காண்டி அனுப்பி வச்சவள் என்று கூறிக்கதறி அழுதான். நான் உங்கள் எல்லாரிலையும் வச்ச உண்மையான அன்பு தான் உங்கடை மனசை மாத்தினது என்று கதறி அழுதாள் அனுசியா. இதனைப் பார்த்த அனுசியாவின் மைத்துனன் இப்படி ஒரு நல்லவளுக்கு மன்னிக்க முடியாத துரோகத்தைச் செய்து விட்டேனே என்றும் அவளை இழந்த ஒரு துரதிர்ஸ்டசாலி நான் எனவும் நினைத்து அனுசியாவிடம் கண்ணீர் மல்க மன்னிப்பைக் கேட்க அவனது மனைவி நிறைமாத கர்ப்பிணியாக நின்று அவனை அழைத்தாள். நான் போய் வருகிறேன் எனக் கூறிவிட்டு அவன் அவ்விடத்தை விட்டு நகர்ந்தான். பிரகலாதனும் அனுசியாவும் ஒருவரை ஒருவர் பார்த்துப் புன்னகைத்தனர். அந்த நேரம் வைத்தியர் வெளியே வந்து உங்கடை அம்மா மயக்கத்திலை இருந்து கண் முழிச்சிட்டா நீங்கள் போய் அவாவைப் பார்க்கலாம் என்றார். இருவரும் ஓடிச் சென்று செல்லம்மாவைப் பார்த்தனர். இருவரும் தாம் இணைந்து விட்டதை செல்லம்மாவுக்கு கூறினர். அதனைக் கேட்ட செல்லம்மா மகிழ்வுற்றாள். அனுசியா உன்ரை உண்மையான கள்ளம் கபடமில்லாத அன்புதான் இவனை மனம் மாற வைச்சது என்றாள் செல்லம்மா. அந்த நேரம் செல்லம்மா இருந்த அறைக்குள் பிரகலாதனின் குழந்தை ஓடி வந்தது. அக் குழந்தையைத் தூக்கி இருவரும் அணைத்து முத்தமிட்டனர். தன் உண்மையான அன்பின் வலிமையை உணர்ந்து வியந்தவளாய் அனுசியா தன் கணவனையும் குழந்தையையும் பார்த்துக் கொண்டு நின்றாள்....

சாங்கவி தங்கவேல்
யா/ சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி
க.பொ.த. (உ/த) 2019

# அம்மாவின் அன்பு

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது" என்ற ஔவையாரின் வாக்கிற்கு இணங்க சிந்திக்கத் தெரிந்த இரண்டு கால் மனித இனமாகக் காணப்படும் மானிடன் தன்னை அன்பின் வழி செல்லச் செய்கின்றான். அந்த வகையில் தாயின் உள்ளத்தை மதிக்கத் தெரிந்தவனே மனிதன். குழந்தை பிறந்து முதன் முதலாக இவ்வுலகில் சுவாசிக்கும் காற்று அத் தாயின் மூலம்தான். அன்பான எண்ணங்களையும், ஆழமான அறிவினையும், இனிமையாக எமக்கு ஊட்டும் எம் முதற் குரு தாயே ஆவார்.

"உனது தாய்க்கு மதிப்பளித்தால், பிரபஞ்ச தாய் உன்னைக் காப்பாற்றுவாள்" என்ற பாபாவின் கூற்றுக்கு இணங்க தாயே உலகில் மதிக்க வேண்டிய ஒரு உயிர் ஆவாள். தன் ஒவ்வொரு நாளத்திலும் பிள்ளைகளைத் தன் உயிர் மூச்சாகக் கொண்டு கருவறை தொடக்கம் கல்லறைவரை களிப்புடனே சுமக்கின்றாள். உண்மையான அன்பின் குறியீடே தாய் ஆவாள். அவளே பிரபஞ்சத்தின் மூச்சாவாள். பசுமையான இவ்வுலகில் அன்பினால் மட்டுமே உயிர்வாழமுடியும். யார் ஒருவன் தன்னுடைய தாயை தன்னிகரில்லாத உயிர் என நம்புகிறோனோ அவனே வாழ்க்கையில் முன்னேற்றத்தையும் வாழ்க்கை என்னும் பாற்கடலை அள்ளித் தரும் அட்சய பாத்திரத்தினைப் பெற முடியும்.

"உலகில் உயர்ச்சி பெற வாழ்க்கையில் வளர்ச்சி பெற
உள்ளத்தில் மறுமலர்ச்சி பெறஅடைய வேண்டியது அன்பே"

என்ற கூற்றிற்கு இணங்க உலகில் உன்னதமானதும் உலக மானிட மனங்களின் மறுமலர்ச்சிக்கு உதவுவது அன்பு என்னும் ஆயுதமாகும். மூவுலகங்களிலும் முதன்மை பெற்று விளங்கும் வெற்றியானது தாய் என்னும் அன்பை நாணாகவும் பகைமைகளைச் சுட்டெரிக்கும் இறையன்பையும் வில்லாகக் கொண்டே மூவுலக முதல்வர்களும் வெற்றி கொண்டனர்.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அன்பே மனித இயல்பு

அன்பு என்பதற்கு தமிழ் என்ற ஒரு இனிய பொருளும் உண்டு. "அன்பின் வழியது உயர்நிலை" என்பது வள்ளுவரின் மருந்தன்ன வாக்காகும். அன்பு என்பது மனிதராய்ப் பிறந்தவர்கள் ஒவ்வொரு வரிடத்திலும் இருக்கவேண்டிய உள்ளார்ந்த இயல்பாகும். மனிதனின் தவிர்க்க முடியாத பண்பு. அது மாத்திர மல்ல, மனுக்குலத்தின் மகிமைக்கே காரணமாய் அமையும் ஒரு சிறப்பான ஒழுகலாறும் அன்பினால் நிகழ்வதே. ஒருவரையொருவர் நன்கு கவனித்துக் கொள்ளுதல், உதவி செய்யும் பொருட்டு அவர்மீது அக்கறை செலுத்துதல், புரிந்து கொண்டு அடுத்த வரை மதித்து நடத்தல், அவருக்காக இரங்குதல் போன்ற நற் செய்கைகள் எல்லாம் அன்பில் பொதிந்தி ருக்கும் உணர்வாகும். இவ்வாறு அன்பு ணர்ச்சி தீவிர நிலையில்தான் பாசம், நேசம், காதல், வாஞ்சை, நட்பு, இரக்கம், கருணை என்ற பண்புகளெல்லாமே உருவாகின்றன.

குடும்பத்தில் தாய் செலுத்தும் அன்பைத் தவறாகப் பயன்படுத்திக் கொண்டு தந்தையோ மக்களோ தன்னலம் உடையவர்களாகத் தீமை செய்வார்களானால் என்ன ஆகும்? அப்படித்தான் நாட்டில் ஒரு சாராரின் அன்பை தவறாகப் பயன்படுத்திக் கொண்டு மற்றொரு சாரார் தன்னலமாக வாழ்வார்களானால் அன்பு வரண்டு போகும். உரிமைக்கும் கடமைக்கும் போராட்டம் ஏற்படும். எனவே, தாயின் அன்பைத் தவறாகப் புரிந்து கொள்ளும் எந்தவொருவரும் இப் பிரபஞ்சத்தில் வாழும் உரிமையை இழக்க நேரிடும்.

பெற்றோருடனும் மற்றோருடனும் அன்பாகப் பாசப் பிணைப்புடன் இருப்பவர்களே உண்மையான தாய் ஆவாள். உலகில் பல மகான்களை மேதாவிகளாக மாற்றிய பெருமை அன்பின் வடிவமான தாய்மாரையே சேரும். உதாரணமாக சூதாடுதல், மது அருந்துதல், கொலை செய்தல் போன்ற தீய பழக்க வழக்கத்திலிருந்து விடுபடுவதற்கு ஒரேயொரு வழி பொய் சொல்லாமையே ஆகும். அந்த வகையில் மகாத்மா காந்தியை அரிச்சந்திரனைப் போல ஒரு உத்தமனாக வாழவேண்டும் எனக் கூறியதிலிருந்து அவருடைய தாயின் அன்பானது வெளிப்படுகின்றது. "வாய்மையே வெல்லும்" எனும் வாக்குக்கிணங்க மகாத்மா காந்தி வாழ்ந்து காட்டியமைக்கான முக்கிய காரணம் தன் அம்மாவின் அன்பேயாகும். வளர்ச்சி அடைந்து வரும் 21ஆம் நூற்றாண்டிலே "இரும்புப் பெண்" என அழைக்கப்படும் இந்திராகாந்தி பாரத தேசத்தின் பாசமிகு தாயாகக் கடமையாற்றினார். இதனால் மக்கள் நலம் மேன்மேலும் வளர்ச்சி கண்டது.

சுற்றும் பூமியின் சுழல்கயிற்றாய் காணப்படும் அன்பானது தாயின் வயிற்றில் இருக்கும் போதே அவனிதனில் உதிர்த்துவிட்டதாகும். அந்த வகையில் புனிதமானதும் கருணையானதும் இவ்வுலகில் நிறைந்தும் காணப்படும் அன்பானது தாயின் மூலமே கிடைக்கின்றன. அன்பு ஒரு மகா சக்தியாகும். அதை அள்ளித்தரும் பராசக்தியாக தாய் விளங்குகின்றாள். உதாரணமாக தோமஸ் அல்வா எடிசனிற்கு அவரது தாய் அன்பின் நிமித்தமாக விளங்குகின்றாள். அந்த வகையில் தாயின் பாசத்திற்கு கட்டுப்பட்டு பல அரிய கண்டுபிடிப்புக்களையும் எமக்குத் தந்துள்ளார். அந்த வகையில் உலகிற்கு ஒளியூட்டும் மின்குமிழைத் தந்துள்ளார். அது விஞ்ஞானத்திற்கு மட்டும் ஒளியூட்டாமல் தாயின் அன்பிற்காகவும் ஒளியூட்டுகின்றது.

இந்த விந்தைகள் நிறைந்த உலகில் மானிட மனங்களில் அன்பை நிலைத்திருக்கச் செய்யவேண்டும். அந்த வகையில் தாயை வில்லாக்கி அவர் அன்பை நாணாக்கி வெற்றி எனும் இலக்கை சமூகம் என்னும் அன்பினால் வெல்லவேண்டும்.

ஆரணி ஜெகநாதன்,

தரம் 11, யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி, வதிரி, கரவெட்டி.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

அன்பு இதுதான், இன்ன வகையது தான் என்று பிறருக்கு வார்த்தைகளால் எடுத்துரைக்கும் தன்மையுடையது அல்ல. ஒருவர் இன்னொருவரிடத்தோ, பிறரிடத்தோ, மற்றுயிர்களிடத்தோ கொள்ளுணர்வும் அன்புணர்வானது உன்னதம் சார்ந்தது. இதயத்தை நெகிழ்வித்துப் பிரவாகிப்பதே அன்பு. அது தடையின்றி யாரிடத்தேயும் யார் மேலும் தோன்றக் கூடியது. அன்பின் பெருக்கானது கண்ணீரால் காணப்படு மென்று பெரும்புலவர் வள்ளுவர் பிரான் சுட்டிக் காட்டுகிறார்.

"அன்புக்கு முண்டோ அடைக்குந் தாழ் - ஆர்வலர்
புன்கணீர் புசல் தரும்"

என்பது அக்குறள்மொழி. அன்பு எனும் இயல்பு அனைத்து உயிரினங் களிலும் உள்ளதெனின், மனத்தினால் மகிமை பொருந்திய மனிதனிடத்து இதன் ஆற்றல் பெருகி நிற்கும். உன்னதமான அன்பு உலகத்தையே உறைய வைக்கும்.

அன்பிலே பலவகை உண்டு. பிள்ளை மீது தாய் வைத்திருக்கும் அன்பு பாசம். தந்தை மக்களிடத்தில் வைத்திரு க்கும் அன்பு வாஞ்சையாகும். இடரில் உதவிடும் நண்பர்கள் தொடர்பில் ஏற்படுவது நட்பு ஆகும். ஒரு அன்னை வயிற்றில் பிறந்த சகோதரர்களுக் கிடையில் ஏற்படும் பிரியம் சகோதர பாசம் ஆகும். மாணாக்கனானவன் தன் குருவிடத்து கொள்ளும் மானசீக அன்பு குருபக்தி எனப்படுகிறது. எதிர்பாலரான இருவர் ஒரு மனத்தினராகி ஏற்படும் அன்பு காதல் எனப்படும். இதயங்கள் ஒன்று படுதலே இந்த எல்லாவித உறவுகளுக்கு அடிப்படையாக அமைகிறது.

உண்மையான வாழ்வு, உண்மை யான ஞானம், உண்மையான அன்பு என்ற மூன்றும் ஒன்றோடொன்று மிக நெருக்கமாக இணைந்தவையாகும். அவையே சந்தான மூர்த்தியின் இயல்பாகும். அன்பு அச்சத்தை ஓட்டும் தன்மையுடையது. அது எதையும் எதிர்பாராது. ஒன்றுக்காக மற்றவர்களுக்கு அன்பு காட்டுவது மிகமேலான தத்துவம் என்பதை சுவாமி விவேகானந்தர் தெளிவுபடுத்துகிறார்.


"பெருமானே எனக்கு செல்வமோ, பொருள்களோ வேண்டாம். ஆனால் நான் பலன்கருதாது அன்பு கொள்ளவும், தன்னலமின்றி அன்புக்காகவே அன்பு செய்யவும் எனக்கு அருள் செய்வாயாக" என்று பிரார்த்திப்பதே எமது வேண்டுதல்களின் நோக்கமாயிருக்க வேண்டும் என்று அன்பினை அவ்வீரத்துறவி வலியுறுத்தியுள்ளார். எனவே எப்படி நோக்கிலும் அன்பு என்ற உளமார்ந்த இயல்பு, கிளர்ச்சி, உணர்ச்சி, பண்புதான் பல வடிவங்களாக இந்த உலகையே இயக்கி வருகிறது. நாமும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழவைக்கின்ற நல்ல விழுமியங்கள் நம் ஒவ்வொருவரிடத்திலுமுள்ள அன்பின் அடிப்படை யிலேதான் உருவாகின்றன. என்பதை நாம் அறிய வேண்டும். உணரவேண்டும். மற்றவரை நேசிக்கின்ற மனப்பாங்கும், சகிப்பும், பரோபகார சிந்தனையும், அன்பு உள்ளவர்களிடத்தே தான் குடிகொள்ளும்.

"அன்பிலார் எல்லாம் தமக்குடையவர் -
அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு'

என்ற மணிமொழியில்தான் எத்தனை அறப்பண்பு தெரிகிறது. அன்பு உலகை அன்பிலார் வெல்லும் பண்புடையது. அன்புதான் இன்ப ஊற்று. அன்புதான் உலக மகா சக்தி.

நாம் அன்பு செய்வதை மற்றவர் உணரும்போது உள்ளமானது நெகிழ்வடைகிறது. அங்கே உண்மை தொனிக்கிறது. முடிவுகாண முடியாத இந்த உறவில் பொறாமைக்கு இடமேயில்லை. நிறைவான தமிழர்களாகிய நாம் தெரிந்துணரவேண்டிய விடயமொன்று உள்ளது. அதாவது அன்புக்கு தமிழ் என்றும் ஒரு அற்புதக் கருத்து உண்டு. "என்னை நன்றாக இறைவன் படைத்தனன் தன்னை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே" என்ற மூலர் வாக்கில் காணப்படும் தமிழ் செய்தல் என்பதை " அன்பு செய்தல்" என்று கொள்ளுவதுதான் சரியானது என்ற பெரியோர்கள் கருத்தை உணர்ந்து மற்றவர்களிடத்து தமிழ் செய்து வாழ்வோம்.

செல்வி. இரத்தினம் டினோஜா
யா/ஆனைக்கோட்டை றோ.க.த.க. பாடசாலை.
தரம் 10



FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் அன்பு

அன்பிற் சிறந்த அமுதமென்றும்
ஆனந்த
இன்பிற் பிறந்த இசையென்றும்
என்னுள்ளம்
தன்னில் கரைந்து தவழ்ந்தாடத்
தாயே நீ
என்னில் மறைந்த இறை
இறையாக நின்றெனைக் காத்தே
இரையை
நிறைவாக ஊட்ட நெகிழ்தேன்
மறையாம்
குறளின் வழியில் வளர்த்தாய்
குளிர்ந்தேன்!
உறவினைக் கண்டே உணர்ந்து!
உணர்ந்தும் எழுதிட உள்வரும்
வார்த்தை
கொணர்ந்த இனிமைகள் கோடி!
வணங்கும்
மனித தெய்வம் அன்னையென
மாமனிதர் சொல்லோ
புனிதமென்றே புகழ்ந்து போற்றும்
அன்னையின் அன்பு!

ப.பிரபாலினி,
தரம் 11,
சத்திய சாயி பாடசாலை.

# ஆணவம் - ஆன்மா

1. ஆணவம் தனக்கு மட்டும் சேவை செய்ய முயலும்
   ஆன்மா மற்றவர்களுக்கும் சேவை செய்ய முயலும்
2. ஆணவம் எப்பொழுதும் வெளிப்புறமாக அங்கீகரிக்க முயலும்
   ஆன்மா எப்பொழுதும் உள் நம்பகத் தன்மையையாய் இருக்க முயலும்
3. ஆணவம் வாழ்க்கையை போட்டி மனப்பான்மையோடு பார்க்கும்
   ஆன்மா பரிசாய் கொடுத்த வாழ்க்கையாய் பார்க்கும்
4. ஆணவம் தன்னை மட்டும் பாதுகாக்க முயலும் ஆன்மா மற்றவரையும் பாதுகாக்க முயலும்
5. ஆணவம் வெளித் தோற்றத்தை மட்டும் பார்க்கும் ஆன்மா உள் தோற்றத்தை பார்க்கும்
6. ஆணவம் பற்றாக் குறையை உணரும் ஆன்மா மிகுதியை உணரும்
7. ஆணவம் அழியும் ஆன்மா அழியாது
8. ஆணவம் காமத்தை ஈர்க்கும்
   ஆன்மா அன்பை ஈர்க்கும்
9. ஆணவம் ஞானத்தை தேடும்
   ஆன்மா ஞானமாகவே இருக்கும்
10. ஆணவம் பரிசை மட்டும் அனுபவிக்கும்
    ஆன்மா வாழ்க்கை பயணத்தை மகிழ்ச்சியாய் அனுபவிக்கும்
11. ஆணவம் பல வலிகளுக்கு காரணமாக இருக்கும்
    ஆன்மா மனக் காயங்களை ஆற சிகிச்சை முறைக்கு காரணமாய் இருக்கும்
12. ஆணவம் இறைவனை நிராகரிக்கும்
    ஆன்மா இறைவனை அரவணைக்கும்
13. ஆணவம் பூர்த்தி செய்ய முயலும்
    ஆன்மா அழியாமல் முழுமையாய் இருக்கும்
14. ஆணவம் என்பது நான்
    ஆன்மா என்பது நாம்.

டினோஜா ரவிச்சந்திரன்
12 (2020) கலைப்பிரிவு
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி.

# அம்மாவின் அன்பு

"அம்மா" மண்ணில் பிறக்கும் எல்லா உயிரும் முதலில் சொல்லும் வார்த்தை. உடலில் எங்கேனும் வலியெடுத்தால் நம்மையும் மீறி வாய் உச்சரிக்கும் வார்த்தை. ஒரு பெண்ணானவள் மகளாக, சகோதரியாக, தோழியாக, தாரமாக, தாயாக, பாட்டியாக என பல்வேறு நிலைகளில் வாழ்க்கையில் வலம் வருகிறாள். இவ்வாறு பல நிலை களில் பெண் போற்றப்பட்டாலும் அவள் "தாய்" என்ற அந்த உயர்ந்த நிலையை அடையும் போது தான் முழுமையான ஒரு பெண்ணாக ஆகின்றாள். "தாய்மை" என்பது பெண்மையில் நன்றாக ஊறிப்போன ஒரு விடயமாகும். அது இறைவனால் பெண் இனத்திற்கு வழங்கப்பட்ட வரப்பிரசாதமாகும்.

தாய் என்பவள் மனிதர் களுக்கு மட்டுமன்றி சகல ஜீவராசிகளுக்கும் முக்கிய மானவள். அவளின் அன்பை நாம்

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலை கொடுத்து வாங்கிவிட முடியாது. தாயின் மடித் தூக்கத் திற்கு எந்தப் பஞ்சு மெத்தையும் ஈடு ஆகுமோ இவ்வுலகில்? அன்னை மடி மீது தூங்கையில் துன்பங்கள் என்று எதுவுமில்லை. கடவுள் எல்லா இடங்களிலும் இருக்க முடியாது என்பதற்காகத்தான் அவர் அன்னையை படைத்தார். அடிமுடி தேடினாலும் அகராதியைப் புரட்டினாலும் முழுமையான அர்த்தம் அறிய முடியாத உயிர்ச் சித்திரம் அம்மா! அன்பும் அரவணைப்பும் அள்ள அள்ளக் குறையாத அட்சய பாத்திரம் அம்மா. கடவுளின் படைப்பில் தன்னலத்தின் நிழல்கூடப்படாதது. தாயின் படைப்பு ஒன்றுதான்" தாயின் சிறந்ததொரு கோயிலுமில்லை" என்பது ஆன்றோர் வாக்கு. தாயை மதிக்காமல் அவரது வார்த்தை களுக்குச் செவி சாய்க்காமல் அருகில் வாழும் இந்த தெய்வத்தைப் போற்றாமல் பல கோவில்களுக்கு நற்கதி தேடிப் போனால் அது கிட்டாது. மாறாகப் பாவங்களே வந்து சேரும். இன்று பல பிள்ளைகள் இவ்வாறு தான் உள்ளார்கள். தாய், தந்தையரை பராமரிக்க நேரம் இல்லை என்று கூறி முதியோர் இல்லங்களில் அவர்களை ஒப்படைத்து விடுகிறார்கள்.

தாய் எப்போதும் தனது வாழ்வையும் நேரத்தையும் தன் பிள்ளைகளுக்காகவே அர்ப்பணித்து அவர்களின் அன்பை மட்டுமே எதிர்பார்க்கும் தியாகியாவாள். ஒவ்வொரு பிரசவத்தின் போதும் மறுபிறவி பெறும் தாயின் தியாகத்தை மறந்தவன் மனிதனல்ல. "நிழலின் அருமை வெயிலில் தெரியும்" என்பதைப் போல அம்மா இல்லாத போதுதான் அவளது அருமை புரியும். எந்த ஒரு சூழ்நிலையிலும் எந்த வயதிலும் கோபத்தைக் கொட்டித் தீர்க்கவும் சோகத்தை அழுது தீர்க்கவும் உரிமையுள்ள ஒரே உறவு அம்மா மட்டும்தான். குடும்பத்தில் அப்பா, அண்ணா, அக்கா, தம்பி, தங்கை எனப் பலர் இருக்கலாம். ஆனால் பிள்ளைகள் தங்களது மனச்சுமைகளை தாயிடம்தான் கூறுவார்கள். ஏனெனில் தாய் தன் பிள்ளைகள் கூறுவதை மற்றவர்களிடம் கூறாமல் தன் மனத்திலேயே வைத்துத் தீர்வு காண்பாள். தன் பிள்ளையை தன் மடியில் படுக்கவைத்து ஆதரவு தருவாள். எனவேதான் அன்னையே சிறந்த தோழியாகவும் சகோதரியாகவும் ஆசிரியராகவும் ஆலோசகராகவும் எல்லாவற்றிற்கும் மேலாக நமது கண்ணிற்கு தென்படும் கடவுளாகவும் திகழ்கிறாள்.

பிள்ளைகளுக்கு அன்புடன் சேர்த்து செல்லமான கண்டிப்பையும் காட்டி எப்படி வேண்டுமானாலும் வாழ்வது வாழ்க்கையல்ல. இப்படித்தான் வாழவேண்டும் என்பதே வாழ்க்கை என்று தன் குழந்தைகளை நந்நெறிப்படுத்துபவள் தாய். நாம் எவ்வளவு சோர்வாக இருந்தாலும் கவலையாக இருந்தாலும் தோல்வி கண்டு துவண்டு போயிருந்தாலும் நம்மை உற்சாகப்படுத்தி உன்னுடன் நானிருக்கின்றேன் எனக் கூறி, நாம் வாழ்வின் அடுத்த கட்டத்தை நோக்கி பயணிக்க நம் தோளினைத் தட்டிக் கொடுத்து நம்மை ஊக்கப்படுத்துபவளாம் நம் அன்னையே ஆவாள். நாம் தவறேதும் செய்யும் பட்சத்தில் நம்மை தண்டிக்காமல் கண்டித்து அறிவுரை கூறுபவள் அம்மா. இவ்வுலகிலே சகல பாவங்கள், குற்றங்களையும் மன்னிக்கும் ஒரே நீதிமன்றம் அம்மாவின் இதயமாகும். அம்மா என்ற அற்புதத்தைப் பற்றி உலகிலுள்ள சகல இன, மத, மொழிகளும் பல்வேறு கருத்துக்களைக் கூறுகின்றன. "தாயின் காலடியிலேதான் சொர்க்கம் இருக்கிறது" என்ற நபிகளது கூற்றும் "என்னுடைய நல்ல குணங்கள் எல்லாவற்றிற்கும் என் தாய்க்கு நான் கடன்பட்டவன்" என்ற ஆபிரகாம் லிங்கனது கூற்றும் இதற்கு சிறந்த எடுத்துக் காட்டுக்களாகும். இவற்றைவிட கோடிக் கணக்கில் மக்களை கொன்றுகுவித்த ஹிட்லரது இதயத்தில்கூட இறுதிவரை தாய்ப்பாசத்தின் ஈரம் இருந்தது. இரண்டாம் உலகப் போரில் மோசமான தோல்வியைத் தழுவியதும் துப்பாக்கியால் சுட்டுத் தற்கொலை செய்துகொண்ட ஹிட்லர் தன் மார்பில் தாயின் படத்தைத் தழுவியபடி நாற்காலியில் சரிந்துகிடந்தார் என்று சரித்திரம் சொல்கிறது. எப்படியான வக்கிரபுத்தி கொண்டவனையும் மாற்றி நல்வழிப்படுத்தும் ஆற்றல், சக்தி தாயன்பிற்கு உண்டு.

இந்த உலகில், உயர்ந்த நிலையில் தன் மகவு வாழும் நிலை காணுதலே அன்னைக்கு பிள்ளை அளிக்கும் பேரின்ப நிலையாகும். இதனையே,

"ஈன்ற பொழுதினில் பெரிதுவக்கும் தன் மகனைச் சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற வள்ளுவன் வரிகள் காட்டுகிறது. தாயன்பு போன்ற கலப்படமற்ற அன்பு இந்த உலகில் வேறு எதுவுமில்லை. பிள்ளை தனது அன்பைப் பிரதிபலிக்காவிடினும் தாய் அதைப் பொருட்படுத்த மாட்டாள். பெத்த மனம் பித்து பிள்ளை மனம் கல்லு என்று மூத்தோர் கூறியுள்ளனர். துஸ்டப் பிள்ளை உண்டு, ஆனால் துஸ்ட அம்மா கிடையவே கிடையாது. பரிபூரணமான அன்பையும் தன்னலமற்ற உழைப்பையும் அம்மா ஒருத்தியிடம் மட்டுமே பார்க்க முடியும் அம்மா. அம்மா உயிரோடு இருக்கும் போது பொருட்படுத்தாமல் அவள் மறைந்த பின்னர் இறுதிக் கடன்கள் என்ற பெயரில் சடங்குகள்,

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம்பிரதாயங்கள், நினைவு நாள்கள் என விழா எடுத்து விமர்சையாக செய்வதால் அன்னையின் ஆத்மா சாந்தி அடையும் என்பதில் உண்மையேதும் இல்லை. அன்னையை வாழும் போதே மகிழ்விக்கவேண்டும். மனமார வாய்விட்டுப் பேசிட சில பொழுதுகளை யேனும் இந்த அவசர உலகில் ஒதுக்கி அம்மாவை விடச் சிறந்த தெய்வம் பிரபஞ்சத்தில் இல்லை என்பதை நாம் உணர்வோமாக.

டினோஜா ரவிச்சந்திரன்
12 (2020) கலைப்பிரிவு
யா/ யாழ் இந்து மகளிர் கல்லூரி.

# மூன்றெழுத்தின் கவிதை
# அம்மா

– சிறுகதை –

பசுமை நிறைந்த வயல் பிரதேசமும் அழகிய மலைகளும் பார்ப்பவரின் மனதை கொள்ளைகொள்ளும் அளவிற்கு அழகான கிராமம். இயற்கை அழகு என்பது இறைவன் கொடுத்த கொடையாகும். இயற்கையோடு ஒத்திசைந்து போவது அழகாகும். இப்படிப்பட்ட ஊரிலே சொல்லொணா துயரமும் மனதை உருக்குகின்ற அளவிற்கு துன்பமும் நிறைந்த குடும்பம்தான் விமலாவின் குடும்பம். ஒரு காலத்தில் ஏகப்பட்ட செல்வமும் மகிழ்ச்சியோடு வாழ்ந்த குடும்பம்தான் இது. ஆனால் விமலாவின் கணவனின் மரணத்திற்கு பின்னர் அவர்களடைந்த அவமானங்கள் ஏராளம். விமலாவின் கணவர் ஒரு விவசாயி. இவரின் கடினமான உழைப்பினாலும் விடாமுயற்சியாலும் இவர் செய்த தொழில்கள் யாவும் சிறந்து விளங்கியது. விவசாயம் செய்து அதன்மூலம் குடும்பத்தை மிக அழகாக நகர்த்தி வந்தனர். இவரது வளர்ச்சியை கண்டு எரிச்சலடைந்து சிலர் அவருடன் கை கலப்பில் ஈடுபட்டனர். இதனால் மனமுடைந்த அவர் தனது மனைவியிடம் நடந்ததை கூறி கவலைப்பட்டார். விமலா அவரிற்கு ஆறுதல் கூறி சமாதானப் படுத்தினாள். ஆனாலும் நடந்ததை குறித்து சற்று பயப்பட வேண்டிய நிலையும் விமலா விற்கு இருந்தது. அடுத்தநாள் நான் வயலுக்கு போய் வருகின்றேன் என்று கூறிச் சென்ற கணவன் இரவாகியும் வீடு திரும்பவில்லை.

என்ன நடந்திருக்குமோ என்ற பயத்தில் இருந்த விமலா விற்கு ஒரு அதிர்ச்சியான செய்தி உங்களது கணவன் வாகன விபத்தில் இறந்துவிட்டார் என பக்கத்து வீட்டு பையன் ஓடிவந்து சொன்னான். விமலாவிற்கு மூன்று பெண் குழந்தைகள். கணவன் இல்லாத வாழ்க்கையை விட தனது பிள்ளைகளின் எதிர்காலம் என்ன நடக்குமோ என்று பயப்படத்தொடங்கினாள். கணவனின் இறுதிச் சடங்கிற்காக கஸ்டப்பட்டு சேர்த்து வைத்த செல்வத்தினை செலவழித்தாள். காலமோ வேகமாக ஓடியது. மிகுதியான பணத்தை வைத்து சிலகாலம் வாழ்க்கையினை நடத்தினாள். பணம் முடிந்து போக என்ன செய்வது என்று தெரியாமல் விமலா கவலைப்பட்டாள். மறுபக்கம் பிள்ளைகளின் கல்விச் செலவு வேறு காணப்பட்டது. இதையெல்லாம் யோசித்துப் பார்த்த விமலா வேலைக்கு செல்ல முடிவெடுத்தாள். இதற்கிடையில் அவளின் மகளிற்கு பயங்கர காய்ச்சல் ஏற்பட்டு பணத்தேவை அதிகமாகிப்போனது. இதனால் விமலா வட்டிக்கு பணம் வாங்கி மகளின் மருத்துவ செலவிற்காக பணத்தை செலவழித்தாள். மகள் இயல்பு நிலைக்கு திரும்பும்வரை விமலா வேலைக்கும் செல்ல வில்லை. காலப்போக்கில் வட்டிக்கு பணம் கொடுத்தவர்கள் வீட்டு வாசலில் வந்து ஏளனமாக பேசி விமலாவையும் அவளது குடும்பத்தையும் அவமானப் படுத்தினார்கள்.

விமலாவின் மூத்த மகள் க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையில் சிறந்த பெறுபேற்றினை பெற்றாள். எனினும் மேற்படிப்பிற்கு வெளியூரிற்கு செல்ல வேண்டி இருந்தது . விமலா ஒரு வீட்டில் வேலை செய்து அதில் கிடைக்கும் கொஞ்சப் பணத்தை சேர்த்து வைத்திருந்தாள். எப்படியோ கஷ்டப்பட்டு தனது மகளினை வெளியூரிற்கு கல்வி கற்க அனுப்பிவை வத்தாள். ஆனால் விமலாவின் மகளே தாயின் கஷ்டத்தை புரிந்து கொள்ள தெரியாதவளாகவே காணப்பட்டாள். வெளியூரில் கல்வி கற்பது சாதாரண விடயமல்ல. மாதம் மாதம் பணம் அனுப்ப வேண்டும். விமலா கஷ்டப் பட்டு பணம் சேமிக்கத் தொடங் கினாள். விமலாவிற்கு பலசமயம் காய்ச்சல் வந்துகூட தன் மகளின் படிப்பை மனதில் நினைத்தவளாய் தனது வேதனையையும் துயரத்தை யும் தாக்கி வைத்து விட்டு மகளின் எதிர்காலத்திற்காக மிகவும் கஷ்டப் பட்டாள். மாத இறுதியும் வந்தது. மகளிற்கு பணம் அனுப்ப வேண்டுமே என்று அவசரமாக தபால் நிலையத் திற்கு புறப்பட்டாள். பணத்தை அனுப்பி விட்டு வீடு திரும்பினாள். வீடு திரும்பும் போது பக்கத்து வீட்டு சாந்தி அக்கா வந்து உனது மகள் போன் பண்ணி இருக்கிறாள், வா என்று கூட்டிக் கொண்டு போனாள். தனது மகள் நீண்ட நாளுக்கு பிறகு கதைக்கப் போகிறாள் என்று சந்தோசத்துடன்

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போனை வாங்கினாள். ஆனால் மகளோ அம்மா அடுத்த மாதத்திலிருந்து 6 ஆயிரம் ரூபாய் அதிகமாக அனுப்ப வேண்டும் என்று படபடவென கூறிவிட்டு அம்மாவின் உடல் நலத்தைக் குறித்தோ அல்லது தங்கையைக் குறித்தோ ஒரு கேள்வி கூட கேட்காமல் அழைப்பினை துண்டித்து விட்டாள். விமலாவோ மிகவும் மனமுடைந்து போய்விட்டாள். இருப்பினும் அடுத்த மாதம் ஆறாயிரம் ரூபாய் அதிகமாக அனுப்ப வேண்டுமே என நினைத்து வழமையாக விற்கும் விராட்டி அதிகமாக விற்க வேண்டுமே என்று வேலையை செய்யத் தொடங்கினாள். பக்கத்து வீட்டு சாந்தி அக்கா மகள் என்னவாம் என்று கேட்க விமலா அவளை ஒரே என்னைப் பற்றிதான் கவலைப் படுகிறாள். எனக்கு உதவியாய் இங்க வரப் போறாளாம் எண்டு அழுகிறாள். நான் தான் வேணாம் நீ அங்கேயே இருந்து நல்லாப்படி எண்டு சொன்னாள் எண்டு சொல்லி விட்டு கண்கலங்கிப் போனாள். ஆனால் மகளோ தாயைப் பற்றி யோசித்துக்கூட பார்க்கவில்லை.

நாள்களும் நகர்ந்து போயின. மகள் கல்லூரி விடுமுறைக்கு வீடு திரும்பினாள். நீண்ட நாள்கள் ஆன பின் தன் மகள் வீட்டிற்கு வருகின்றாள் என்ற சந்தோசத்தில் மகளிற்காக தின்பண்டங்களை செய்துவைத்தாள். ஆனால் மகளோ விடுமுறைக்கு வந்து என்னம்மா நீ வீட்டை இவ்வளவு கேவலமாக வைச்சிருக்கிறாய் எண்டு தாயை கடிந்து கொண்டாள். நான் விடுதியில தங்கப் போறன். வீட்ட தங்கேல எண்டு தாயிடம் பணம் கேட்டாள். விமலாவோ மகளே பணம் உனது படிப்பிற்காகத்தான் சேமித்து வைச்சிருக்கிறன் என்று எவ்வளவோ கூறிப்பார்த்தாள். ஆனால் அடம் பிடித்து பணத்தை வாங்கிக்கொண்டு விடுதிக்கு புறப்பட்டாள். வந்தவள் தான் படும் கஷ்டத்தை யோசிக்கவில்லை என்பதை விட அவள் பேசிய பேச்சுக்கள் அதிக வலியை தந்தன.

தினமும் வேலை செய்து அவளது கைகள் காய்த்துக் கிடந்தன. மகளை குறித்து வேதனையடைந்த அவளிற்கு இரவு கடுமையான காய்ச்சல் ஏற்பட்டது. காய்ந்து போன அவளது கைகளில் கண்ணீர்த் துளிகள் வழிந்து அவளை ஆறுதல்ப் படுத்தின. அடுத்த மாதம் கல்லூரிக்கு பணம் அனுப்ப வேண்டும் என்பதனால் கடுமையான காய்ச்சல் இருந்தும்கூட இரவு முழுவதும் கஸ்டப்பட்டு அதிகளவு விராட்டிகளை தட்டி விற்று பணத்தை சேமிக்கத் தொடங்கினாள். காலம் வேகமாக ஓடியது. மகளின் கல்லூரிப் படிப்பு முடிவடைந்து பட்டம் வழங்கும் விழாவும் நெருங்கி வந்தது. விமலாவிற்கு கல்லூரி அதிபர் மூலமாக அழைப்பிதழ் வந்தது. அதற்காக ஆயத்தப்பட்டு பாடசாலை நோக்கி புறப்பட்ட அவள் மகளிற்காக தான் அர்ப்பணித்த யாவையும் நினைத்துக் கொண்டு சென்றாள். அதிக ஆனந்தத்துடன் சென்று அவள் எதிரே வாகனம் வருவதை அவதானிக்காமல் பாதையை கடக்க முற்பட்ட வேளையில் வாகன விபத்தில் உயிரிழந்தாள். தனது பட்டமளிப்பு விழாவிற்கு தாய் வரவில்லையே என்ற கோபத்தில் வீடு வந்தவள் அதிர்ந்து போனாள். தனது தாயின் உடலை பார்க்க முடியாத அளவிற்கு முகத்தை மூடி கட்டி வைத்திருந்தார்கள். அப்பொழுது தான் பக்கத்துவீட்டு சாந்தி அக்கா உனக்காக விமலா எவ்வளவு பாடுபட்டாள் தெரியுமா என்று கூறி விமலா பட்ட கஸ்டங்களை கூறினாள். மகள் அப்பொழுதுதான் தாயின் அன்பை புரிந்துகொண்டாள். தனக்காக கஸ்டப்பட்ட தாயை சந்தோசப்படுத்த முடியாமல் போய்விட்டதே என ஒவ்வொரு நாளும் கவலைப்பட்டு தாயின் படத்தைப் பார்த்துக் கதைத்துக் கொண்டு இருப்பாள். 10 மாதம் சுமந்து அல்லும் பகலும் நம்மைக் காக்கும் தாய் தெய்வத்திற்கு நிகரானவள்.

மூன்றெழுத்தின் கவிதை அம்மா.

T. ஆகாஸ்
A/L 2020
அராலி சரஸ்வதி ம. வி.



# அன்னையின் அன்பு

ஈர் ஐந்து திங்கள்
கருவிலே வலி தாங்கி
சோதனைகள் பல ஏந்தி
எம்மைப் பெற்றெடுத்த தெய்வம் அம்மா
பெற்றெடுத்த கணம் முதல்
தனக்கென ஓர் உலகமில்லாது
பிள்ளைகளே தம் உலகமென வாழ்பவர் அம்மா
அன்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
எமக்காய் வாழும் உன்னத உறவு அம்மா
தெய்வங்கள் கோடி உயிர் கொண்டு

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூமியில் படைத்த தெய்வம் அம்மா
உறவுகள் பல இருந்தும்
உயிரான உணர்வான கவிதை அம்மா நீ
நீயே! ஓர் அழகான கவிதையம்மா
உனக்கேன் பிறிதாய் கவியம்மா!!!

தேனுஜா செந்தூ
யாழ். இந்து மகளிர் கல்லூ
13ஏ கலைப்பிரி



# அன்பு


விதைத்தான் ஒருவன் விதையாய் அன்பை
அனுபவித்திட வேண்டும் மனிதர் அதனை
பூமியில் தினம் வீசும் அன்பு வாசனை
தேடிடுமே சுவாசிக்க நெஞ்சம் அதனை

சங்கில் குதித்துவிட சமுத்திரம் நினைப்பது போல்
உறவுகள் நிலைத்துவிட அன்பு துடிப்பது ஏன்
விண்ணில் பல விண்மீன் விசும்பி ஒளிர்வதுபோல்
பூமியில் பலர் அன்பு நிலைத்து ஒளிர்கிறதே

அறிமுகம் இல்லாத உறவின் ஆரம்பம் அன்பு
அனைத்தையும் எதிர்கொள்ள துணிவூட்டுவது அன்பு
சாதி - மதம் பாராது தோன்றும் உன்னதமான உணர்வு அன்பு
உயிரான உறவின் பிரிவை புரியவைப்பது அன்பு

உறவுகளை ஏமாற்றத் துணியாதது அன்பு
ஏமாறும் உறவுகளுக்கு ஆறுதலாய் உள்ளது அன்பு
விலகிவிட நினைக்கும்போது விரும்பவைப்பது அன்பு
பிரிதலில் புரிதலை உணர்த்துவதும் அன்பு

ரு. மரிய டொனிற்றா.
க.பொ.த. உயர்தரம்
யா/நெடு/ றோ. க. மகளிர் கல்லூரி.



## அன்பு


கல்வி எனும் சோலையில்
காவியம் எனும் அன்பு
கலைகள் பற்றிய சிந்தனை விழுதில்
கனிந்தது நம் அன்பு

தேடல்கள் மத்தியில்
தெளிவாகியது நம் அன்பு
தென்றலின் அலை வரிசையில்
தேனிசை பரப்பியது நம் அன்பு

உண்மைகளை உறுதிப்படுத்தியது
உன்னதமான அன்பு
உள்ளங்களைத் தெளிவுபடுத்தியது
தெவிட்டாத அன்பு

சங்கடங்களை சரிசெய்தது
சலிக்காத நம் அன்பு
சித்திரம் படைக்க நினைத்தது
சாகாவரம் பெற்ற அன்பு

தி.டிலக்சன்
யா/அத்தியார் இந்துக் கல்லூரி.
பிரிவு 03



FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அன்னை மனம் ஒன்றே அனைத்தையும் அறியும்

இந்த உலகில் பெற்றெடுத்த தாய்க்கு இணையாக வேறுயாரும் இல்லை. இதனால்தான் பலர், ஈன்ற தாயை தெய்வமாக நினைத்து வாழ்ந்து வருகின்றனர். தான் பெற்ற குழந்தைகளுக்காக அனைத்தையும் தியாகம் செய்யும் அந்த தாய்க்கு இணையாக வேறு யாரையும் குறிப்பிட முடியுமா? இந்த தியாகத்தை கௌரவிக்கும் விதமாக ஒவ்வொரு ஆண்டும் மே மாதம் இரண்டாவது ஞாயிற்றுக்கிழமை 14ஆம் திகதி அன்னையர் தினமாக உலகம் முழுவதும் கொண்டாடப் படுகிறது. அன்றைய தினம் அன்னையரை சந்தித்து பரிசு பொருள்கள் வழங்கி அவர்களை மகிழ்வித்து அவர்களிடம் வாழ்த்துக்களும் பெறுகின்றனர்.

"தாயிற் சிறந்த கோவிலு மில்லை" என்ற வரிகள் தாய்மையின் புனிதத்தையும் பெருமையையும் தியாகத்தையும் அடையாளப்படுத்தும் மிக உன்னத வரிகள். தாய்மைக்கு இணையாக இந்த உலகத்தில் எதுவும் இல்லை என்பதை யாரும் மறுக்க முடியாத உண்மை. இப்படிப்பட்ட நிலையில் ஒரு பெண்ணானவள் மகளாக சகோதரியாக தோழியாக தாரமாக தாயாக பாட்டியாக என பல்வேறு நிலைகளில் வாழ்க்கையில் வலம் வருகிறாள். இப்படிப்பட்ட அனுபவங்களின் ஆசானாக எத்தனையோ பாத்திரங்களில் தன்னை நிலைப் படுத்திக் கொண்டு வலம் வந்தாலும் "அன்னை" என்ற பாத்திரம் தான் மிக உன்னத இடத்தை வகிக்கின்றது.

"அம்மா", மண்ணில் பிறக்கும் எந்தக் குழந்தையும் முதலில் சொல்லும் வார்த்தை. உடலில் எங்கேனும் வலியெடுத்தால் நம்மையும் மீறி வாய் உச்சரிக்கும் வார்த்தை தமிழின் முதலெழுத்தான "அ" கரத்தில் ஆரம்பித்து மெல்லினம் இடையாக "ஆ" எனும் ஓசையில் முடிவுறுவதால் "அம்மா" என்ற சொல்லில் இலகுத்தன்மை, இனிமை, மென்மை, அழகு, அன்பு தொனிக்கின்றது. இறைவன் தன் வேலையை இலகுவாக்க தாயைப் படைத்தான் என்பது முற்றிலும் உண்மையான முதுமொழியாகும். "அன்னையும் பிதாவும் முன்னெறி தெய்வம்" என்பது ஔவைப் புலவியின் வாக்கு. அன்னை தந்தையரே நம் கண்கள் முன் நடமாடும் தெய்வங்களாகும். இன்றைய சினிமாவில் கூட கவிஞர்கள் தாயின் மேன்மையையும் மகத்துவத்தையும் பெறுமதியையும் கூறி பாடல்களை இயற்றியுள்ளனர். உதாரணமாக,

"ஆசைப்பட்ட எல்லாத்தையும் காசு இருந்தால் வாங்கலாம்
அம்மாவை வாங்க முடியுமா? நீயும் அம்மாவை வாங்க முடியுமா?"

என்ற பாடலடிகளைக் குறிப்பிடலாம்.

மாதா, பிதா, குரு, தெய்வம் எனும் மூத்தோர் வாக்கில் முதலில் நிற்பவர் மாதா. அன்னைக்கு அடுத்தபடியாகவே தெய்வம்கூட நிலைநிறுத்தப்படுகிறது என்றால் அன்னையின் மேன்மையை என்னவென்று எடுத்துரைப்போம்?! மனித உறவுகளிலேயே உயர்ந்தது தாய் - சேய் உறவு. எத்தகைய உறவினிலும் ஏதோ ஒருவித எதிர்பார்ப்பு இருக்கும். ஆனால் ஒரு தாய்க்கு மட்டுமே தன் சேயிடம் எவ்வித எதிர்பார்ப்புமற்ற அர்ப்பணிப்புடனான அன்பு மிகுந்திருக்கும். ஒரு தாய் தன் வாழ்வையே தன் சேய்க்காக அர்ப்பணிக்கின்றாள்.

பகலிரவாக பசியிருந்து ஐயிரண்டு திங்கள் மேனி நோகச் சுமந்து, தன் விருப்பு வெறுப்பு மறந்து தன் சேய்க்காக கசப்பேனும் புசித்து உயிரையே பிரிக்கும் பிரசவ வலி பொறுத்து பூமியிலே தன் சேயைப் பெறுகின்றவேளை பிறப்பது அங்கே சேய் மட்டுமல்ல அந்த தாயுமே பிறப்பெடுக்கின்றாள். அத்தோடு முடிவதில்லை அவளது கடன். தன்னையே நம்பி தரணியில் பிறந்த குழந்தையான தன் மகவை ஆசையோடு அள்ளிஅணைத்து தன் குருதியையே பாலாக்கி ஊட்டும்போது அவள் தன் உயிரையே உருக்கும் அன்பையுமே ஊட்டுகிறாள். கையிலேந்திய பச்சிளங் குழந்தை மெல்ல வளர்ந்து வருகையிலே அன்னைமனம் குளிர்கின்றது. தன் செல்லப் பிள்ளையின் சின்ன விரல் அசைவும் உதட்டோர பால்மணச் சிரிப்பும் மெல்ல ஒலியெழுப்பும் மழலைச் சொற்களும் அன்னை மனதைப் பேரின்பம் எய்திடச் செய்கின்றன.

"மெல்ல வாய்திறந்து அம்மா" என முதல் வார்த்தையை செல்லப்பிள்ளை உதிர்க்கையில் மேனி நோகச் சுமந்த வலியை மறந்து போகிறாள். தத்தி நடைபயிலும் சின்னப் பாதங்களில் வலியெடுக்குமே என உள்ளங் கலங்கியே தோளில் அள்ளிப்போட்டு மார்போடு அணைக்கின்றாள். பிஞ்சுக்கை கொண்டு தன் சேய் தன்முகத்தை தடவுகையில் அந்த ஸ்பரிசத்தில் தான் பிறந்த பேற்றினைப் பெற்றுவிட்டதாக உணர்கின்றாள். எட்டி உதைக்கும் சின்னக் கால்களை முத்தமிட்டு மகிழ்கிறாள். முந்நூறு நாள் தவமிருந்து பெற்ற பெரும் பொக்கிசத்தை அருந்தவமாக்கி அல்லும் பகலும் கண்விழித்து தன்னலங் கருதாமல் சேய் நலம் கருத்திற் கொண்டு கண்ணை இமை காப்பதிலும் மேலாக கருத்தொருமித்து காவல் நின்று வருகின்றாள்.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அன்னையின் சிந்தனையும் செயலும் தன் சேய் வசமே சுழன்ற வண்ணம் இருக்கும்.

பார்த்துப் பார்த்து சுவையறிந்து உணவு சமைத்து தன் அன்பையும் குழைத்து ஊட்டுகையில் நாளை வளர்ந்து தன் சேய் நல்லதொரு சேயாக நற்பெயரோடும் புகழோடும் சகல பெருமையோடும் ஆளுமையோடும் நற்குடிமகனாக சமூகத்தில் வாழ வேண்டும் எனும் நோக்கில் நன்னெறிக் கதைகள் பல சொல்லி மனதைத் தினமும் பண்படுத்துகின்றாள். தன் குழந்தைக்கு பசி வந்துவிடுமோ என்று அச்சத்தால் மணிக்கணக்காக நிலாக்காட்டி கதைகள் பல சொல்லி பாடல்கள் பாடி அமுதூட்டும் ஆற்றல் அன்னையால் மட்டுமே இயலுமான சாதனையாகும்.

"காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு" என்பர். அன்னையின் அன்பிற்கு ஈடு இணையேதுமில்லை. தன்சேய் எத்தகையதானாலும் எந்த நிலையில் வாழ்ந்தாலும் எத்தனை வயதினரா னாலும் சாகும்வரை அவள் விழிகளுக்கு தன் சேய் கையில் தவழும் மழலையே. அவன் அரசனேயானாலும் அன்னைக்கு அவனென்றும் நேற்றுப் பிறந்த மழலையாகவே தெரிவான். எனவே எந்தவொரு சேயும் தெய்வத்திற்கு நிகரான தன் தாய்க்கு ஆற்றும் மிகப் பெரிய கடன் இறுதிக்கணம் வரை தன் தாயை மதித்து மகிழ்வித்துப் போற்றுதலும் அவளை மகிழ் விக்க சமூகத்தில் நற்பெயரோடு நன்நிலையில் உயர்வுற்று வாழ்ந்து பெருமை சேர்த்தலும் எந் நிலையிலும் தான் தனது தாய்க்கு சிறுசேயே என்றுணர்ந்து ஒழுகுவதேயாகும்.

பலர் அவர்களுடனே ஒரு தெய்வம் இருப்பதை மறந்து, பணம் சம்பாதிக்கும் ஆசையில் கோவில் கோவிலாகச் சென்று வேண்டு கிறார்கள். அம்மாவிற்கு என்று நேரத்தை செலவழியுங்கள். அம்மாவை விட சிறந்த உலகமும் இல்லை சிறந்த தெய்வமும் இல்லை என்பதை உணருங்கள். பணம் மட்டுமே வாழ்க்கை அல்ல என்பதை புரிந்து கொள்ளுங்கள். முதியோர் இல்லம் என்ற ஒன்றை இல்லாமல் செய்வோம். எனவே தாயன்பைப் போல கலப்படமே இல்லாத பூரணமான அன்பை லோகத்தில் வேறெங்குமே காணமுடியாது. இவற்றை உணர்ந்து கொண்ட வர்களாய் எம் அன்னையர்களை மதித்து அன்பு செய்து வாழ்வு வாழ அனைவரும் எமக்குள்ளே ஒரு புதிய மாற்றத்தை உருவாக்கு வோம். என்றுமே, "தரணி போற்ற தாயன்பு கொண்டவர்களாய் வாழ்வோம்"

செல்வி லக்ஸினி அன்ரனிதாஸ்
13ஏ, கலைப்பிரிவு
யாழ்./ வைத்தீஸ்வராக் கல்லூரி





# இயற்கையில் அன்பு

பிரபஞ்சமே இயற்கையின் வடிவம். இறைவனால் இயல்பாகவே அன்பு படைக்கப்பட்டது. அன்பே பலவும் பல வடிவமாக உள்ளது. ஐந்தறிவு ஜீவன்கள் கூட அன்பின் வடிவமானவை. முட்டை யிட்டு குஞ்சுகளை பொரிக்கும். திணைக் குருவி முதல் பருந்து வரை தனது முட்டைகளைஇட்டு அடைகாத்து குஞ்சு பொரித்து அவற்றை ஊண், உறக்கம், இன்றி விழித்து காத்து வருகின்றது. இது இயற்கையின் வடிவம். தனது கூட்டில் கோழி என்றாலும் குருவி என்றாலும் முட்டையை தனது சிறகினால் பாதுகாத்து பேணுகிறது. இது இறைவனால் கொடுத்த அன்பு.

எதிரிகளைக் கண்டவுடன் தனது குஞ்சுகளை சிறகினாலே அல்லது எழுந்து பறந்து பாதுகாக்கிறது. கொடிய மிருகங் களுடன் சண்டையிட்டு பாதுகாக்கிறது. இதுவும் அன்பின் நிமிர்த்தமே ஆகும். இரை தேடி தனது வாய்க்குள் வைத்து குஞ்சிற்கு தீன் கொடுக்கிறது. தாய்பசுவும் தனது கன்றுக்குட்டியை சற்று விலத்தி விட்டால்கூட அம்மா என்று ஏங்கித் தவிக்கிறது. இதுவும் அன்புதான்.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரங்குகூட தனது குட்டியை எவ்வாறு பேணிப் பாதுகாத்து வளர்க்கிறது. மீன்கள் தனது குஞ்சுகளை கண்ணினால் தானே பாதுகாக்கின்றது. இயற்கையின் அன்புதான். அது மட்டுமா மனிதர்கள்கூட இயற்கையாகவே அன்பு கொண்டவர்கள். பணங்கொடுத்து வேண்ட வேண்டிய தேவை இல்லை. அன்பு உள்ளத்தில் இருந்தால் மட்டும் போதும். இதனையே வள்ளுவர் அன்பைப் பற்றி பலவாறாக பேசுகின்றார். அன்பின் வழியது உயர் நிலை என்று கூறப்படுகின்றது. அன்பு தான் கடவுளுக்கு பிரியமான நிலையாகும். அன்பும் சிவமும் ஒன்று தான் என திருமூலர் கூறுகின்றார். இறைவனை அடைவதற்கு அன்பினால் தான் முடியும் எனப்படுகிறது.

உலகிலுள்ள அனைத்திலும் உறைந்திருப்பது கடவுள். ஆகவே அனைத்துச் செயற்பாட்டிலும் அன்புடன் இருத்தல் வேண்டும். இவ்வாறு தாயுமானவர் இறைவனை வேண்டுகின்றார். "எவ்வுயிரும் என் உயிர்போல் எண்ணி இரங்கவும் நின் தெய்வ அருட்கருணை செய்வாய் பாராபரமே. திருவள்ளுவர் சிவபெருமானை கருணாமூர்த்தி என்றும் ஜீவகாருண்யன் எனவும் தயாபரன் எனவும் குறிப்பிட்டுள்ளார். திருவாசகத்தில் அன்பினில் விளைந்த ஆரமுதே என்று மாணிக்கவாசகர் இறைவனை அன்பினால் போற்றிப் புகழ்கின்றார். அதுமட்டுமா புராணங்களிலும் இதிகாசங்களிலும் அன்பின் பெருமையை எடுத்து இயம்பப்படுகிறது. சிபிச்சக்கரவர்த்தி புறாவுக்காக தன்னுயிரையே கொடுத்தான். இதுவும் அன்பை வெளிப்படுத்துகிறது. ஆகவே நாமும் எம்மைச் சுற்றியுள்ளவற்றில் அன்பு செலுத்துவோமாக.

கணேசலிங்கம் போஜனா
7A முதலாம் பிரிவு
வட்டக்கச்சி மத்திய கல்லூரி.



# அன்பு

தித்திக்கும் தேன்மழையாய் இதமான அன்பு
எங்கும் நனைகிறதே தூய்மையான அன்பால்
தினம் தினம் ஏங்குகின்றோம் திடமான அன்பிற்காய்
நிலவுகின்ற யுத்தம் நீங்க அன்பெனும் கவி தொடுப்போம்

கருவறையில் கண்ணியமாய் தோன்றுவது தாயினன்பு
கண்ணாக காவல் காப்பது இறைவனன்பு
கவனமாக பண்பினில் உயர்த்துவது தந்தையினன்பு
கல்விக்கவி ஊட்டி திழைப்பது ஆசானின் அன்பு

ஆழமான அன்பு பிரிவுத்துயர் உணராதது
ஆன்மீக அன்பு துன்பத்தை உணராதது
ஆருயிர் அன்பு என்றும் இணைபிரியாதது
ஆலயங்கள் தேவையில்லை அன்புள்ளம் போதுமே

உள்ளத்து உணர்வுகளை இதப்படுத்தும் அன்பாலே
உயிரிலும் மேலான கல்வி மீதான அன்பாலே
உலகத்து ஒளிவிளக்கான உன்னதமான அன்பாலே
உத்வேகம் கொண்ட உலகமதைப் படைப்போம்

சு.கீர்த்திகா
2019 க.பொ.த. உயர்தரம்
யா/இணுவில் இந்துக் கல்லூரி

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஆசைக்கு ஓர் உச்ச வரம்பிடுவோம்

இறைவனால் படைக்கப்பட்ட பல்கோடி ஜீவ இனங்களுக்கு உடலையும் உயிரையும் கொடுத்து அவை இன்பமாக வாழ அழகான பூமியையும் கொடுத்துள்ளார். அந்தப் பூமியிலே அவை வாழ்வதற்கு பஞ்ச பூதங்களையும் கொடுத்துள்ளார். இந்த ஜீவ இனங்களுக்கு உணர்வு களையும் கொடுத்து அவற்றிற்கு மனம் எனும் ஆத்மாவையும் வழங்கியுள்ளார். இவையாவும் இறைவனால் அனைவருக்கும் கொடுக்கப்பட்ட பொதுச் சொத்தாகும்.

இவ் ஜீவ இனங்களில் மனித இனத்திற்கு சிந்தித்து செயலாற்றும் திறனை இறைவன் விசேடமாகக் கொடுத்து ள்ளார். மனிதனின் ஆத்மா வைச் சுற்றி காமம், குரோதம், லோபம், மோகம், மதம், மாச்சரியம் எனும் ஆறு வகை தீய குணங்கள் வலம் வருகின்றன. இதற்கு காரணம் ஆசை எனும் பெரிய நோயே ஆகும். அதற்கு மருந்தாக ஆசைக்கு உச்ச வரம்பிடுதலையே சுவாமி வலியுறுத்து கிறார். பொன்னாசை, மண்ணாசை, பெண்ணாசை என்னும் மாபெரும் ஆசைகளுக்கு அடிமையாகி வாழ் வதே மனித குலத்திற்கு அழிவை வித்திட்டுள்ளது. இராமாயணத்திலே இராவணனை எடுத்துக் கொண்டால் அவன் பெரிய தவங்கள் செய்து பெற்ற சக்திகள், நாடு, நகரங்கள் அனைத்தையும் பெண்ணாசை காரணமாக இறுதியிலே இழக்கிறான். அவனை அழிக்க இறைவன் ஸ்ரீராமராக அவதரித்து வந்து அழிக்கிறார். இதேபோல மகாபாரதத்திலே மண்ணாசையால் அழிந்த கௌரவர்களை எடுத்துக் கொண்டோமானால் அவர்கள் மண்ணுக்காக ஆசைப்பட்டு பாண்டவர்களோடு போர் செய்கிறார்கள். இதில் இறைவனே ஸ்ரீ கிருஸ்ணராக அவதரித்து வந்து கௌரவர்களை அழித்தார். தர்மத்தின் வழிநின்ற பாண்டவர்களை வெற்றிபெறச் செய்தார்.

ஆசைக்கு ஏன் உச்சவரம்பு இடவேண்டும் என்பதைப் பார்ப்போமானால் அளவிற்கு மிஞ்சிய ஆசைகளே நமது துன்பத்திற்கு காரணமாகின்றன. அளவின்றி ஆசைப்படுபவன் ஐந்து வளங்களையும் முறையின்றி பயன்படுத்துகிறான். அதன் விளைவாக பஞ்ச பூதங்களின் சமநிலை குறைகிறது. அதனால் இயற்கைப் பேரிடர்கள் ஏற்படுகிறது. சூழல் மாசடைகிறது. நோய்கள் பரவுகின்றன. அளவற்ற ஆசைகளால் மனிதனின் ஆளுமைத்தனம் அடிமைத்தனமாக மாறுகிறது. தீய பழக்க வழக்கங்களுக்கு மனிதன் அடிமையாகிறான். மன அமைதியை இழக்கிறான். ஆகவே நாம் மன அமைதியை பெற வேண்டுமாயின் கட்டாயம் நமது ஆசைகளுக்கு ஓர் உச்சவரம்பு இடவேண்டும்.

இன்றைக்கு அத்தியாவசிய பொருள்களின் விலை வானளவிற்கு உயர்ந்துள்ளது. இதற்கு காரணம் மக்களின் ஆசைகள் கண்டபடி அதிகரித்துள்ளமையே ஆகும். எமது ஆசைக்கு எல்லையிடுவதன் மூலமும் தேவைகளை குறைப்பதன் மூலமும் பொருள்களின் விலைகளை குறைக்கலாம். வைராக்கியத்தை வேதாந்தம் கூறும் வழியில் வளர்ப்போம். வைராக்கியம் என்றால் துறத்தல் என்று பொருள். துறத்தல் என்றால் குடும்ப உறவுகள், சொத்துக்களைத் துறத்தல் அல்ல. எங்கள் மனம் கண்டதற்கெல்லாம் ஆசைப்பட்டு ஏங்குவதைத் துறத்தல் வேண்டும். பொறாமை, தற்பெருமை, ஆசை இவைகளை முற்றிலும் எரிக்க வேண்டும். எமது உள்ளங்களை தன்னலமற்ற அன்பால் நிரப்ப வேண்டும். ஆசைக்கு ஓர் உச்ச வரம்பிடுவதால் அனைவரும் எதிர் காலத்தில் அமைதியுடனும் வளமான வாழ்க்கை வாழ முடியும்." என சுவாமி கூறியுள்ளார். ஆகவே நாமும் ஆசைக்கு ஓர் உச்ச வரம்பிட்டு வளமான வாழ்வு வாழ்வோம்.

துவாரகன் கணேசலிங்கம்
பலவிகாஸ் மாணவன்,
யாழ். சாயி நிலையம்.

மனிதன் மனிதனாக வாழ

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மனித மேம்பாட்டுக்கல்வியும் சிறுவர்களும்

வேண்டும். விலங்குகள் போலன்றி. மேம்பாடு மிக்க வாழ்க்கையை மனிதன் நடாத்துவதற்கு நற்பண்புகளைக் கடைப்பிடித்தல் வேண்டும். மனித மேம்பாடு என்பது மனிதனை உயர்ந்த நிலைக்குக் கொண்டு வருதல் என்பதாகும். நல்ல உயர்ந்த பண்புகளைக் கடைப்பிடித்து தனக்கும் பிறருக்கும் பயனுள்ளனவாக வாழ்தல் என்பதாகும்.

இப் பண்புகளைக் கடைப் பிடிப்பதன் மூலம் உயர்வான வாழ்கையை நாம் பெறலாம். பகவான் ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்கள் இதனை ஐந்து மேம்பாடுகளாக வகுத்துள்ளார். சத்தியம், தர்மம், சாந்தி, பிரேமை, அகிம்சை எனும் ஐந்து விழுமியங்களுமே ஐந்து மேம்பாடுகளாகும்.

அன்புடன் சொல்லும் ஒவ்வொரு சொல்லும் சத்தியம், அன்புடன் கூடிய அனுபவமே சாந்தி, அன்புடன் கூடிய புரிதலே அகிம்சை. எல்லாவற்றிற்கும் மேலானது அன்பு. அன்பே மகா சக்தியாகும். அன்பு எப்பொழுதும் கொடுத்துக் கொண்டே யிருக்கும். எதையும் வாங்குவ தில்லை. அன்பு பயமறியாதது. அன்பே அன்புக்கு பரிசாகும்.

எமது உள்ளத்தில் அன்பு இருக்குமானால் எத்தகைய தீய செயலையும் நாம் செய்யமாட்டோம். இந்த ஐந்து மேம்பாட்டு விழுமியங்களையும் கடைப்பிடித்து வாழ்ந்தவர்கள் ஞானிகள் ஆவர். உலகம் போற்றும் உத்தமர்களாக வாழ்ந்தவர்கள் என வரலாறு கூறுகின்றது. சத்தியத்தை கடைப்பிடித்து வாழ்ந்த காந்தி 'மகாத்மா' எனப் போற்றப்பட்டார். தர்மத்தை கடைப்பிடித்து வாழ்ந்த தர்மத்கார் 'தர்மவானாக' போற்றப்பட்டார். இவ்வாறாக கர்ணன், சிபிச்சக்கரவர்த்தி, ரமணமகரிசி, யோகர்சுவாமிகள் போன்றவர்கள் நல்ல விழுமியங்களைக் கடைபிபிடித்து வாழ்வில் உயர்நிலை அடைந்துள்ளனர். கல்வியின் நோக்கம் நற்பண்புகளை பெறுதலே என சுவாமி கூறியுள்ளார். அன்பே வடிவான ஸ்ரீ சாயி அப்பனின் ஆசீர்வாதம் உங்கள் ஒவ்வொருவருக்கும் கிடைக்கட்டும்.

எனது கிராமமாகிய செல்வபுரத்தில் இதனைக் கருத்தில் கொண்டு மனிதமேம்பாட்டுக்கல்வி நல்லாசிரியரிகளால் கற்பிக்கப்படுகின்றது. மாணவர்களாகிய எங்களை நல்ல பிள்ளைகளாக மாற்றுவதே அவர்களுடைய ஒரே நோக்கமாகும். அவர்களுடன் நாமும் ஒத்துழைத்து சிறப்பு மிக்க கல்வியினை கற்று உயர்வடைவோமாக.

நன்றி.

தவராசா திலக்சன்.  
2ம் ஆண்டு விழாவில் பேசியது.  
செல்வபுரம்.  
2019.06.08.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரீட்சையில் வெற்றி

## - பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபா -

### வீட்டில் பயிற்சியாக எழுதிப்பார்த்தல்

- நன்றாக வாசித்து படித்தாலும் மாணவர்கள் பரீட்சை மண்டபத்தில் அவர்கள் திருப்தியாக பரீட்சை செய்வதில்லை, நன்றாக செய்வதில்லை. என்ன காரணம்? ஏனென்றால் அவர்கள் வாசிப்பதை மட்டுமே செய்கின்றனர். அவர்கள் எழுதிப்பயிற்சிப்பதில்லை. பரீட்சைக்கு தயாராகும் போது நீங்கள் வாசிப்பை மட்டுமே மேற்கொள்கின்றீர்கள். ஆனால் பரீட்சையின் போது நீங்கள் பதில்களை எழுத வேண்டியுள்ளது. எனவே நீங்கள் ஒவ்வொருவரும் கட்டாயமாக வீட்டில் எழுதிப்பயிற்சி செய்ய வேண்டும். நீங்கள் பரீட்சை மண்டபத்தில் செய்ய வேண்டியதை நிச்சயம் வீட்டில் பயிற்சி செய்ய வேண்டும். நீங்கள் வீட்டில் வாசிக்கின்றீர்கள். ஆனால் பின்னர் பரீட்சை மண்டபத்தில் நீங்கள் எழுதுகின்றீர்கள். இவை இரண்டிற்கும் இடையில் தொடர்பு எதுவும் இல்லை. வாசிக்கும் போது விளங்க முடியாத சில விடயங்களை எழுதும் போது நிச்சயமாக விளங்கிக்கொள்ள முடியும். எனவே நீங்கள் அடிக்கடி எழுதிப் பழகுவதை கட்டாயப்படுத்திக்கொள்ள வேண்டும். நீங்கள் எவ்வளவுக்கு வீட்டில் எழுதி பயிற்சி செய்கின்றீர்களோ அவ்வளவுக்கு அவ்வளவு அம்முயற்சி பரீட்சை மண்டபத்தில் உதவி செய்யும். நீங்கள் எழுதிப்பயிற்சிப்பவை உங்களுக்கு தெரிந்த விடயங்களாக இருக்கலாம். அவற்றை எழுதுவதால் தாள்கள் வீணாக போவதாக எண்ணலாம். ஆனால் அது ஒரு விடயம் அல்ல. நீங்கள் கட்டாயம் பயிற்சிக்க வேண்டும். இன்றைய காலத்தில் மாணவர்கள் பரீட்சையில் வெற்றியடையாமைக்கு ஒரே காரணம் எழுதிப் பயிற்சிப்பதில்லை.

### இலகுவான வினாக்களுக்கு முதலில் விடையளியுங்கள்

- இரண்டாவது விடயம் என்னவென்றால் நீங்கள் பரீட்சை மண்டபத்திற்கு போகின்றீர்கள். சில மாணவர்கள் வெறுமனே பரீட்சை பத்திரத்தை பார்ப்பதினால் பயப்படுகின்றனர். நீங்கள் கடைப்பிடிக்க வேண்டிய மிக இலகுவான பாதை ஒன்று உள்ளது. முதலாது வினா சில சமயங்களில் கடினமாக இருக்கலாம். கடினமான முதலாவது வினாவைப் பார்த்தவுடனேயே மாணவர்கள் பயப்பட ஆரம்பிக்கின்றார்கள்.

✓ முதலாவது வினா கடினமாக இருந்தால் அதை விட்டு விடுங்கள்.

✓ முதலில் வினாப்பத்திரத்தை மேலோட்டமாக வாசியுங்கள். அத்துடன் இலகுவான வினாவை இனங்கண்டு அவற்றை இலக்கமிட்டு ஒழுங்கு படுத்துங்கள்.

✓ உதாரணமாக நான்காம் வினா இலகுவாக இருந்தால் நான்காம் இலக்கத்தை இட்டு விடையை எழுதுங்கள்.

✓ எனவே நீங்கள் அனைவரும் முதலாவதாக இலகுவான வினாவுக்கே விடை எழுத வேண்டும். பின்னர் கடினமான வினாக்களை பற்றி யோசிக்கலாம்.

✓ முதலாவது வினாவே கடினமாக இருந்தால் நீங்கள் அதற்கு விடையளிப்பதிலேயே நேரத்தை வீணடிக்கின்றீர்கள். அதற்கு பிறகு நேரம் போதாமையினால் உங்களுக்கு மிகவும் சுலபமான வினாக்களுக்கும் விடையளிக்க முடியாமல் போகும்.

### உறுப்பாக எழுதும் திறனை வளர்த்துக் கொள்ளுங்கள்

✓ மேற்கூறியவை மட்டுமல்ல பரீட்சைகள் எழுதும் போது மாணவர்களின் எழுத்துக்கள் உறுப்பமைய இருக்க வேண்டும்.

✓ ஏனெனில் உங்களுடைய விடைகள் உறுப்பமைய எழுதப்பட்டிருந்தால் தேர்வாளர்கள் உங்களுடைய விடையை உயர்த்தி மதிப்பிட தூண்டப்படுவார்கள்.

✓ அவர்கள் உங்களுடைய விடைத்தாள்களை மகிழ்ச்சியாக மதிப்பிடுவதுடன் புள்ளிகளையும் அள்ளி வழங்குவார்கள்.



FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ✓ விடைகள் உறுப்பமைய எழுதப்படவில்லையெனில் தேர்வாளர்கள் வெறுப்படை வார்கள் மனவருத்த மடைவார்கள் அத்துடன் மிகுதி விடைகளையும் கவனிக்காமல் விட்டு விடுவார்கள்.
- ✓ உங்களுடைய இந்த கேடு விளைவிக்கும் செயலினால் மிகுதியாக உள்ள ஏனைய மாணவர்களும் அவர்களுடைய புள்ளியை இழக்கக் கூடும்.
- ✓ உங்கள் விடைப்பத்திரத்தினால் தேர்வாளருக்கு ஏற்பட்ட அதிருப்தி அடுத்துள்ள மற்ற மாணவர்களின் விடைத்தாள்களிலும் மேலும் காட்டப்படும்.
- ✓ தேர்வாளர்களை திருப்திப்படுத்த விடைகள் கட்டாயமாக உறுப்பமைய எழுதப்பட வேண்டும்.
- ✓ இலகுவான வினாக்களுக்கு விடைகளை முதலிலும் விடைகளை உறுப்பமையவும் எழுதினால் நீங்கள் நிச்சயமாக பரீட்சையில் வெற்றியடைய முடியும்.

**உயர் இலக்குகளை கொண்டிருங்கள் - சிறிய இலக்குகள் குற்றத்திற்குரியவை.**

- ✓ சில மாணவர்கள் 35-40% புள்ளிகளை பெற்றுக் கொள்வதன் மூலம் திருப்தியடைகின்றனர்.
- ✓ நீங்கள் கட்டாயமாக 98% இனை இலக்காக கொள்ள வேண்டும்.
- ✓ அப்படி செய்யும் போது உங்களால் குறைந்தது 60-70% இனை பெற்றுக்கொள்ள முடியும்.
- ✓ உங்களுக்கு 35-40% இலக்காக இருந்தால் இறுதியில் நீங்கள் 15-18% தான் பெற்றுக்கொள்ள முடியும். எனவே குறைந்த சிறிய இலக்குகளை ஒரு போதும் கொண்டிருக்க கூடாது.
- ✓ நீங்கள் உயர் இலக்குகளை கொண்டிருக்க வேண்டும். அதன் மூலம் 60-70% இனை பெற்றுக்கொள்ள முடியும்.
- ✓ இது மட்டுமல்ல குறைந்த புள்ளிகளை பெறுவது உங்களுடைய எதிர் காலத்தின் நிலையை குறைத்தே கணிப்பிடுகின்றது.
- ✓ எவ்வாறு? 100 வினாக்களும் அவற்றிற்கு 100 புள்ளிகளும் வழங்கப்பட்டுள்ளது. நீங்கள் 40 பெற்றுக்காண்டால் அதன் கருத்து நீங்கள் 60% பிழைகள் செய்துள்ளீர்கள் என்பதாகும்.
- ✓ நீங்கள் 100 இல் 60 பிழைகளை செய்திருந்தால் எவ்வாறு உங்களை நீங்கள் மாணவர்கள் என அழைக்க முடியும். இது ஒரு பாரதூரமான பிழையாகும். இது வாழ்க்கையின் கறுப்புப்புள்ளி.
- ✓ நீங்கள் எல்லா 100 கேள்விக்கும் சரியாக பதிலளிக்க வேண்டும். ஒன்று அல்லது இரண்டு பிழையாக போகலாம்.
- ✓ எதிர்காலததில் 100 பணிகள் உங்களுக்கு தரப்படும் போது நீங்கள் 60 பிழையாக செய்தால் எவ்வாறு உங்களால் முன்னேற முடியும்.எனவே நீங்கள் அதைச் செய்யக் கூடாது. அதில் 6 தவறுகள் இருக்கலாம். ஆனால் மிகுதி 94 இலும் நீங்கள் சரியாக இருக்க வேண்டும்.
- ✓ இந்த தகுதி தற்போதைய மாணவர்களிடம் இல்லை. அவர்கள் 45-50% எடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள்.
- ✓ நீங்கள் வினாப்பத்திரத்தை எதிர்நோக்கும் போது நீங்கள் முதலாவது வினாவிற்கு நன்றாக விடை எழுதினால் நீங்கள் வினாப்பத்திரத்தின் ஏனைய பகுதியைப் பற்றியும் யோசிக்க வேண்டும்.
- ✓ முதலில் நீங்கள் இலகுவான வினாக்களின் இலக்கங்களை பாகுபடுத்தி அவற்றிற்கு முதலில் விடை எழுத ஆரம்பிக்க வேண்டும்.
- ✓ இவ்வாறு செய்வதன் மூலம் நீங்கள் நன்றாக விடை எழுத தூண்டப்படுகின்றீர்கள்.
- ✓ வினாக்களுக்கு விடை எழுதும் போது நீங்கள் ஆர்வமாக இருப்பதால் நீங்கள் வினாப்பத்திரத்தின் ஏனைய பகுதிகளுக்கும் வெற்றிகரமாக விடையளிக்க முடியும்.
- ✓ எனவே நீங்கள் முதலாவது இலகுவான வினாக்களுக்கே விடையெழுத வேண்டும்.
- ✓ இதுவே வெற்றி மேலும் வெற்றியை உண்டாக்கும் எனப் படுகின்றது.
- ✓ நீங்கள் முதலில் இலகுவான வினாக்களுக்கு விடையெழுதும் போது பின்னுள்ள வினாக்களுக்கும் நன்றாக விடையளிக்க முடியும்.
- ✓ நீங்கள் முதலில் கடினமான வினாக்களுக்கு விடையெழுத ஆரம்பித்தால் பின்னர் வரும் இலகுவான வினாக்களுக்கு விடையளிக்கும் போதும் மனச்சோர்வுடன் காணப்படுவீர்கள்.
- ✓ இந்த மனச்சோர்வு குழப்ப நிலையை உண்டாக்கும்.
- ✓ இந்த குழப்ப நிலையில் ஞாபக சக்தி இல்லாமல் போகும்.
- ✓ இதன் மூலம் உங்களுக்கு விடை தெரிந்திருந்தாலும் அவ் இலகுவான வினாக்களுக்கும் உங்களால் சரியாக

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடையளிக்க முடியாமல் போகும்.

✓ எனவே உற்சாகமாக விடையளிக்க முதலில் இலகுவான வினாக்களுக்கே விடையளிக்க வேண்டும்.

**சரியாக வினா எண்ணை எழுத வேண்டும்**

✓ வினா இலக்கங்கள் எழுதுவதை நீங்கள் ஒரு போதும் மறக்க கூடாது.

✓ நீங்கள் முதலாவது வினா இலக்கத்தை போட்டு விட்டு அதற்கு ஐந்தாம் வினாவின் விடையை எழுதினால் அது தவறான விடை என்றே எடுத்துக் கொள்ளப்படும்.

✓ நீங்கள் ஐந்தாம் வினாவின் விடையை எழுதும் போது ஐந்து என்ற இலக்கத்தை இட வேண்டும்.

✓ இது மட்டுமல்ல சில சமயங்களில் இரண்டு பகுதிகளை கொண்ட ஒரு தொகுதி வினாவப்படலாம். இவ்வாறான வினாக்கள் சில சமயங்களில் மிக கடினமாக இருக்கும்.

✓ சில சமயங்களில் இடைவெளி நிரப்பும் வினாக்கள் வினாவப்படலாம்.

✓ சில சமயங்களில் பின்வரும் கூற்று சரியா? பிழையா? என வினவப்படலாம். அங்கே ஒரு வாக்கியம் தரப்படும் அது சரியா? பிழையா? என தெரிவு செய்ய வேண்டும்.

✓ நீங்கள் வெறுமனே எதேர்ச்சையாக பிழைவரக் கூடியதாக விடையளித்தால் நீங்கள் எதிர்காலத்தில் மேலும் பிரச்சனைக்கு தள்ளப்படுவீர்கள்.

✓ சிலர் இரண்டு தெரிவுகளுக்கும் புள்ளடி இடுவார்கள். இவ்வாறான விடைகளை பார்ப்பதன் மூலம் தேர்வாளர்கள் மிகுந்த கோபமடைவார்கள்.

✓ நீங்கள் இடும் புள்ளடி பிழையாக இருந்தாலும் பரவாயில்லை. ஒரு போதும் இரண்டிற்கும் புள்ளடி இடாதீர்கள்.

✓ இவ்வாறு இரண்டிற்கும் புள்ளடியிடுது மாணவனுக்கு ஒரு வித தகுதியும் இல்லை என்பதை சுட்டிக்காட்டுகின்றது. அத்துடன் அவருக்கு ஒன்றுமே தெரியாது என்பதையும் வெளிப்படுத்துகின்றது.

✓ பரீட்சை மண்டபத்தில் வினாத்தாளை பெற முன் நீங்கள் பிரார்த்தனை செய்ய வேண்டும். பிரார்த்தனையின் பின்னரே நீங்கள் வினாப்பத்திரத்தை பெற்றுக்கொள்ள வேண்டும்.

✓ வினாக்களை ஒன்றன் பின் ஒன்றாக வாசிக்க ஆரம்பிக்க வேண்டும்.

✓ முதலாவது வினா இலகுவாக இருந்தால் அதற்கு விடை எழுதுங்கள். அதன் பின் இரண்டாவது வினா கடினமாக இருந்தால் அதை விட்டு மூன்றாது வினாவுக்கு விடையளியுங்கள். மூன்றாவது வினாவும் கடினமாக இருந்தால் அதையும் விட்டு நான்காம் வினாவுக்கு விடையளியுங்கள்.

✓ இவ்வாறு நீங்கள் விடையளித்த வினாக்களுக்கு நீங்கள் ஒரு குறியீட்டை இட வேண்டும். இவ்வாறு குறியீட்டை இடுவதன் மூலம் இன்னமும் விடையளிக்க வேண்டிய வினாக்களை உங்களால் இனங்காண முடியும்.

✓ ஆனால் வெறுமனே வாசித்துக்கொண்டு செல்வதன் மூலம் நேரம் சென்று விடும். நீங்கள் நேரத்தை பற்றியும் கவனம் செலுத்த வேண்டும்.

✓ நேரம் முடிவடைந்து விட்டால் மணியடித்து விடும்.

✓ அவர்கள் உங்களுடைய விடைப்பத்திரங்களை வாங்கி உங்களிடமிருந்து அப்பால் கொண்டு சென்று விடுவார்கள்.

✓ எனவே நீங்கள் நேரத்தை கவனம் கொள்ள வேண்டும்.

✓ தேவையற்றவற்றை யோசிப்பதன் மூலம் உங்கள் நேரத்தை வீணடிப்பது மட்டுமல்லாமல் உங்களுடைய மனதை சோர்வடைய செய்து விடுகிறீர்கள்.

✓ ஞாபக சக்தி உடனே இல்லாமல் போகின்றது.

✓ ஞாபக சக்தி மறைந்து விடுவது மட்டுமல்லாமல் இது மனக்குழப்ப நிலையையும் உண்டாக்கு கின்றது.

✓ மனக்குழப்ப நிலையின் போது நீங்கள் fuse யும் இழந்து விடுகிறீர்கள்.

✓ எனவே பரீட்சை மண்டபத்தில் மனக்குழப்பத்திற்கு இடமளிக்காதீர்கள். சந்தோசமாக இருங்கள்.

**பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட வினாக்களுக்கும் தயாராக இருங்கள்.**

✓ இன்று எனக்கு கணித பாட பரீட்சை உள்ளது. எந்த வகையான வினாக்களை நான் பெற்றுக் கொள்வேன் இப்படியான பயம் ஒரு போதும் உங்களுக்கு இருக்க கூடாது.

✓ தைரியமாக முகம் கொடுங்கள்.

✓ சந்தேகத்துடன் முகம் கொடுக்காதீர்கள்.

✓ ஒரு சந்தேகமும் இல்லாமல் தொடங்குங்கள்.

MAY THE SOURCE BE MY FORCE

Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✓ வினாக்களை பெற்றுக் கொள்ளுங்கள்.
✓ வினாக்களை முழுமையாக வாசியுங்கள்.
✓ நீங்கள் பாடத்திட்டத்தில் இல்லாத சில வினாக்களையும் பெற்றுக் கொள்ளலாம். அவ்வகையான வினாக்கள் உங்கள் இயல்பறிவை பரீட்சிப்பதற்கானவை.
✓ சில மாணவர்கள் அவ் வினாக் களை பார்த்தவுடன் கோபமடை கின்றனர்.
✓ பாடத்தில் இல்லாத வினாக்களை வழங்கியதற்காக அவர்கள் வினாக்களை தயாரித்தவர்கள் மீது கடும் கோபம் கொள்கின்றனர்.
✓ இது மாணவர்களின் பகுதியி லுள்ள மிகப்பெரிய தவறாகும்.
✓ ஆசிரியர்கள் உங்களது இயல்பறிவு பொது அறிவு இவைகளை பரிசோதிப் பதற்காக அவ்வகையான வினாக்களை வழங்குகின்றனர்.
✓ சில வகையான வினாக்களை மட்டுமே கொடுக்க வேண்டும் என ஒரு சட்டமும் இல்லை. இவ் வகையானவை நவீன காலத்தில் மட்டுமே வந்துள்ளன. ஆனால் நீங்கள் பாடத் திட்டத்திற்கு அப்பாற்பட்டு அவ்வினாக்களு க்கும் நீங்கள் படிக்க வேண்டும்.
✓ ஏன் இந்த எல்லா சஞ்சிகைகள் கொண்டுவரப்பட்டன? ஏன் புதினப் பத்திரிகைகள் கொண்டு வரப்பட்டன?
✓ இந்த சஞ்சிகைகள் புதினப் பத்திரிகைகள் உங்களுடைய பொது அறிவை வளர்க்க உதவி செய்கின்றன. எல்லாம் சரியாக விடையளிக்கப்படல் வேண்டும்.

**மீள்பரீட்சையில்** (supplementary exam) **தங்கியிராதீர்கள்**

✓ நீங்கள் மாறுபட்ட அறிவை கொண்டிருக்க வேண்டும்.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019

✓ நான் கணித பாடத்தில் 100% பெற்றுவிட்டேன். நான் பௌதிகவியலில் 78%பெற்று விட்டேன். இது நீங்கள் தேர்ச்சி பெற்று விட்டீர்கள் என உணர்த்துகின்றதா?
✓ நீங்கள் எல்லா பாடத்திலும் நல்ல மதிப்பெண்ணை பெற வேண்டும்.
✓ நீங்கள் கணிதத்திலும் பௌதிகவியலிலும்நல்ல மதிப் பெண்ணை பெற்று இரசாயனவியலில் நல்ல மதிப்பெண்ணை பெறவில்லையெனில் நீங்கள் தோல்வியடைந்து விட்டீர்கள்.
✓ ஒரு குழாயிலிருந்து நீர் வெளியே வருவதற்கு பத்து துவாரங்கள் தேவையில்லை. ஒன்றே போதும்.
✓ அது போலவே 5 பாடத்தில் நீங்கள் ஒரு பாடத்தில் புள்ளிகளை இழந்தாலும் பரீட்சையில் தோல்வி யடைந்ததாகவே கொள்ளப்படும்.
✓ ஆனால் நீங்கள் செப்டம்பர் மாதம் நடக்கவிருக்கும் பரீட்சையில் தேர்ச்சியடையலாம் என்று நினைக்கலாம். ஆனால் உங்களால் அது முடியாமல் போகலாம்.
✓ நீங்கள் ஒரு பாடத்தை இழந்தால் ஒரு வருடத்தை இழந்து விட்டீர்கள்.
✓ ஒரு பாடத்தை உதாசீனம் செய்தால் நீங்கள் மீண்டும் மார்ச் மாதம் தோற்ற வேண்டியிருக்கும்.
✓ பின்னர் நீங்கள் MSM வட்டத்தினூடு தேர்ச்சியடைய வேண்டியிருக்கும்.(March September March)
✓ நீங்கள் ஒரு போதும் அந்த வட்டத்தில் அகப்படக் கூடாது.
✓ நீங்கள் அடுத்த மீள் பரீட்சைக்கு இடம் கொடுக்கக் கூடாது.
✓ Supplementary itself is sufficiently bad.
✓ எவ்வாறெனினும் எல்லோரும் பட்டம் பெற்று விடலாம். நீங்கள் எவ்வாறு பட்டம் பெற வேண்டும். ஒருவர் O தரமும் இன்னொருவர் A தரமும் வேறொருவர் B தரமும் பெறலாம். மூவரும் சித்தியடைவார்கள். முதலாமவர் முதல் தரம் இரண்டாம் தரம் மூன்றாம் தரம் இவர்கள் நால்வரும் பட்டம் பெற்று விடுவார்கள்.
✓ இவர்கள் அனைவரும் BSc பட்டம் தேர்ச்சியடைந் திருந்தாலும் யார் முதல் தரம் பெற்று தேர்ச்சியடைகிறாரோ அவரே சிறந்தவர்.
✓ நீங்கள் சேவைக்குச் செல்லும் போது முதலாம் தரத்தில் சித்தியடைந்தவரே நேர்முகத்தேர்வுக்காக அழைக்கப்படுவர்.
✓ நீங்கள் மூன்றாம் தரத்தில் சித்தியடைந்திருந்தால் உங்கள் விண்ணப்பம் நிராகரிக்கப்படலாம்.
✓ இவ்வாறே நீங்கள் தேர்ச்சி பெற்று பட்டத்தை பெறுகின்றீர்கள். ஆனால் அந்த பரீட்சையில் தோல்வியடைந்து விட்டீர்கள்.
✓ எனவே நீங்கள் உங்கள் எதிர் காலத்தை யோசிக்க வேண்டும்.
✓ நீங்கள் ஒரு போதும் ஒரு பாடத்திலும் தோல்வியடைய கூடாது.
✓ நீங்கள் தோல்வியடையாமல் இருப்பதற்கு முழு விருப்பத்துடன் வெற்றி பெற செயற்பட வேண்டும்.
✓ நீங்கள் தைரியமாக பரீட்சை மண்டபத்திற்குள் நுழைய வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் அவர்களுடைய கணித பாட சோதனை நடைபெறுகிறது என்பதற்காக உணவினையோ வேறு உண் பண்டங்களையோ எடுத்துக்கொள்வதில்லை.

- ✓ இது சரியானது இல்லை.
- ✓ நீங்கள் தேர்ச்சியடைவதும் தோல்வியடைவதும் உங்கள் படிப்பிலேயே தங்கியுள்ளது. நீங்கள் 2 மாதம் காத்திருக்க தேவையில்லை.
- ✓ உங்களுடைய ஆற்றுகையை பொறுத்தே உங்களுடைய பரீட்சை முடிவுகள் தங்கியுள்ளது.
- ✓ அதன் அடிப்படையிலேயே நீங்கள் மதிப்பெண்களை பெற்றுக்கொள்கிறீர்கள்.
- ✓ நிர்வாகம் பரீட்சை முடிவுகள் அறிவிக்க காலம் எடுக்கலாம். உங்களுடைய ஆற்றுகையை பொறுத்தே உங்களுடைய பரீட்சை முடிவுகள் அமையும்.
- ✓ நீங்கள் வீட்டிற்கு போய் நான் நன்றாக செய்தேன். நான் தேர்ச்சியடைந்து விடுவேன் என கூறலாம்.
- ✓ ஆனால் உன் மனச்சாட்சி சொல்லும்"ஓ மூட மனிதனே நீ நன்றாக செய்யவில்லை நீ ஒரு போதும் தேர்ச்சியடைய மாட்டாய்."
- ✓ எனவே நீங்கள் உங்கள் மனச்சாட்சியை திருப்திப்படுத்த வேண்டும்.
- ✓ அதற்கு நீங்கள் தன்னம்பிக்கை கொண்டிருக்க வேண்டும்.
- ✓ ஒரு சில கேள்விகளுக்கு பல விடைகள் இருக்கும். நீங்கள் ஒன்றுக்கு மேற்பட்ட விடைகளை பற்றி யோசிக்க கூடாது. நீங்கள் யோசிக்கும் எல்லா விடையும் எழுத கூடாது.
  அது மூன்று விதமான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது. ஆனால் இந்த வினாவிற்கு சரியான விடை எது? பின்னர் அச்சரியான விடை பற்றியே சிந்திக்க வேண்டும்.
- ✓ சரியான விடையை எழுதுவதற்கு பதிலாக உங்கள் மனதில் தோன்றும் எல்லா விடைகளையும் எழுதினால் நீங்கள் புள்ளிகளை இழக்க நேரிடும்.
- ✓ இன்னொரு வினாவிற்கு 10 புள்ளிகள் வழக்கப்பட்டுள்ளது. ஆனால் வினா ஒன்று எனினும் அங்கு 10 உபவினாக்கள் இருக்கும் எனின் அவற்றையும் கவனத்தில் எடுக்க வேண்டும். இந்த 10 வினாக்களில் நீங்கள் உங்களுக்கு தெரிந்த வினாவிற்கு கட்டாயம் பதிலளிக்க வேண்டும் உங்களுக்கு அந்த உரிமை உள்ளது. இலகுவான வினாக்களுக்கு விடை எழுதுவதற்கான எல்லா உரிமையும் உங்களுக்கு உள்ளது.
- ✓ உதாரணமாக வரலாறு போன்ற பாடங்களில் ஆசிரியர்கள் உலகப்படங்களைத் தரக்கூடும். சில சமயங்களில் ஆசியா அவுஸ்ரேலியா போன்ற நாடுகளை வரையச் சொல்லிக் கேட்கலாம். இவை உங்கள் பொது அறிவிலேயே தங்கியுள்ளது.
- ✓ சாமர்த்தியமும் சிலசமயங்களில் அவசியமாகின்றது.

**IAS** நேர்முகத்தேர்வை எவ்வாறு முகங்கொடுப்பது? (இலங்கையில் **SLAS** - இலங்கை நடைமுறை நிர்வாக சேவை)

IAS உத்தியோகத்தர்கள் இருக்கிறார்கள். அவர்கள் நேர்முகத்தேர்விற்காக அழைக்கப்படுகிறார்கள். அந்த நேர்முக மன்றத்தினுள்ளே உத்தியோகத்தர்கள், உயர்நிலை மனிதர்கள், மன்ற உறுப்பினர்கள் அனைவரும் ஜெமதர்மர்(இயமன்) போல காட்சியளிப்பார்கள்.

- ✓ ஒரு அலுவலர் பரீட்சாத்தியை உள்ளே வருமாறு அழைப்பர். வேறு ஒரு அலுவலர் அவரை அமரும்படி கேட்டுக்கொள்கிறார். அங்குள்ள அனைவரும் குழப்பத்தை உண்டாக்கும் விதமாக ஒரே நேரத்தில் கதைப்பார்கள்.
  இது மாணவனை பதற்றமுள்ளவனாக மாற்றும். நீங்கள் பதற்றமுள்ளவராக மாறக் கூடாது.
- ✓ நீங்கள் அனைவரும் சிரித்த முகத்துடன் 'ஆம்' என்று பதில் அளிக்க வேண்டும்.
- ✓ சிலர் 'சகோதரரே இங்கு வாருங்கள்' என்று அழைத்து அமரச் செய்வார்கள். அவர்கள் இனிமையாகப் பேசுவார்கள்.
- ✓ பின்னர் அங்குள்ளவர்கள் வினாக்களை கேட்பார்கள்.

"எப்போது வந்தீர்கள்" - நான் சற்று முன் தான் வந்தேன்

"படியால் வந்தீர்களா அல்லது மின் உயர்த்தி மூலம் வந்தீர்களா? " -நான் படியால் ஏறி வந்தேன்.

"எத்தனை படிகளில் ஏறி வந்தீர்? " - படிக்கட்டில் உள்ள படிகளை நான் எண்ணவில்லை. இவைகளே உங்களது பதில்களாக உள்ளது

- ✓ ஆனால் அங்கு நீங்கள் உள்ளது போன்று புத்திக் கூர்மையை





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன் படுத்த வேண்டும்.

- ✓ "Sir நான் திரும்பி இறங்கும்போது உள்ள படிகளின் எண்ணிக்கை அளவான படிகளையே ஏறி வந்தேன்" இதுவே சரியான பதில்.
- ✓ படிகளை எண்ணவில்லை என்று சொல்வதற்கு நீங்கள் பயப்பட தேவையில்லை. "நான் இறங்கும் போதும் உள்ள படிகளில் எண்ணிக்கைக்கு சமனான படிகளையே ஏறி வந்தேன்" என்று நீங்கள் சொல்லலாம்.
- ✓ பின்னர் அவர்கள் "நீங்கள் பஸ்ஸிலா/ ரயிலிலா வந்தீர்கள் என கேட்பார்கள்" - நான் ரயிலில் வந்தேன்.

பின்னர் "ரயிலில் வரும் போது புகை பின்னோக்கியா/ முன் நோக்கியா சென்றது? " நான் பார்க்கவில்லை. நான் உள்ளே இருந்தேன். நான் புகை எங்கு சென்றது என பார்க்கவில்லை என யோசிக்கக்கூடாது. புகை எதிர்ப் பக்கமாகவே போக வேண்டும்.

புகையிரதம் முன் நோக்கி செல்லும் போதும் புகை பின் நோக்கிச் செல்லும் இது இயல்பான அறிவு.

- ✓ வேறொரு நபர் "நீங்கள் கணிதம் படித்தீரா? அட்சர கணிதம் படித்தீரா? " அப்படியானால் ஒரு மைப் போத்தலினுள் அடைக்கப் பட்ட புலியை எவ்வாறு வெளியே எடுப்பது என்று கூற முடியுமா? பின்னர் நீங்கள் கேட்பீர்கள் "Sir ஒரு மைப் போத்தலினுள் புலி உள் நுழைதல் எவ்வாறு சாத்தியம்" என்று இது புத்தி சாலித்தனம் அல்ல "மைப் போத்தலில் புலி எவ்வாறு உள்ளிட்டதோ அப்பாதையாலேயே அது வெளியே வரும்" இவ்வாறு பதிலளிக்க வேண்டும்.
- ✓ இவ்வாறான அனைத்து வினாக்களும் ஒரு பொது அறிவை விருத்தி செய்வதற்காகவே வினவப்படுகின்றது.
- ✓ பின்னர் இன்னொரு வினா.

கதவு மிகவும் சிறியது ஆனால் அறையினுள்ளே நடுவில் பெரிய கண்ணாடி உள்ளது. இப்படிப்பட்ட ஒரு பெரிய கண்ணாடி இந்த சிறிய கதவினூடாக எவ்வாறு கொண்டுசெல்லப்பட்டது?

நீங்கள் சொல்ல வேண்டும் "Sir இந்த கண்ணாடி இந்த கதவு வைக்கப்பட முன்னரே உள்ளே கொண்டு சென்றிருக்கப்பட வேண்டும். எனவே கண்ணாடி முதலில் வைக்கப்பட்ட பின்னரே கதவு உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

- ✓ நீங்கள் நேர்த்தியான யோசனையோடு இவ்வகையான அறிவையும் கொண்டிருக்க வேண்டும்.
- ✓ நீங்கள் இவ்வாறான வினாக்களுக்கு விடையளிப்பதற்கு சாமர்த்தியமான புத்தியை கொண்டிருக்க வேண்டும்

**பரீட்சைகள் உங்கள் சுய முன்னேற்றத்திற்காகவே நடாத்தப்படுகின்றன.**

- ✓ எனவே உங்களுடைய வினாப்பத்திரத்தில் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட வினாக்களிற்கும் நீங்கள் முகம் கொடுக்க நேரிடும்.
- ✓ இந்த முறையும் இரண்டு வினாக்கள் அவ்வகையாக அமையும்.
- ✓ அதற்காக உங்களுடைய ஆசிரியர்களை நிந்திக்காதீர்கள்.
- ✓ அந்த பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட வினாக்கள் இவ்வாறு வருகின்றன? ஏன்?

அப்படிப்பட்ட வினாக்கள் கடைசி வருட மாணவர்களின் வினாத்தாளில் அமையும்.

- ✓ எனவே நீங்கள் படிக்கும் போதும் வலுஅவதானமாக இருக்க வேண்டும்.
- ✓ அவைகள் பாடத்திட்டத்திற்கு அப்பாற்பட்டவை எனினும் நான் அவற்றை அறிந்திருக்க வேண்டியுள்ளது.
- ✓ எனக்கு தெரிந்தவற்றை எழுதுவது ஒரு மிகப்பெரிய விடயமல்ல.
- ✓ அவை எனக்குத் தெரியாத விடயங்களாக இருந்தாலும் நான் முகம் கொடுக்க வேண்டும்.
- ✓ Do you mean to say that what all you are writing you already know all that? Those which you don't know before, you are reading now.
- ✓ எனவே தெரியாத விடயங்களை மிகவும் கவனமாக தெரிந்துகொள்ள வேண்டும்.
- ✓ நாங்கள் ஆசிரியரையோ வினாப்பத்திரம் தயாரிப்பவரையோ நிந்திக்க கூடாது.
- ✓ இரசாயனவியல் பாடத்தில் சில பாடத்திட்டத்துக்கு அப்பாற்பட்ட வினாக்கள் உள்ளன.
- ✓ உங்களுடைய ஆசிரியரும் பரீட்சை வினாத்தாள் தயாரிக்க

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org




சென்றார்தானே என்பதற்காக அவரை நிந்திக்கக் கூடாது.

- ✓ அவருக்கு எல்லா வினாப்பத்திரங்களும் தெரியும்.
- ✓ அவருக்கு அவ் வினாக்களை சொல்லக்கூடாத கட்டுப்பாடு உள்ளது. அது அவருடைய கட்டுப்பாடு.
- ✓ நீங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும்.
- ✓ ஒவ்வொருவரும் அவருடைய தனிப்பட்ட கட்டுப்பாட்டைப் பின்பற்ற வேண்டும்.
- ✓ ஆசிரியர் உங்களுக்கு எல்லா வினாக்களையும் சொல்லுவார் எனில் நீங்கள் பரீட்சைக்குத் தோற்ற வேண்டியது இல்லை.
- ✓ எனவே பரீட்சைகள் ஏன் நடைபெறுகின்றன? நீங்கள் ஒரு உயர்மட்டத்தை அடையவே பரீட்சைகள் நடைபெறுகின்றன.
- ✓ பரீட்சையின் காரணமாக நீங்கள் பயத்தினை வளர்த்துக் கொள்கின்றீர்கள்.
- ✓ சில முட்டாள்கள் பரீட்சை பிற்போடப்படுவதை விரும்புகின்றார்கள். இதனால் யார் கஷ்டப்படப் போவது, நீங்கள் காலத்தை இழக்கின்றீர்கள்.
- ✓ ஏப்ரல் மாதத்தில் வீட்டுக்கு போவதற்கு பதிலாக நீங்கள் செப்டம்பர்ஒக்டோபர் வரை காத்திருக்கத் தேவையில்லை.
- ✓ நீங்கள் பரீட்சையை விரைவாக தோற்றினால் நீங்கள் அடுத்த இலக்கை எடுக்கலாம்.
- ✓ Post-graduate நெறிகளை தொடர்வதற்கு கூட நீங்கள் அனுமதியை பெற்றுக்கொள்ளலாம்.
- ✓ பரீட்சைகள் நெருங்குகின்றன என்பதையிட்டு நீங்கள் மிகவும் சந்தோசப்பட வேண்டும்.
- ✓ முழுவருடங்களாக காத்திருந்து பரீட்சைக்கு தயார்ப்படுத்த முடியவில்லை எனில் அது உங்களுடைய சோம்பலாகும்.
- ✓ ஒரு வருடம் முழுவதுமாக தயார் படுத்த முடியாத ஒன்றை எவ்வாறு ஒரு மாதத்தில் தயார்ப்படுத்த முடியும்?
- ✓ இதில் அர்த்தம் ஏதுமில்லை, பரீட்சையை பிற்போடுவதில் ஒரு பயனுமில்லை.
- ✓ பரீட்சைகள் குறிப்பிட்டவாறு நேரத்திற்க்கு விரைவாக நடைபெறுவது சிறந்தது.
- ✓ (The test is the real rest) எப்படி? ஒவ்வொரு விடயத்திலும் பரீட்சைகள் சோதனைகள் இருக்க வேண்டும். பரீட்சைகளே உங்களை முன்னோக்கி கொண்டு செல்கின்றன.
- ✓ ஒருவர் முதலாம் தரத்தில் பாடசாலையில் சேர்க்கப்படுகிறார்.
- ✓ ஒருவர் வருடாந்த பரீட்சைக்கு தோற்றும்போது ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு தரத்திற்கு உயர்த்தப்படுகிறார்.
- ✓ பரீட்சைகள் நடைபெறவில்லை எனில் வாழ்நாள் முழுவதும் ஒருவர் தரம் ஒன்றிலேயே இருக்க வேண்டும்.
- ✓ அவர்களை தரம் உயர்த்துவதற்கு அமைவாக பரீட்சை நடைபெறுகிறது.
- ✓ இது எமது நன்மைக்காகவே நடைபெறுகிறது என்பதை நீங்கள் உணர வேண்டும்.
- ✓ படிக்கும் காலத்தில் மட்டுமே பரீட்சைகள் உரியது அல்ல. ஆன்மிகம், நீதி, விஞ்ஞானம் அனைத்துக்கும் உரியது.
- ✓ நீங்கள் தேர்ச்சியடைந்து வேலைக்கு செல்வதாக வைத்துக் கொள்வோம் நேர்முகத்தேர்வு அட்டையை வைத்துக் கொள் கிறீர்கள்.
- ✓ அந்த நேர்முகத்தேர்வும் ஒரு விதமான பரீட்சையே அங்கு நீங்கள் பரீட்சிக்கப்படுகின்றீர்கள். பரீட்சை இல்லாமல் ஒரு வேலைக்கு எவ்வாறு நீங்கள் தகுதி ஆகலாம். எனவே பரீட்சை மிகவும் முக்கியமானது.


ஜெய் சாய்ராம்.

நன்றி: My Dear Students Vol: 3

Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# ஈஸ்வரம்மா சமாதி

## பிரசாந்தி வரலாற்றுப் பதிவு - 4

பிரசாந்தி நிலையத்தை விட்டு சமாதி வீதியால் சென்றவுடன் தேர்ந்தெடுக்கப்பட்ட பெற்றோரின் சமாதி தென்படுகிறது. அங்கு உள்ளே சென்றவுடன் ஏதோ திரும்பவும் பிரசாந்தி நிலையத்திற்குள்ளே நுழைந்தது மாதிரி இருந்தது. நிழலான குளிர்மையான மரங்கள் நிறைந்த இடம். சமாதிக்கு அருகிலே போனால் கிருஸ்ணருக்கான கோவிலும் இன்னும் சிறிது தூரத்தில் சுவாமி தத்தாத்திரேயாவின் கோவிலும் உள்ளன.

பிருந்தாவனத்தில் கோடைக் கால நிகழ்வுகள் நடந்து கொண்டிருந்தன. 1972 ஆம் ஆண்டு மே மாதம் 6 ஆம் திகதி காலை ஈஸ்வரம்மா கீழ் மாடியிலிருந்து சுவாமி ! சுவாமி ! என்றழைத்தார். சுவாமி மேல் மாடியிலிருந்து நான் வருகிறேன் ! நான் வருகிறேன் ! என்று சொல்லி மிக விரைவில் தாயாரின் அருகில் நின்றார். சுவாமி தான் கொண்டு வந்த பட்டுச் சீலையால் மூடி அருகில் நின்ற மூத்த சகோதரி வெங்கம்மாவுக்கு "ஒரு வருத்தமுமின்றி அமைதியாக உடலை விட வேண்டு மென்று பிரார்த்தித்ததன் பலனாக மிகவும் அமைதியாகச் சென்று விட்டார்" என்று சொன்னார்.

தாயார் ஈஸ்வரம்மாவை உலகிலுள்ள அடியார்கள் மரியாதையுடன் போற்றி வணங்குகிறார்கள். அவர் தேர்ந்தெடுக்கப்பட்ட தாயென்றாலும் தனக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை நிகரற்ற பல செயல்களுக்காக பகவானை வேண்டி மக்களின் துயரத்தை துடைத்துள்ளார் என்பதை நாம் மறக்க முடியாது.

பாடசாலைகள், வைத்தியசாலை, குடிநீர்வசதி ஆகியவற்றைப் புட்டபர்த்தியில் நிறுவுமாறு பகவானைக் கேட்டு செய்வித்துள்ளார். வைத்தியசாலை கட்டப்படும் போது தானும் ஏனைய பக்தர்களைப் போன்று கல், மண் சுமந்து சென்று சேவையிலீடுபட்டார். கிராமங்களுக்குள்ளே சென்று கிராம மக்களின் துயர் அறிந்து சுவாமியிடம் மன்றாடி நிவாரணம் எடுத்துக் கொடுத்துள்ளார். கிராம மக்கள் நோய் வாய்ப்பட்டால் அவர்களை தானே வைத்தியசாலைக்கு கூட்டி வந்து அனுமதித்து இருக்கும் வரை அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச் செய்தார். மக்கள் தங்களுக்குத் தெய்வீகத் தாய் ஒருவர் உள்ளார் எனப் பலமுறை சொல்லியுள்ளார்கள். ஒருமுறை மேற்கு கோதாவரியிலிருந்து பெற்றோர் சுகவீனமான பிள்ளையை பகவானின் ஆசீர்வாதம் பெறுவதற்காக ஒரு கிழமை காத்திருந்தும் கிடைக்காமல் மிகவும் கவலையுடன் புறப்பட ஆயத்தமானார்கள். இதை அறிந்த தெய்வீகத் தாய் அச் சிறு பிள்ளையின் கையைப் பிடித்து சுவாமியின் அறைக்குள் இழுத்துச் சென்று அங்கு சுவாமியிடம் பிள்ளைக்கு உதவுமாறு மன்றாடினார். சுவாமி பார்க்கலாம் பார்கலாம் என்று சொல்ல உடனே அப் பிள்ளையைக் குணப்படுத்துமாறு பகவானை வேண்டினார். பகவானும் மறுக்காது சுகமாக்கி அனுப்பினார். பக்தர்கள் தாயாரிடம் பிரார்த்தித்தால் பகவானிடம் வேண்டியதை பெறலாமெனத் தெரிந்து கொண்டார்கள்.

சுவாமி, ஒவ்வொரு வருடமும் ஈஸ்வரம்மா தினத்தன்று தாயாரின் சமாதிக்கு வந்து மரியாதை செலுத்துவது வழக்கம். 2010 ஆம் ஆண்டு மே மாதம் 6ஆம் திகதி சுவாமி தன் உடலில் சமாதிக்கு வந்திருந்தார். அதுவே அவரின் கடைசி வருகை. அன்றைய தினம் சுவாமி சமாதி கட்டடத்திற்குள் சென்று கிரியை வழிபாட்டை அவதானித்தார். மாணவர்கள் வெளியே பஜனை பாடினார்கள். சுவாமி திடீரென மாணவர்கள் இருவரை உள்ளே வருமாறு கூப்பிட்டார். அம் மாணவர்களில் ஒருவர் திரு. அரவிந்தசாயி மற்றைய மாணவனுடன் சேர்ந்து

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஈஸ்வரம்மாவின் புகழை "புறக்கத்தா" (கதாப் பிரசங்கம் போன்றது) மூலம் பாடுவது வழக்கம். சுவாமி அவர்களை இரு பாட்டுக்கள் பாடுமாறு கேட்டார். பாட்டுக்கள் தெலுங்கு மொழியில் பாடப்பட்டது. அப் பாட்டுக்களும் கருத்தும் பின்வருமாறு.

"ரத்னாகர வம்சபு இராஜமாதா
சமதக்கு மமதக்கு புனதி லேசின புனித
நிறக்திக்கு சிரநிவதிக்கு நிலாசின நெல்லிய கீதா
மதுரு தெரிசானு மரிபிஞ்சின தெய்வமாதா
நிரினசின பக்திக்கு தொலி கோடி குத்தா
மகிலாமணி லோகநிக்கி பகவத் கீதா
நினுக்கண்ண புதமி தல்லிக்கு சன்னிஹிதா'

அவர் கிரீடத்திலுள்ள உன்னதமான ஆபரணம் போல ரத்னாகர வம்சத்தில் உதித்தார். அவர் அன்புக்கும் ஒற்றுமைக்காகவுமே மிளிர்ந்தார். சமூகத்தில் ஒழுக்கத்திற்கும் சேவைக்காகவும் பாடுபட்டார். பக்தர்களில் துகிலிலிருந்த பக்தியை எழுப்பி விட்டார்.

"யெந்தோ கொப்ப இந்திவம்மா
சாந்தியோ ஈஸ்வரம்மா
யெந்த கொப்ப இந்திவம்மா
வெரு சாத்திவேறுநீக்க ஜகதி
லோன தேதும்மா'

சுவாமி எவ்வாறு அன்பையும் பக்தியையும் அம்மாவிடம் காட்டி எமக்குப் பாடம் படிப்பித்துள்ளார். அவர் காட்டிய மாதிரி எமது தாய்மார்களிலும் அன்பும், கருணையும் பக்தியும் நாம் காட்ட வேண்டும்.

தாயாரைப் பற்றி யாராவது பாடியதும் சொன்னதும் சுவாமியின் இதயம் நெகிழ்ந்து விடும். எத்தனையோ தடவைகள் கண்கலங்கி விம்மி அழுதுமுள்ளார். இதேபோல நாமும் தாயாரை நினைத்தாலோ யாராவது சொல்லக் கேட்டாலோ இதயம் உருக வேண்டும். 2010 ஆம் ஆண்டு தான் பெற்றோர்களின் மாபிள் சிலை பிரதிஸ்டை செய்யப்பட்டது. இச் சிலைகளை ஜெய்ப்பூரிலிருந்த சிற்பியைக் கொண்டே செய்வித்தார். இச் சிலைகளை ஒருமாதம் வரை யஜுர் மந்திரில் வைத்து போகவும் வரவும் அன்பும் மரியாதையும் செலுத்தினார்.

மாணவர்களும் இச் சிலைகளை பூக்களால் அலங்கரித்து வைப்பார்கள். சுவாமி சிலைக்கு முன் நின்று "அம்மா எவ்வளவு அழகாக இருக்கிறார். அவரின் பின்னல் வடிவாகப் பின்னப்பட்டுள்ளது. காதணி அழகாக இருக்கிறதைப் பார்" என்று அறையில் சேவை செய்யும் மாணவர்களுக்குச் சொல்லுவார். எவ்வாறு தாய் மீது அன்பு காட்ட வேண்டு மென்று சுவாமி எங்களுக்குக் காட்டியுள்ளார்.

அன்பர்களே! புட்டபர்த்திக்கு வரும் போது பெற்றோரின் சமாதியைச் சென்று வணங்கவும்.

நன்றி ரேடியோசாய்
http://media.radiosai.org/journals/Archives/darshan-video/Prasanthi-Chronicles.htm

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பிராந்தியச் செய்திகள் : வடபிராந்தியம்

**அன்புவார நிகழ்வு**

2001ஆம் ஆண்டு முதல் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் கடைசி வாரத்தில் பாடசாலை மாணவர்களுக்கிடையே அன்பு என்னும் தலைப்பில் கட்டுரை, கவிதை, சிறுகதை, சித்திரப் போட்டிகள் நடத்தப்பட்டு வருகின்றன. இதற்காக மாணவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து (5,6,7ஆம் வகுப்புகள், I 8,9,10 வகுப்புகள், II 11,12,13ஆம் வகுப்பு மாணவர்கள் III ) போட்டிகள் நடத்தப்பட்டன. 102 பாடசாலைகளிலிருந்து 1536 மாணவர்கள் கடந்த வருடம் (2018) பங்கு பற்றினார்கள். இப் போட்டியில் பரிசு பெற்ற ஆக்கங்கள் சில பிரசுரிக்கப்பட்டுள்ளன. இம்முறை பாடசாலைகளுக்கு நேராகச் சென்று பரிசில்களும் சான்றிதழ்களும் கொடுக்கப்பட்டன.

**கிராம எழுச்சிச் செயற்பாடுகள்** : செல்வபுரம், இன்பச்சோலை, திருமால்புரம், மாவைகலட்டி, பாரதிபுரம், பொன்னம்மா கிராமம் ஆகிய கிராமங்களில் மனித மேம்பாட்டுக் கல்வி, வீடுகள் அமைப்பு, பெற்றோரியல், இளைஞருக்கு தலைமைத்துவம் ஆகிய செயற்பாடுகள் ஒழுங்காக நடக்கின்றன. இக் கிராமங்களில் அயலிலுள்ள சாயி நிலையங்கள் (3 - 5) ஒன்றாகச் சேர்ந்து சேவை செய்கின்றன.

**பன்முகச் செயற்பாட்டுத்திட்டம்**

மிகவும் உள்பகுதியிலுள்ள கிராமங்களைத் தெரிவு செய்து அங்கே இருக்கின்ற பாடசாலையில் ஒருநாள் நிகழ்வுகளை நடத்தி வருகிறோம். அங்கே மாணவருக்கு மனித மேம்பாட்டுக் கல்வி பெற்றோருக்குப் பெற்றோரியல் ஆசிரியர்களுக்கு சத்திய சாயி கல்வி முறையில் கருத்தரங்கு, மருத்துவ முகாம், வறிய குடும்பங்களுக்கு அன்புப் பொதி, மாணவர்களுக்கு கொப்பிகள், நாராயண சேவை ஆகியன ஒரே நாளில் செய்யப்பட்டன. இதுவரை மூன்று கிராமங்களில் நடத்தப்பட்டது.

FAITHLIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019

**நயினாதீவு புதிய மண்டப திறப்புவிழா**

நயினாதீவு 5 ஆம் வட்டாரத்தில் அமைக்கப்பட்ட புதிய சத்திய சாயி பஜனை மண்டப திறப்பு விழா 12.9.2019 வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் இலங்கை சத்திய சாயி நிறுவனங்களின் மத்திய அறக்கட்டளை முன்னாள் உறுப்பினர் சாயி சகோதரி மாலா சபாரட்ணம் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் மத்திய சபை தலைவர் திரு.வி.மனோகரன் மற்றும் சத்திய சாயி நிலையங்களின் உறுப்பினர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

**யாழ். சாயி நிலையம்** :

மேலும் சில சேவைகளைக் கிரமமாகச் செய்து வந்துள்ளது. வெள்ளை பிடித்த கண்வில்லைகளை (Cataract) அகற்றும் சத்திரசிகிச்சை சேவை. அவர்களைத் தூர இடத்திலிருந்து (வன்னி) அழைத்து வந்து யாழ். நிலையத்தில் ஆறுதல் எடுத்த பின்பு யாழ். போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டு சத்திரசிகிச்சை செய்யப்பட்டது. நோயாளர்களுக்கு ஒரு செலவும் இல்லை. சத்திரசிகிச்சையின் பின்பு யாழ். நிலையத்திற்கு வந்து ஆறுதல் எடுத்து சிறு உதவிகள் பெற்று வீட்டிற்கு கொண்டுபோய்ச் சேர்க்கப்பட்டார்கள். மாதம் ஒன்று அல்லது இருதடவைகள் இச் சேவை நடைபெற்று வருகிறது.

**கிராம விஜய சேவை** :

மிகவும் எட்டாத இடத்திலுள்ள கிராமத்திற்குச் சென்று மருத்துவ முகாம், அன்புப் பொதி வழங்கி நாராயண சேவை செய்கின்றார்கள்.

**மிருகவைத்திய முகாம்** :

07.06.2019 அன்று கொல்லன்கலட்டியில் நடைபெற்றது. மிருக வைத்தியர்களின் அனுசரணையுடன் 350 கால்நடைகளுக்குப் பயன் கிடைத்தது.

### வடமத்திய பிராந்தியம்

**நினாக்கேணி** :

பன்முக நிகழ்வுகள் 14.7.2019 அன்று நடைபெற்றது. பிரார்த்தனை, மனித மேம்பாட்டு கல்வி பாடசாலைச் சிறுவர்களுக்கு 12 கர்ப்பிணித் தாய்மாருக்கு அன்புப் பொதி வழங்குதல், இலவச மருத்துவ முகாம் ஆகியவை நடாத்தப்பட்டன. விசேடமாக 28 பயனாளிகள் கண்ணாடி பெற்றுக் கொண்டனர். 72 பேரின் கண்கள் பரிசோதிக்கப்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருகோணமலை சாயி நிலையம்**
பதவி வகிப்போருக்கான பயிற்சிப் பட்டறை 19.5.2019 அன்று நடைபெற்றது.

பொன்விழாவை முன்னிட்டு (1968.12.29) ஸ்ரீருத்ர ஹோமம் நடாத்தப்பட்டது.

சாதனா பயிற்சி முகாம் 8.6.2019, 13.6.2019 ஆகிய தினங்களில் இடம் பெற்றது.

ஒவ்வொரு போயா தினமும், உணவுப் பார்சல்கள் நான்கு சிறுவர் இல்லங்களுக்கும் கொடுக்கப்பட்டது.

**முல்லைத்தீவு, தண்ணீரூற்று :**
சத்திய சாயி நிலையத்தால் மாதாந்தம் 150 முதல் 200 பிள்ளைகளுக்குப் பண உதவியும் ம.மே.கல்வியும் வழங்கப்படுகின்றன. ஆசிரியர்களுக்கு மனித மேம்பாட்டுக் கல்வி பயிற்சி முகாமும் நடைபெற்றது.

**முல்லைத்தீவு - சமளங்குளம்**
இலங்கை சத்திய சாயி மத்திய சபையின் ஏற்பாட்டில் 17 இலட்சம் ரூபா மூலப்பொருட் செலவில் நிர்மாணிக்கப்பட்ட குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரத் தொகுதி முல்லைத்தீவு சமளங்குள கிராம மக்களின் பயன்பாட்டிற்காக 13.9.2019 திகதியன்று மக்களிடம் கையளிக்கப்பட்டது.

## தேசிய சேவைத் திட்டங்கள்

**புற்றுநோயாளர் காப்பகம்**
வைத்திய சேவையை நோக்காகக் கொண்டு 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப் புற்று நோயாளர் காப்பகம் மகரகமவிலிருந்து 20 கி.மீ தொலைவிலுள்ள ஹன்வல எனும் இடத்தில் அமைந்துள்ளது.

**சத்திய சாயி முதியோர் இல்லம்**
இந்த முதியோர் இல்ல கட்டிடம் 2017.04.30 திகதியன்று முதியோர் இல்லம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. மீகொட - கொழும்பில் இது அமைந்துள்ளது.

**சத்திய சாயி பாடசாலை**
சத்திய சாயி பாடசாலை யாழ்ப்பாணத்தில் மானிப்பாயில் சுவாமியின் ஆசியுடன் 2002 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு மிகவும் சிறப்பாக நடைபெற்று வருகின்றது. ஆண்டு 1 தொடக்கம் 11 வரை வகுப்புக்கள் உள்ளடக்கப்பட்டுள்ளது.

Sathya Sai International Organisation - Sri Lanka
info@ssiosrilanka.org
www.ssiosrilanka.org

**சர்வதேச பாடகர் குழு**

போலந்து நாட்டிலுள்ள சர்வதேச சத்திய சாயி நிறுவன மகளிருக்கு 2009 ஆம் ஆண்டு சுவாமியினுடைய சர்வதர்மக் கொள்கையைப் பரப்புவதற்கு ஒரு சர்வதேச பாடகர் குழு அமைக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தது. இரண்டு வருடங்களில் 6 ஐரோப்பிய நாட்டிலும் இந்தியாவிலிருந்தும் 45பேர் கொண்ட பாடகர் குழு உருவாகியது.

சுவாமி 04.07.1968 இல் கூறிய "இறைவனின் மகிமை பல மொழிகளில் பல ராகங்களில் பாடப்பட வேண்டும்" கூற்றிற்கு செயலுருவம் கொடுத்தார்கள். இக் குழு பல மொழிகளில் இறை மகிமையைப் பாடத் தொடங்கினார்கள்.

பாடகர்களும் குடும்ப அங்கத்தவர்களும் 126பேர் 2011ஆம் ஆண்டு பிரசாந்தி நிலையத்திற்கு வந்து 20ஆம் திகதி ஆகஸ்ட் மாதம் முதல் நிகழ்வை நடத்தினார்கள். பின்பு போலந்து நாட்டில் பல நகரங்களிலும் இந்தியாவில் மும்பாயிலுள்ள தர்ம க்ஷேஸ்திரத்திலும் பிருந்தாவனத்திலும் இசை நிகழ்வுகளை நடத்தினார்கள். பிரசாந்தி நிலையத்தில் 2013, 2015, 2017 ஆம் ஆண்டுகளில் மூன்று தடவைகள் நடத்தியுள்ளார்கள். இசையின் மையத் தத்துவம் சர்வமத ஒற்றுமையேயாகும். தொடக்கத்தில் கணேசப்பெருமானை வணங்கி இறுதியில் சாந்தி சொல்லி முடிப்பார்கள். இவர்களின் நிகழ்வுக்கு பல இடங்களில் அமோக வரவேற்பு கிடைத்துள்ளது. குடும்பங்களிடையே ஒற்றுமையையும் அன்பையும் வார்த்துள்ளது. தொடங்கிப் 10 ஆண்டுகளாகி விட்டன. சுவாமி எவ்வாறு தனது சர்வ மதக் கொள்கையை அன்பு என்ற வழிமூலம் பல தேசங்களில் பரப்பி வருகிறார் என்பதை இந் நிகழ்வு வெளிக்காட்டுகின்றது.

ஜெய் சாயிராம்

நன்றி ரேடியோசாயி
சத்திய சாயி சர்வதேச நிறுவனம்.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருபூர்ணிமா செய்தி 2019



Dr. நரேந்திரநாத் ரெட்டி
தலைவர், பிரசாந்தி சபை.

அன்புடனும் பயபக்தியுடனும் நன்றியுணர்வுடனும் எங்கும் நிறைந்த பேரன்பும் பிரியத்துக்கும் உரிய பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவின் தெய்வீக தாமரை மலர்ப் பாதங்களை வணங்குகிறேன். அன்புடைய சகோதர, சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் அன்புடன் சாயிராம்.

இப் புனித குருபூர்ணிமா தினம் ஆன்மீகவாதிகள் தம்மை தெய்வீகப் பாதைக்கு வழிநடத்திய குருவை வழிபாடு செய்யும் நாள். சத்திய சாயி பக்தர்களாகிய நாம் ஆசீர்வதிக்கப்பட்ட பாக்கிய சாலிகள். ஏனெனில் பகவான் ஸ்ரீ சத்திய சாயி பாபாவே எமக்கு குருவும் தெய்வமாகவும் கிடைக்கப்பெற்றதேயாகும்.

இப் புனிதமான வேளையில் எங்கள் வாழ்வை அவரிடம் பூரணமாக அர்ப்பணிப்பதன் மூலமும் அவருடைய குருபூர்ணிமா செய்தியை மீள ஞாபகப்படுத்துவதன் மூலமும் எமது அன்பு கலந்த நன்றியுணர்வை பகவானுக்கு தெரியப்படுத்துவோம்.

குருவானவர் இலக்கைக் காட்டுபவர் எனக் கூறியுள்ளார். ஜெகத் குருவாகவும் சர்வவியாபக குரவாக வும் இருக்கும் நம் சுவாமி. "குறி" என்பது இலக்கையும் அதன் நோக்கத்தையும் குறிக்கும் எமது வாழ்வின் இலக்கும் நோக்கமும் உள்ளுறையும் தெய்வீகத்தை உணர்ந்து கொள்வதனூடாக ஒரே தெய்வீகமே ஒவ்வொன்றிலும் எங்கும் எப்போதும் உள்ளது என்று தெரிந்து கொள்ளவேயாகும்.

ஒருவர் குறி அல்லது இலக்கை எவ்வாறு அடையலாம்? அதற்கும் சுவாமி எமக்கு ஒரு வழிகாட்டுகிறார்.

எங்கள் வாழ்வில் ஒரு ""குறி"" அதாவது **ஒருமுகப்படுத்தல் தேவை**. முதலாவதாக நாம் சுவாமி, அவரது போதனைகள், அவரது அவதார நோக்கம் என்பவற்றில் ஒருமுகப்படுதல் வேண்டும். சுவாமி மேல் மனஒருமுகப்படுதல் என்பது அவருடைய இனிய நாமத்தை ஜெபித்தல் அவருடைய தெய்வீக திருவுருவத்தை தியானிப்பது அவருடைய ஆனந்தம் தரும் லீலைகளில் திளைத்திருப்பது ஆகம்.

நாம் முழு நம்பிக்கையுடன் அவருடைய தெய்வீக கமல மலர்ப்பாதங்களைப் பற்றிப் பிடித்தால் இப் பிறப்பிலேயே நமது இலக்கை அடைய முடியும் என்று சுவாமி உத்தரவாதம் தருகிறார்.

மானச பஜரே குரு சரணம் என்று கூறிய சுவாமி போலி குரு, போலி இறைதூதர், போலி ஊடகங்கள் பற்றி எப்போதும் அவதானமாக இருக்கும்படி அறிவுறுத் துகிறார்.

சுவாமியுடன் நாம் வைத்திருக் கும் தொடர்பு இருதயத் திற்கும் இருதயத்திற்கும் இடையேயானது, நேரடியானது.

FAITH LIFT
MAY THE SOURCE BE MY FORCE
Zone 4A & 4B Young Adults Retreat 2019



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே அவருக்கும் எமக்கும் இடையேயான நேரடியான தொடர்பை எப்போதும் பேணிக் கொள்ள வேண்டும். இதுவே எமது முதலாவது இலக்கு ஆகும்.

**இரண்டாவது இலக்கு** எல்லா வேதங்களினதும் பிழிவாக இருக்கும் அவருடைய தெய்வீக போதனை களின் சாராம்சம் அன்பாகும்.

அன்பே மூலம், அன்பே பாதை, அன்பே இலக்கு என்று கூறுகிறார் சுவாமி.

ஆகவே நாம் தெய்வீக அன்பி லேயே வாழ்வோம்.

**மூன்றாவது இலக்கு** அவருடைய தெய்வீக நோக்கம் ஆகும்.

அவருடைய தெய்வீக நாமத்தை கொண்டிருக்கும் சத்திய சாயி நிறுவனத்தில் கல்வி நிறுவனத்தில் மருத்துவ நிறுவனத்தில் மனித நேய சேவா நிறுவனத்தில் முழு முயற்சி யுடன் பங்கு கொள்வோம். சுவாமியா லேயே ஆரம்பிக்கப் பட்டதும் போஸிக் கப்படுவதுமான இந்த நிறுவனங்கள் இன்று வரை அவராலேயே வழி நடத் தப்படுவதாகவும் ஆசீர்வதிக்கப் படுவதாகவும் இருக்கின்றன. இவ் அரிய சந்தர்ப்பத்தை நன்றாகப் பயன் படுத்தி நாம் இச் செயற்பாடுகளில் முழுமையாக பங்கு கொள்வோம்.

ஆகவே நாம் சுவாமியில் அவருடைய போதனைகளில் அவருடைய தெய்வீக நோக்கத்தில் குறியாக இருந்தவாறு அடுத்த படியாக "குரு" என்ற விடயத்திற்கு செல்லலாம். சுவாமி குறுகிறார், "கு" என்பது அறியாமையையும் "ரு" என்பது அகற்றுபவர் என்பதையும் குறிக்கும்.

அறியாமை என்றால் என்ன?

நானே உடல், மனம், புத்தி என்கின்ற அகங்காரமும் எனது என்கின்ற மமகாரமும் அறியாமை ஆகும்.

சுவாமி, அவர் போதனைகள், அவருடைய அவதார நோக்கம் என்பவற்றில் மனம் ஒருமுகப்பட்டால் அறியாமை அகலும். இதனால் அன்பொளியில், ஞானஒளியில் திளைத்திருக் கலாம்.

இவற்றை பயிற்சி செய்தால் சுவாமி குருவைப்பற்றி கூறிய இறுதி நிலைக்கு வரமுடியும்.

"கு" என்பது குணாதீத. அதாவது குணங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதாகும்.

"ரு" என்பது ரூபரஹிதா, அதாவது உருவங்களுக்கு அப்பாற்பட்டவர் என்பதாகும். இந்தக் கருத்தில் நாம் கவனம் செலுத்தினால் நாமம், ரூபம், குணங்கள், காலம், இடம், காரணங்களுக்கு அப்பாலே தெய்வீக அனுபவத்தைப் பெறலாம்.

இதனால் ஒவ்வொரு கலத்திலும், ஒவ்வொரு அணுவிலும், ஒவ்வொரு கணத்திலும், ஏன்?! எங்களிலும் தெய்வீகம் பரவி இருப்பதை உணர்ந்து கொள்ளலாம்.

இப்படியாக நாம் அன்பிலும் பரமானந்தத்திலும் வாழலாம்.

அஸதோமா ஸத் கமய
தமஸோமா ஜோதீர் கமய
ம்ருத்யோர்மா அம்ருதம் கமய

பொய்மையிலிருந்து உண்மைக்கும் இருளிலிருந்து ஒளிக்கும் இறப்பிலிருந்து இறவாமைக்கும் எம்மை இட்டுச் செல்லு மாறு சுவாமியை பிரார்த்திப்போம்.

ஜெய் சாயிராம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நயினாதீவில் புதிய சத்திய சாயி பஜனை மண்டபம் 12.9.2019 அன்று திறந்து வைக்கப்பட்டது.




வடமராட்சியில் பாலவிகாஷ் ஆன்மீக கல்வி விழிப்புணர்வு



முகாவில் பகுதியில் மேற்கொண்ட ஒன்றிணைந்த சேவைத்திட்டம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவு சாயி நிலையம் - வட பிராந்தியம்



முகப்புப் பகுதி



பிராா்த்தனை மண்டபம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org